
www.tamilarangam.net

13


# தேடல்



தமிழர் வகைதுறை வள நிலையம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




Publishers

Mangai Pathippagam
38 Thorncliff Park Dr #510,
Toronto, Ont, M4H 1J9,
Canada

Publishers:
KALAM VELIIYIEDU
3000, Victoria Park Ave., #438,
North York, Ont., Canada.

[illegible]




என்.கே.மகாலிங்கம்

களம் வெளியீடு.

www.tamilarangam.net

## தேடல் 13 பங்குனி 1994

தமிழர் வகைதுறைவள நிலைய வெளியீடு

இவ் இதழிலிருந்து தொடர்ச்சியாக மாதமொருமுறை தேடல் வெளிவரும். தேடலின் தொடர்ச்சியின்மை காரணமாக தேக்கத்திலிருந்த ஆக்கங்கள் இவ்விதழில் தொடர்கிறது. அடுத்துவரும் இதழ்கள் பல புதிய அம்சங்களை தாங்கி வெளிவரும். உங்களது ஆக்கங்களையும் ஆக்கபூர்வமான விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

-ஆர் குழு-

அட்டை ஓவியங்கள் - கரு

தொடர்புகளுக்கு

THEDAL
P.O.BOX NO 274
STATION 'F'
TORONTO,ONT
M4Y 2T7
CANADA

PUBLISHED BY
TAMIL RESOURCE CTR
566,PARLIAMENT ST
TORONTO,ONT
M4X 1P8
CANADA

## உள்ளே..

**தஸ்லிமா நஸ்ரீன்.** .................................... 3

எல்லோருக்கும் மரணம் ஒருநாள் நிச்சயம் என்ற நம்பிக்கையில் பயமுறுத்தலை சமாளித்து வருகிறேன். எனது உணர்வுகளை எழுதுவது எனது கடமை. எனக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி கவலைப்படவில்லை. எனது எழுத்துக்களின் மீதுதான் எனது நம்பிக்கை

**நிஜ தரிசனம் – விதுரன்** .................................... 7

இஸ்லாமில்லை இஸ்லாமொரு இஸ்லாம் படித்த முற்போக்கு விடயங்களை தனியொருத்தி விடுதலைக்காக நன்கு முறைப்படுத்தி வெளிக்கிறது முட்டாள்த்தனம் விகார நடவடிக்கை. ஏன் இயங்கியலுக்கே முரண். சமுதாயம் புரிந்துணர்வு உள்ளதாக மாறாதவரை யாரும் தனிமனிதர் பலிக்கடாவாகி சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றது நடைமுறையில் சாத்தியமில்லை.

**மெக்சிக்கோவில் சபடிஸ்டா தேசிய விடுதலைப்படை** .................... 14

மெக்சிக்கோ அரசாங்கம் வர்த்தக ரீதியிலான தடைகளை தளர்த்தி தங்களது பொருளாதாரத்தை உலகளாவிய பொருளாதாரமாக்கியது. அரச நிறுவனங்களை தனியார் மயமாக்கியதோடு பல்துறை பண்ணைகள் முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வேலைகளை இழந்தனர்

**விடயனின் எழுதுகோல்** .................................... 17

புலிகளின் தலைமை அமைப்பு முறையானது இவ்வகையான கொலைகளுக்கு நேரடி தலைமையை காப்பாற்ற வேண்டிய ஒழுங்கிலேயே உள்ளது தலைமையா? பிரதேசம் என்பது தலைமையை கொலை செய்வதிலும் சாத்தியமாகும் இனி தலைமையை தக்கவைக்கவே மாத்திரமா கொலைப்படுவார்களில் அதற்கு மாத்திரமா உடந்தையாளர்.

**கருஅழிப்பு உயிர்க் கொலையே – சமர் ஆர் குழு.** .................... 19

கர்ப்பமடைந்த தாயின் வயிற்றிலிருக்கும் சிசுவைக் கொல்லுதல் எந்த வகையிலும் அப்பால் கொலைக்குற்றமாகிறது என்று அறிவுக்குகந்த ஒரு வாதத்தை வைத்திட இவர்கள் எவ்வளவோ மனிதர்களை தீட்டிப் பயனில்லை. மரணம் உண்டாகும் தருணத்தை முழு உறுதியுடன் நிர்ணயிப்பதும் இதே போல முடியாத காரியமே. ஏனெனில் மரணம் திடீரென உடனடியாக நடைபெறும் ஒரு நேர நிகழ்ச்சியல்ல. நீடித்தவொரு நிகழ்ச்சிப் போக்கு என்பதை உயிரியல் நிரூபித்திருக்கிறது

**கேந்திர கண்ணிகள் மீது குறிவைப்பு – மாறன்** .................... 23

வெளிவிவகாரத்தில் கோட்பாடு விதானத்தின் எந்தமட்டத்திலும் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான முடிவுகளை வலியுறுத்துகின்றதே ஒழிய தனிநபர் அதிகாரங்களையல்ல. தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவுமான உரிமையை மக்களுக்கு வழங்குகின்றதேயொழிய தனிநபர் அதிகாரத்தை வலியுறுத்தவுமில்லை. வழங்கவுமில்லை.

**நாம் வன்முறையை வளர்ப்பவர்களல்ல — A.R.A** .............. 28

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வெள்ளையினத்தவர் தாம் அனுபவித்ததாக எண்ணிய இவ் வசதிகளை இன்றைய உலகப்பொருளாதார மாற்றத்தின் விளைவால் இழக்க நேரிடும் போது வளர்முக நாடுகளின் மக்களை எதிரிகளாக கருதுகின்றனர். இவையே குடிவரவுச் சட்டங்களில் ஏற்பட்ட இறுக்கமான மாற்றங்கள். நிறவாதம் அதிகரிப்பு என்பவற்றின் அடிப்படை காரணங்களாகும்

**நிறவாதமும். தேசியின் நிறம் எங்கும் பற்றி! – நேசன்.** .............. 30

சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டத்தில் மனிதர்களையும், ஸ்தாபனங்களையும் ஸ்தாபனப்படுத்துவதும். எதிரிகளின் சரியான இலக்குகளையும் அவர்களுக்கெதிரான எழுச்சிப் போராட்டங்களை முன்வைப்பதும் எமது சக்தியையும். ஆற்றலையும் ஒழுங்குபடுத்தவும் - முனைப்பு படுத்தவும் உதவும். ஒரு இனவாதத்தை இன்னுமொரு இனவாதத்தால் அழிக்கமுடியாது.

**கவிதைகள்**

அமுதன் .
இளைய அப்துல்லாஹ்
பா.அ.ஜயகரன்
சுதன்
சுகந்தன்
வாசு
நிக்சன்
சுகுமார்
பாமதி
அ.சி.பரிதி

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தஸ்ரிமா நஸ்ரீன்



## மரணத்தின் தாக்குதலை எதிர்நோக்கும் எழுத்தாளர்

பிள்ளைப்பேற்று மருத்துவராய் இருந்து கவிஞராகவும், எழுத்தாளராகவும் மாறியுள்ள தஸ்ரிமா நஸ்ரீன் அவர்கள் சல்மன் ருஸ்டியை ஆதரிப்பவர். பெண்களின் உரிமைகளிற்காய் போராடுபவர். பெண்களின் துயரங்கள் பற்றிய அவரது கருத்துக்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரவியுள்ளன. "வெட்கக்கேடு" (LAJJA) என்ற வங்காள மொழியில் எழுதிய நாவல் சொந்த நாடான வங்காள தேசத்தில் சிறுபான்மை இந்துக்களை பெரும்பான்மை முஸ்லிம்கள் தாக்கியது பற்றிய நாவலாகும். இந்நூல் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையில் மோதலை தூண்டும் வகையில் அமைந்துள்ளதாக கூறி வங்காளதேச அரசினால் தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. இந்நூல் 60.000 பிரதிகளுக்கு மேல் வங்காளதேசத்தில் விற்பனையாகியுள்ளது. இந்தியாவிலும் இவரது நாவல்களும் ஏனைய எழுத்துக்களும் விற்பனையில் முன்னணியில் திகழ்கின்றது. இவர் டாக்கா வைத்திய சாலையில் வேலைசெய்து கொண்டிருந்த போது "வெட்கக்கேடு" என்ற நாவலை எழுதினார். மூன்று நாவல்களை எழுதிய இவர் தமது கட்டுரைகளையும், கவிதைகளையும் தொகுத்து வெளியிட்டுள்ளார். இவரது எழுத்துக்களுக்காக முஸ்லிம் அடிப்படை வாதக் குழுவான "The Saheba Sainaik Parishad" மரண தண்டனை விதித்துள்ளது. வங்காள தேச அரசாங்கம் இவரது கடவுச்சீட்டை பறிமுதல் செய்ததுடன் இவரது சமீபத்திய நாவல் ஒன்றையும் தடை செய்துள்ளது. இவரது முதலாவது கவிதை மாணவர் சஞ்சிகை ஒன்றில் பிரசுரமாகியது. 80 பதுகளில் கடைசிகளில் 'மைமன் சிங்' நகரத்தில் குடும்ப கட்டுப்பாட்டு நிலையமொன்றில் வேலை செய்தார். தற்போது டாக்காவின் சந்தடி நிறைந்த நகர சூழலில் அமைந்துள்ள தொடர் மாடி வீடொன்றில் தனது சகோதரிகளுடன் வசித்து வருகின்றார். இன்று இவர் இவரது ஆதரவாளர்களால் மிகவும் மதிக்கப்படும் எழுத்தாளராக உள்ளார். இவர் வெளியே உலாவ செல்வது மிகவும் அருமையாகவே உள்ளது.

கேள்வி — மரண தண்டனை பற்றிய அச்சுறுத்தல் எவ்வாறு உங்களது நாளாந்த வாழ்க்கையை பாதித்துள்ளது?

நஸ்ரின் — இது என்னை வெகுவாகப் பாதித்துள்ளது. எனக்கு ஏதாவது நடந்துவிடும் என்ற அச்சத்தில் நான் முன்பு போல நடமாடுவதில்லை. வீட்டில்கூட யாராவது ஒளிந்திருந்து ஏதாவது செய்து விடுவார்கள் என்று அஞ்சுகிறேன். எல்லோருக்கும் மரணம் ஓர்நாள் நிச்சயம் என்ற நம்பிக்கையில் பயமுறுத்தலை சமாளித்து வருகிறேன். எனது உணர்வுகளை எழுதுவது எனது கடமை. எனக்கு என்ன நடக்கும் என்பதைப்பற்றி கவலையில்லை. எனது எழுத்துக்களின் மீதுதான் எனது நம்பிக்கை.

கேள்வி — "வெட்கக்கேடு" நாவலை பிரசுரிப்பதற்கு முன்னர் இது போன்ற வேறு பிரச்சனைகளை சந்தித்ததுண்டா?

நஸ்ரின் — இந்த நாவலை வெளியிட்டதன் பின்னர்தான் முஸ்லிம் அடிப்படைவாத குழுவிடமிருந்து பெரிய தாக்குதலை எதிர்நோக்கினேன். ஆரம்பத்திலிருந்தே பிரசுரகர்த்தாக்கள் எனது எழுத்துக்களை தணிக்கை செய்து வந்துள்ளனர். நான் சொல்ல நினைப்பதை பிரசுரிப்பதற்கு தயக்கம் காட்டினர். பெப்ரவரி மாதம் நடைபெறவிருக்கும் புத்தகக் கண்காட்சிக்கு மூன்று நூல்களை எழுதினேன். ஒன்றில் இஸ்லாமிய வரலாற்று பெண்கள் இருவரைப்பற்றி குறிப்பிடுகிறேன். இந்நூலை வெளியிட முன்வந்துள்ள பிரசுரகர்த்தா இக்குறிப்பிட்ட பகுதியை பிரசுரிக்க மறுக்கின்றார். இந்நூல் வெளிவருமானால் கலகம் ஏற்பட்டு தனது காரியாலயம் தாக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றார்.

கேள்வி — பெரும்பான்மையான வங்காளதேச புத்திஜீவிகள் முஸ்லிம் அடிப்படை வாதிகளிடமிருந்து மிரட்டல் கிடைக்கும் என்ற காரணத்தினால் தங்களை தாங்களே தணிக்கை செய்கிறார்கள் என்று கருதுகிறீர்களா?

நஸ்ரின் — ஆம்! பெரும்பாலான புத்திஜீவிகள் மிக அவதானமாகவே தமது கருத்துக்களை வெளியிடுகிறார்கள். புத்தகங்கள் வெளியிட்டதன் பின்னர் ஏற்படப்போகும் விளைவுகளையிட்டு யோசிக்கிறார்கள். அனேகமானோர் நேரடியாக கருத்துக்களை தெரிவிப்பதில்லை. மறைமுகமான பாணையில் எழுதி சமூகத்தில் ஏற்படும் நடைமுறை பிரச்சனைகளை தவிர்த்து கொள்கிறார்கள். நான் நினைக்கிறேன் நான் முழுக்க முழுக்க அல்லாவிட்டாலும் ஓரளவிற்காவது நேரடியாக எழுதுகிறேன். அதுகூட ஆபத்தாக உள்ளது. எனது நண்பர்களும் உறவினர்களும் நேரடியாக எழுதாது ஆபத்தை தவிர்த்துக் கொள்ளும்படி புத்திமதி கூறுகிறார்கள். ஆனால் இன்றைய காலகட்டத்தில் அடிப்படை வாதிகள் முற்போக்கு கருத்துள்ளவர்களை நேரடியாகவே தாக்குகிறார்கள். தாராளவாத புத்திஜீவிகள்கூட நேரடியாக பதில் சொல்ல வேண்டியுள்ளது. ஆனால் இவர்களது அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டிய காலம் இதுதான்.

கேள்வி — உங்களது கடைசி நூல் ஏன் இவ்வளவு சர்ச்சைகளை உருவாக்கியுள்ளது.

நஸ்ரின் — 'வெட்கக்கேடு' நாவல் தடை செய்யப்படுவதற்கு முன்னர் அறுபதாயிரம் பிரதிகள் விற்பனை ஆகிவிட்டது. இது மிகவும் ஜனரஞ்சகமான புத்தகமாக இருந்தது. இந்நாவில் 1987ம் ஆண்டிலிருந்து எவ்வாறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வங்காள தேச சிறுபான்மையினர் ஒடுக்கப்பட்டனர் என்பதையும், எவ்வாறு அரசாங்கம் பாகுபாட்டினை தீவிரப்படுத்தியது என்பதனையும் நான் வெளிக் கொணர்ந்துள்ளேன். வங்காளதேச மக்கள் மதசார்பு அற்றவர்கள். அரசாங்கத்தில் உள்ளவர்கள் சுயநல நோக்கத்திற்காக மதத்தை பயன்படுத்தி வருகின்றார்கள். அடிப்படை வாதிகள் மதசார்பின்மையை ஒளித்துகட்ட முனைந்துள்ளனர். இந்நூலில் அதிக தரவுகளை பயன்படுத்தியுள்ளேன். இலக்கியத்துடன் தகவல்களையும் உள்ளடக்கியே இந்நூலை வெளியிட்டுள்ளேன். சுதந்திரப் போராட்டத்தின் பின்னர் வந்த அரசாங்கங்கள் 'இஸ்லாமை' அரசமதமாக அரசியல் யாப்பில் அறிமுகப்படுத்தின. இஸ்லாம் பரப்பாப்படும் முறையைவிட்டு இந்நூலில் நான் கண்டனம் தெரிவித்துள்ளேன். குற்றவாளிகளான அதிகாரத்திலுள்ளவர்கள் இதனை தேவையில்லாத விடயத்தை ஆராய்வதாக சர்ச்சையை கிளப்பிவிட்டுள்ளார்கள். 1971 இல் வங்காள தேச தேசியத்திற்காகவும், ஒரு மதசார்பற்ற அரசிற்காகவும் போராடினோம். ஆனால் உருவாகிய அரசாங்கங்கள் இந்த அடிப்படை கோட்பாட்டை அழித்தே வந்துள்ளனர்.

கேள்வி: சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது வங்காள தேச இஸ்லாம் தீவிரம் மிகவும் குறைந்தது. ஆனால் இஸ்லாமிய அடிப்படைவாதம் இப்போது அதிகரித்து வருகிறது. பெண்கள் மீதான நெருக்குதல்களும் அதிகரித்து வருகிறது. இதை எவ்வாறு விளக்குகின்றீர்கள்.

நஸ்ரின் — ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது வங்காள தேச இஸ்லாம் வேறுபட்டதுதான். பெண்களின் மோசமான நிலமைகள் மதத்தினால் மட்டுமல்லாது பொருளாதாரவறுமையினாலும் ஏற்படுகின்றது. வறுமை பெண்களை வீட்டை விட்டு வெளியேவர அனுமதிப்பதில்லை. ஏனைய

அபிவிருத்தியடைந்த நாடுகளை போல வங்காள தேசத்திலும், நவீனமயப்படுத்தலில் பிற்போக்கு தனத்திற்கும்.

சமூகத்தடைகளிற்கும் எதிரான போக்கு காணப்படுகிறது. இந்த வளர்ச்சிப் போக்கினை, பெண்களின் முன்னேற்றத்தினை தடுப்பதற்காக அடிப்படைவாதிகள் தீவிரமாக செயற்பட்டு வருகின்றனர். பொருளாதார நிலமைகளின் காரணமாகவே இதுவரை காலமும் பின்தங்கியிருந்தோம். ஆனால் இப்போது மதம்தான் பிரதான தடை...

கேள்வி — பெண்களின் நிலமைகள் தொடர்பாக உங்களுக்கு எவ்வாறு அக்கறை ஏற்பட்டது? நீங்கள் மகப்பேறு மருத்துவராக இருந்த காரணத்தினாலா?

நஸ்ரின் — சிறுவயதிலிருந்தே பெண்கள் வாழ்க்கை நிலமைகள் தொடர்பாக எனக்கு ஆர்வம் ஏற்பட்டது. பெண்களது மோசமான நிலமைகளை எனது குடும்பத்திலேயே நான் காணக்கூடியதாக இருந்தது. கல்வி போன்ற விடயங்களில் பெண்களைவிட ஆண்களிற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டது. பெண்கள்



பெனாசீர்

பாடசாலை செல்வது அவசியமில்லை என்றே ஒவ்வொருவரும் கருதுகிறார்கள். குர்ஆனை ஓதுவதற்கும், தமது கணவருக்கு கடிதம் எழுதுவதற்கும் சிறிது படித்தால் போதுமானது என்ற கருதுகிறார்கள். நல்ல இடத்தில் திருமணம் செய்வதற்கு மாத்திரம்தான் பெண்களிற்கு கல்வி தேவை என்று கருதுகிறார்கள். பெண்களின் வாழ்க்கையின் குறிக்கோளே திருமணம் என்பதுதான் அர்த்தம்.
எனது அதிர்ஸ்டம் நான் செல்வம்மிக்க குடும்பத்திலிருந்து வந்ததுதான். எனவே அவர்கள் என்னை பாடசாலைக்கு அனுப்பினார்கள். எனது அயலவர்களோ, உறவினர்களோ பெண்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவில்லை. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவம் இல்லை என்பதை இங்குதான் நான் முதலில் கண்டேன். நான் பாடசாலையில் இருந்த காலத்திலேயே இதுபற்றிமுதன் முதலில் எழுத தொடங்கினேன். நான் வைத்தியரான பின்பு பெண் ஒடுக்குமுறை பற்றி மேலும் அறியக்கூடியதாய் இருந்தது. பெண் நோயாளிகளின் நிலமைகளை பார்த்து நான் அதிர்ச்சியடைந்தேன். தாம் விரும்பாத போதும் தம் கணவர்மாரால் வற்புறுத்தப்பட்டு கர்ப்பம் தரித்த பெண் நோயாளிகளே என்னிடம் பெரும்பாலும் வந்தார்கள். தமது கணவர்மாராலும் சகோதரர்களாலும் தாக்கப்பட்டு தமது முகங்களை சிதைத்துக்கொண்ட பெண்களை நான் பார்த்தேன். கருச்சிதைவு சத்திரசிகிச்சைக்கு பின் பராமரிக்கப்படாமல் பாதிக்கப்பட்ட பெண்களை நான் பார்த்தேன்.

கேள்வி — வங்காளதேசில் குடும்பக்கட்டுப்பாடு எவ்வளவுதூரம் வெற்றியளித்துள்ளது.

நஸ்ரின் — குடும்ப கட்டுப்பாடு சரியாக வெற்றியளிக்கவில்லை என்பது உண்மையல்ல. குடும்பங்களில் முன்பிலும் பார்க்க குறைந்த அளவு குழந்தைகளே உள்ளனர். எனவே குடும்பக்கட்டுப்பாடு சில அம்சங்களில் வேலை செய்துள்ளது. பெண்பிள்ளைகளிலும் ஆண்பிள்ளைகள்தான் மதிப்பிற்குரியவர்கள் என்று சமூகம் நினைக்கும்வரை மேலும் மேலும் பிள்ளைகள் பெறுவதற்கான நிலமைகள் தொடர்ந்து காணப்படும். குடும்பக்கட்டுப்பாடு வெற்றி பெறுவதற்கு முதலில் மக்களுக்கு அது பற்றி அறிவூட்டப்பட வேண்டும். மேலும் குடும்ப கட்டுப்பாட்டில் பெண்கள் மாத்திரமல்ல ஆண்களும் கருத்தடை செய்து கொள்வதில் பங்கெடுக்க வேண்டும். ஒரு நோயாளியாக உள்ள பெண்ணின் கணவன் கருத்தடைச்சாதனத்தை பாவிக்கமறுக்கும் போது பெண் கருத்தடை வில்லைகளை பாவிக்க நிர்ப்பந்திக்கப்பட்டு மேலும் அப்பெண்ணின் உடல்நிலை மோசமடைகின்றது. இறுதியாக "எல்லா விடையங்களையும் அல்லாவே தீர்மானிக்கலாம்" என்று கூறும் மதவாதிகள் குடும்பக்கட்டுப்பாட்டிற்கு பிரதான தடையாகவே உள்ளார்கள்.

கேள்வி — கருச்சிதைவு பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

நஸ்ரின் — வங்காள தேசத்தில் சட்டப்படி கருச்சிதைவு சட்டவிரோதமாகும். கரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உருவாகி மூன்று மாதத்திற்கிடையில் குடும்பக்கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் கருச்சிதைவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. நகரங்களிலும் கிராமங்களிலும் மூன்று மாதத்திற்கு மேல் வளர்ச்சியடைந்த கருவை அழிக்கும் சம்பவங்கள் நிறைய காணப்படுகிறது. மக்கள் குறிப்பிட்ட மரம் ஒன்றின் வேரை இதற்காக பாவிக்கின்றார்கள். இதனை பாவிக்கும் போது விஷம் உடம்பில் ஏறி மரணம் பல சந்தர்ப்பங்களில் நிகழ்கின்றது. இதனைவிட கருச்சிதைவு செய்து பணம் சம்பாதிக்கும் போலி மருத்துவர்கள் நிறைய காணப்படுகின்றார்கள். இதனால்தான் உலகின் எல்லா பகுதியிலும் கருச்சிதைவு இருக்க வேண்டும் என்ற கருத்தினை ஆதரிக்கின்றேன்.

கேள்வி— நீங்கள் வைத்தியராக வேலை செய்யும் போது பாலியல்வன்முறை சம்பவங்கள் பற்றி அறிந்த அனுபவங்கள் உண்டா?

தஸ்ரின்— நான் நிறையவே வித்தியாசமான பாலியல் வன்முறை சம்பவங்களை பார்த்திருக்கிறேன். வீட்டிலேயே கணவர்மாரால் நிறையவே பெண்கள் கற்பழிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் பெண்குறிகள் சிதைக்கப்பட்ட நிலையில் வந்திருந்தனர். இப்பெண்களுக்கு வைத்தியம் செய்து அந்த அபலைப்பெண்களை அதே கணவர்மாரிடம் அனுப்ப வேண்டியிருந்தது. குடும்பக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாலேயே பாலியல் "வன்முறைக்குட்படுத்தப்பட்ட பெண்களை நான் பார்த்தேன். பாலியல் வன்முறை குழந்தைகளை கூட விட்டுவைக்கவில்லை. 7. 8 வயது சிறுமிகள்கூட. பாலியல் வன்முறைக்கு உள்ளாகி என்னிடம் வந்தார்கள்.

கேள்வி— இக்குற்றவாளிகள் நீதிமன்றங்களினால் தண்டனைக்கு உட்படுத்தபடுவதுண்டா?

தஸ்ரின் பெண்பிள்ளைகளின் வாழ்க்கையில் திருமணமே முக்கியமான விடயமாக வங்காளதேசத்தில் உள்ளது ஒரு பெண்பிள்ளை கற்பழிக்க பட்டால் அதனை பெற்றோர் மறைக்கவே முற்படுகிறார்கள். ஏனெனில் அப்பெண்ணின் திருமணம் இதனால் தடைப்படலாம் என்பதால். இவ்வாறான சமூகத் தளைகள் குற்றவாளிகளை தொடர்ந்தும் ஊக்குவித்து வருகிறது.

கேள்வி— கவிஞரான உங்களது கணவர் உங்களை அடித்ததாக நீங்கள் ஒத்துக்கொண்டது எனக்கு ஆச்சரியத்தை அளித்தது. மனைவிமாரை அடிக்கும் வழக்கம் சமூகத்தின் கீழ் மட்டத்தில் மாத்திரமல்ல மேல் மட்டத்திலும் காணப்படுகிறது என்று கூறுகின்றீர்களா?

தஸ்ரின்— சமூகத்தின் எல்லா வர்க்கங்களிலும் மனைவிமாரை அடிப்பது பிழையான விடயமாகக்கருதப்படுவதில்லை. மேல் தட்டு வர்க்கங்களில் திருமணம் என்பது நவீன முறையிலான அடிமைத்தனத்தையே கருதுகின்றது. மனைவி என்பவர் நன்றாக உடுக்கலாம். நன்றாக சாப்பிடலாம். சாப்பாட்டுமேசையில்



பேகம் காலித்

ஒன்றாக இருக்கலாம். ஆனால் 'பெண்கள் அடிமை' என்ற மனப்பான்மை காணப்படுகின்றது. உங்களது மனைவியை அடிமையாக நடத்த இஸ்லாம் சட்டங்கள் உரிமைகளை வழங்குகிறது. 'உனது மனைவி உடன்படியாக பதில்கூறாவிட்டால் அவளை அடிப்பதற்கு உனக்கு உரிமையுண்டு' என்று இஸ்லாம் சட்டம் கூறுகிறது ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள உறவு வெறும் நட்பல்ல. அவன்உனது பாதுகாவலன் என்றும் கூறுகிறது.

கேள்வி— வங்காள தேசத்தில் திருமணமாகாமல் தனியே வசிப்பது சிறந்தது என்று நீங்கள் கூறுகின்றீர்கள். இதற்கு உங்கள் கடந்தகால திருமணவாழ்க்கை அநுபவங்கள் மிகவும் சோகமானதா?

தஸ்ரின் எனது திருமண அநுபவங்கள் சந்தோசமாக இல்லை என்பது உண்மைதான். ஆனால் என்னை சுற்றியுள்ள பெண்களின் திருமண அநுபவங்கள் சந்தோசம் நிறைந்ததாக இல்லை. எனது கருத்துக்கள் எனது சொந்த அநுபவம் மாத்திரம் மட்டுமன்றி மற்றவர்களதும்தான். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமத்துவமற்ற உரிமைகள் காணப்படுகின்ற சமூகத்தில் ஆணும் பெண்ணும் சந்தோசமாக ஒன்றுகூடி வாழ்தல் என்பது கடினம். தமது சொந்த சாதனைகளை செய்ய விரும்பும் பெண்களுக்கு குறிப்பாக இந்தநிலைமை ஏற்படுகின்றது. சந்தோசமாக வாழ்கின்றோம் என்று கூறிக்கொள்ளும் பெண்கள் தமது உண்மை வாழ்க்கை நிலையினை வெளியில் சொல்வதில்லை.

கேள்வி— இந்தியாவிலிருந்து பிரிந்த இரண்டு நாடுகளான பாகிஸ்தானிலும் வங்காள தேசத்திலும் இரண்டு பெண்களே தலைவர்களாக உள்ளார்கள். பெனாசிர் பூட்டோ பாகிஸ்தானிலும். கலிடா வங்காளதேசத்திலும் உள்ளார்கள். இதுபற்றி என்ன சொல்கிறீர்கள்.

தஸ்ரின்— இருவரும் தமது திறமையினால் பிரதமர்களாக வரவில்லை. அவர்களது குடும்ப உரிமை காரணமாகவே ஆட்சிக்கு வந்துள்ளார்கள். ஒருவர் தமது தந்தையார் தூக்கிலிடப்பட்டமையால் பதவிக்கு வந்தவர். மற்றவர் தமது கணவர் கொல்லப்பட்டமையால் பதவிக்கு வந்தார். ஆண் ஆட்சியாளர்கள் என்ன செய்தார்களோ அதைத்தான் இவர்களும் செய்கிறார்கள் பாகிஸ்தானிலோ வங்காள தேசத்திலோ பெண்கள் பிரதமராக இருப்பதால் பெண்கள் விசேட உரிமைகள் பெற்றுவிட்டதாக நான் நினைக்கவில்லை. அதே நேரத்தில் பெண்களின் நிலைமையை கொஞ்சமாவது சீர்செய்ய 'பெனாசிர்' பாகிஸ்தானில் முயற்சிக்கிறார். ஆனால் வங்காளதேசத்தில் பெண்களின் நிலைமையை முன்னேற்ற பிரதமர் எதுவுமே செய்யவில்லை. பெண்களின் நிலைமைபற்றி மௌனமாக இருக்கின்றார்

கேள்வி— வங்காள தேசத்தில் பெண்களை பாதிக்கின்ற சட்டங்கள் எவை?

தஸ்ரின் பெண்களை பாதிக்கின்ற ஏராளமான சட்டங்கள் இருக்கின்றன. சில குடும்ப சட்டங்களும் ஏனையவை சொத்து சம்பந்தப்பட்டவையுமாகும். ஆனால் இவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எல்லாம் மதத்தின் அடிப்படையை கொண்டவை. உதாரணமாக வாரிசுரிமை விடயங்களில் காணலாம்.
பெண்பிள்ளைகளைவிட ஆண் பிள்ளைகளையே கூடுதலாக பெற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். குடும்ப விடயங்களில் விவாகரத்து ஏற்படும்போது 7வயதிற்கு மேற்பட்ட பிள்ளைகளை பராமரிக்கும் பொறுப்பு ஆண்களுக்கே கொடுக்கப்படுகிறது. திருமண சட்டங்களை பொறுத்தவரையில் பொதுவாக பெண்கள் தமது கணவரை விவாகரத்து செய்யஅனுமதிப்பதில்லை.

கேள்வி - பெண்களின் நிலைமையை முன்னேற்ற எடுக்கப்பட வேண்டிய அரசியல் தீர்மானங்கள் என்ன?

நஸ்ரின் மதத்தை அடிப்படையாகக் ஆனால் ஆண்கள் விரும்பிய பொழுது விவாகரத்து செய்துகொள்ளலாம். கொண்ட சமத்துவமற்ற சட்டங்களை ஒழிக்க வேண்டும். ஆணும் பெண்ணும் சமமென்று அரசியலமைப்பில் கூறப்பட்டு அமுல்படுத்தப்படாமலிருக்கும் அடிப்படை உரிமையை நாம் பின்பற்றவேண்டும். பெண்களிற்கான கல்வி முக்கியத்துவப்படுத்தபட வேண்டும். அரச பெண்களிற்கான வேலை வாய்ப்பினை உருவாக்க வேண்டும். இதனால் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேவர முடியும். பெண்விடுதலைக்கு பொருளாதார சுதந்திரம் அடிப்படையானது.

கேள்வி - உங்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்ட போது அரசாங்கம் உங்களை ஆதரித்ததா?


நஸ்ரின் அரசாங்கம் எந்தவித உதவியும் செய்யவில்லை. எனது வீட்டை பாதுகாக்க இரு பொலிஸாரை தந்ததே அவர்கள்செய்த உதவி. அதுகூட நான் நீதிமன்றம் சென்றதாலும் எனக்கிருந்த மேலைத்தேய ஆதரவினாலும்தான் கிடைத்தது. என்னை கொல்ல போவதாக கூறியவர்கள் மீது அரசாங்கம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்தோடு நான் வெளிநாடு செல்வதை தடை செய்வதற்காக கடந்த ஒரு வருட காலமாக எனது கடவுச்சீட்டினை பறிமுதல் செய்து வைத்திருந்தது.

**(இவ் நேர்காணல் அண்மையில் Hindu பத்திரிகையில் வெளியாகியது ஆங்கில மூலம் தமிழிற்கு**

**திரு மகேஸ்**

---

# காதலிக்கு



அன்பே !
உன் கலங்கிய விழிகளைத்
துடைப்பதற்கு என்னிடம்
துப்பாக்கியில்லை.
என்
பிணத்தின் துகள்கள்
உனக்குக் கிடைக்கும் போது
தேசத்தின் சரித்திரமெழுத
நீ ஆரம்பி.

தேடிய சுதந்திரத்தை
அழுகிய நிலையிலிருந்தாவது
நீ தோண்டி எடு!
என் துப்பாக்கியை
நீ சும!
புதைந்த சடலங்களின்
உயில்களை எடுத்துவந்து
மிஞ்சிய தியாகிகளுக்காய்
பங்கு வை!

நான் போகும் வழியில்
முட்களை அகற்றிவிட்டு.
எங்கள் தாய் மண்ணையும்
சேர்த்து மீளுவதற்கு
என் இறப்பிற்கு
காணிக்கையாக. . .
நீயும் இற!
போராடி
இப்பொழுது நான்
போவது
போருக்கு —
இறப்பிற்கு —

**இளைய அப்துல்லாஹ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முகம் இழந்த தேசம்



கிழிந்து போன பழைய சேலையாய்
எனது தேசம் விழுந்து கிடக்கின்றது.
பல தடவை சலவை செய்யப்பட்ட எனது மக்கள்
புழுக்கள் போல் ஊர்ந்து திரிகின்றனர்.
ஒரு வேளை உணவே கனவாகி. . . .

இளைய தலைமுறை தாய்நாட்டின் சோகங்களை
நெஞ்சில் சுமந்து பலியாடுகளாய்
வேள்விக்குச் சென்றனர்
வேள்விகள் முற்றுப்பெறாமல்
விட்டு வளவிற்குள்ளும்
சயனைட் சமாதிகள்.

கற்பழிக்கப்பட்ட எனது தேசமே!
குப்புற விழுந்து கிடந்து அழுகின்றாயே
பொலிஸ் நிலையத்திற்கும் பயிற்சி முகாங்களுக்கும்
இடையில் தாய்மை தள்ளாடியது
சேலைத்தலைப்பால் அழுகை துடைத்து
தேய்ந்தே போனது.

மரணத்தின் பின்பு பதவி வழங்கும்
வராது வந்த மாமணிகள்
சகோதரிகளின் உரிமைக்கு மட்டும்
மின் கம்பத்தை வழங்கியதேனோ?
ஆறுதல். ஆறுதல். ஆறுதல். . . ஐயோ!

சேதம் செய்யப்பட்ட எனது தேசமே!
அனாதையாய் நிற்கிறாயே !


—பாமதி—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை — விதுரன்



# நிஜ தரிசனம்

முதலில், கல்யாணி அக்கா போன் பண்ணிய போது உபத்திரவமாகத்தான் உணர்ந்தேன். மேலும் விபரம் சொன்னபோது கொஞ்சம் ஆர்வம். ஆனாலும் வேண்டா வெறுப்பாக ஒத்துக்கொண்டேன்.

ஏனோ மனம் துள்ளிக்குதித்தது. கட்டுப்படுத்த முடியவில்லை. ரூம்மேற்றுக்கு தெரியாமல் இடையிடையே சிரித்தேன். கண்ணாடி முன் போய்நின்று முகத்தையும், தலையையும் மாறி மாறி . . . கண்ணாடி களைத்துப் போனது. புதிய சேட், புதிய ஜீன்ஸ் புதிய புதிய எல்லாம் தயாராயின. ஆச்சரியப்பட்ட நண்பர்களுக்கு அவசரமாய் மொன்றியல் போக வேண்டும் என்றேன். ஏன்? ஏன்? ஏதோ காரணங்கள் சொன்னேன்.

கார் "றென்ற்" பண்ணியவுடன் கல்யாணியக்காவிற்கு போனில் குசுகுசுத்தேன். அவசரப்படுத்தினள். "எங்களை நம்பி அந்தப்பிள்ளை பஸ் ஏறியிட்டுது, நீர் போகப்பிந்தினால்" என்று இழுத்தாள். நியூயோர்க்கிலிருந்து பஸ் "Buffalo "விற்கு வந்து சேர்வதற்கு
இன்னும் ஐந்து மணி நேரமிருந்தது. நான் இங்கிருந்து பவ்வலோ போக இரண்டு மணித்தியாலம் போதுமென்றேன், அவ விட்டபாடில்லை. "சொல்லி வேலையில்லை"

அந்த "girl " இன் படம் கல்யாணி அக்காவின் பேப்பர், புத்தகம் எடுத்துக்கொண்டு புறப்பட்டேன். முடிந்தால் கனடாவிற்குள் அழைத்து வருவது. இல்லையென்றால் "Peace Bridge " இல் அகதிநிலைகோரி "date "எடுத்த பின் "church " இல் தங்கும் வரை நின்று உதவி செய்வது. என்று முடிவு செய்திருந்தோம்.

கைவிடப்பட்ட நகரம் போல "Buffalo " அமைதியாக இருந்தது. பஸ் ரேமினலின் ஒரு மூலையில் அவளுக்காக காத்திருந்தேன். பஸ் வர இன்னும் இரண்டு மணித்தியாலம் இருப்பதாக தகவல் பெண்மணி சொல்லியிருந்தாள்.

பஸ் வந்து இறுதிப்பெருமூச்சு விட்டு குலுங்கி நின்றது. சனங்கள் இறங்கிக் கொண்டிருந்தனர். வெள்ளை . . வெள்ளை, . கறுவல் . . . சப்பட்டை ஆ அந்தா எங்கடை ஒண்டு . . இரண்டு . மை கோட் இருட்டுக்கு மேல். பெடியள் பெட்டையள் வந்து போவதுகள் என்று . . . . குழம்பிப் போய் அவளின் படத்தை எடுத்து ஒருதடவை பார்க்கிறேன். சும்மா சொல்லக்கூடாது புருவங்கள் உயர்ந்து இதழ்கள் விரிந்தன. அந்தமாதிரி வயதில் எடுத்த படமாக்கும்.

வந்தவர்கள் "group group " ஆக பிரிந்து சென்று கொண்டிருந்தனர். அவளைத் தேடி அலைந்த என் கண்கள் தரித்தன. முகம் களைத்து உடல் கறுத்து. கசங்கிய புத்தம் புது உடைகளுடன் எதிர்பார்த்ததை விட உற்சாகமாக. நான் விரும்புவதை விட மெலிவாக. நிச்சயமற்ற சிரிப்புடன் அவளைக் கண்டுபிடித்தேன்.

"நீங்கள் சாதனா . . ." என்று இழுத்தேன். தலையாட்டினாள். "நான் சிவாநந்தன் . . உங்களுக்கு உதவச்சொல்லி கல்யாணி அக்கா" இடைமறித்து தெரியுமென்றாள். என்னை பொறுக்கச் சொல்லிவிட்டு வேறு ஒரு "Girl " க்கு பிரியாவிடை கொடுத்துவிட்டு வந்து மீண்டும் ஒரு அசட்டு சிரிப்பு.

"என்ன இவ்வளவு தமிழாக்கள் ஒன்றாக" என்றேன். தாங்கள் நாற்பது பேர் சிங்கப்பூரிலிருந்து துருக்கியூடாக நியூயோர்க் வந்த கதை சொல்லி முடித்தாள்.

ஹா! உந்த "rate "இல் எங்கிட சனம் இங்க வந்தால் என்று துவங்கி ஒரு பகிடி விட்டேன். சிரித்தாள்! போதாதென்று விட்ட பகிடிக்கு மேலும் ஒரு திருத்தம் செய்தேன். மேலும் சிரித்தாள் நானும் சேர்ந்து சிரித்தேன். இருவருக்குமிடையே இருந்த "strangeness "கொஞ்சம் குறைந்தமாதிரி இருந்தது.

"அப்ப என்ன செய்யப்போறீங்கள் சாதனா"

"என்ன செய்யிறதோ" என்று திரும்ப கேட்டாள் ஆச்சரியத்துடன்.

"கனடாவிற்குள் களவாய் 'என்ர' பண்ணி ரொறன்ரோவில "claim " பண்ண போறீங்களா? அல்லது இங்க நிண்டு 'போடரில்' எல்லாம் முடிச்சுக் கொண்டு வரப்போறீங்களோ"

"இங்கு நான் தனியாய் நிண்டு . . வேண்டாம்" என்றாள்,

"தனியவோ! இங்க 'ரெட் காப்பெற் இன்' க்கு போனா தெரியும் நூறுக்குமேல எங்கட சனம் சமைச்சு சாப்பிட்டுக்கொண்டு மாதக்கணக்கா நிக்குதுகள்"

யோசித்து. என்னைப் பார்த்து . தலைகுனிந்து மௌனித்தாள்.

சரியென்று புறப்பட்டோம். 'போடரில்' எந்த பிரச்சனையும் இருக்கவில்லை. எத்தனை நாள் அமெரிக்காவில் தங்கினோம், என்னென்ன சாமான்கள் கடத்துகிறோம். என்பதைத்தான் தீவிரமாக சோதித்தார்கள். பாஸ்போட் கூட பார்க்கவில்லை.

அதிகாலை நேரமென்பதால் "high way , free way " யாக இருந்தது. அவளை திரும்பி திரும்பி பார்த்து களைத்து கழுத்து உளைந்தது. முன்சீற்றில் வந்து உட்காரும்படி அவளைக்கேட்டேன்

கண்டிப்பாக மறுத்தாள். தொடர்ந்து ஊர். உறவினர். படிப்பு. சினிமா. அரசியல், முற்போக்கு. பிற்போக்கு பற்றியெல்லாம் கதைத்தோம். சிலவேளை மௌனம் சாதித்தோம். சிலவேளை ஆளையாள் பார்த்து சிரித்து கொண்டோம்.

"இவ்வளவு முற்போகாக கதைக்கிறீங்கள். முன்சீற்றில் எனக்கு பக்கத்தில்

தொடர் 38 பக் 7

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கமுடியாத முற்போக்குவாதியா?" என்றேன். வெட்கப்பட்டாள். தலைகுனிந்தாள். சிறிதுநேரம் பேசவில்லை.


"ஏது எவ்வளவென்று விளங்கினாலும் என்னால் தமிழ்மொழிமைக்குள் இருந்து வெளிவர முடியவில்லை. அந்த மாதிரி அம்மா. அப்பா. சமுதாயத்தால் எனது மூளை "Progrum" பண்ணப்பட்டு விட்டது. சராசரி பெண்மைக்குள்ளிருந்து வெளிவர முயற்சிப்பதும் என்ன நடக்குமோ என தயங்குவதுமே எனது வாழ்க்கையாய் போச்சு."

"யூனிவேர்சிற்றி முடித்த பின்னாவது" என்றேன்.

"யூனிவேர்சிற்றி என்ன யாழ்ப்பாணம் யூனிவேர்சிற்றிதானே அது எனக்கு இன்னுமொரு பள்ளிக்கூடம் மாதிரி"

"ஏன்" ஆச்சரியத்துடன் நான்

"ஏன்! ஏனென்றால் " இழுத்து மௌனித்தாள். அவளால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஏனென்று எனக்குத் தெரியும். பட்டதாரிகள் கண்டனவில் சங்கம் வைத்து என்ன செய்கிறார்கள். என்பதிலே புரியும். பரீட்சைக்காக பாடவிதானத்தை படித்தவர்கள். பெற்ற பட்டத்தை எல்லோரும் மதிக்க வேண்டும் என்று அலைபவர்கள். தங்கள் பலவீனம் தெரிந்துவிடும் என்று அதிகம் கதைக்க விரும்பாதவர்கள். முடிந்த அளவு முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு தங்களை பெரியவர்களாக காட்டிக்கொள்வார்கள். எங்கே இருக்கிறோம். என்ன செய்கிறோம் என்பதை ரகசியமாக பேணுபவர்கள். முடிந்த அளவு ஆங்கிலச்சொற்களை தமிழோடு புகுத்தி அட்டவணை பண்ணுவதில் வல்லவர்கள். மேலாக திருமணச்சந்தையில் மவுசான பண்டங்கள் இவர்கள். இவர்கள்



படித்த இடம் பள்ளிகூடமாகத்தானிருக்கும். மனதுக்குள் நினைத்துக்கொண்டேன். அவளைப்பார்த்து விசயத்தோடு சிரித்தேன். அவளும்பட்டதாரிதானே.

"அப்படியென்டால் இவ்வளவு நேரமும் கதைத்த முற்போக்கு விடயமெல்லாம் ஒரு போலி வேசமே! நானுமொரு முற்போக்கு வாதி என காட்டும் முயற்சியா ? . . ." என்றேன் சற்று இறுக்கமாக. அவள் முகம் சுருங்கியது. கண்ணில் ஆவேசம் தெரிந்தது.

"ஏன் இப்படிக்கதைக்கிறீங்கள்" அவள் பாபரத்து போயிருந்தாள். ஒரு கணம் நிதானித்தாள்.

"சொறி" முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.
நானும் "சொறி" சொன்னேன். நான் சொன்னது பிழை என்பதால் இல்லை. அவளை நிதானப்படுத்த வேண்டும்.
சில நிமிடங்கள் இருவரும் எதுவும் பேசவில்லை.

"சாதனா உங்களைச்சந்தித்த முதல் நாளிலேயே இப்படி உங்கள் மனமுடைய கதைத்ததிற்கு மனம் வருந்துகிறேன்" என மௌனம் கலைத்தேன்.

"அதை மறவுங்கோ. அதைவிட உங்களின் புரிந்துணர்வின்மைக்காகதான் நான் மனம் வருந்துகிறேன்."

"What எனக்கு புரிந்துணர்வில்லையோ" முகம் ஆச்சரித்தது.

"பின்ன என்ன நான் முன்சீற்றில இருக்க முடியாததை விளங்கிக்கொள்ளுறீங்களில்லை"

"ச் இதில என்ன இருக்கு விளங்கிக்கொள்ள" என் மனதுள் சினம்.

" அப்படியில்லை. முன்சீற்றில இருந்ததுக்காகவே இந்த சமுதாயத்தில நான் ஒதுக்கப்படலாம். எனது குடும்பத்திற்கு நான் அவமானத்தை தேடி தரலாம். என்னை திருமணம் செய்ய யாரும் முன்வராமல் விடலாம். அதால நானும் குடும்பத்தினரும் மனம் நொந்து . . " முடிக்க மறுத்தாள்."சரி அதை விடுங்கோ"என்றாள்.

சிலகணங்கள் இருவரும் மௌனித்தோம். ஏதோ சிந்தித்தோம். ஏதோ ஒரு ராகத்தை என் தலைக்குள் உணர்ந்தேன். இனங்காண முடியாமல் தயங்கி தயங்கி ஓலித்தது.

"அப்படியென்டால் பெண்கள் ஒரு காலமும் சமுதாயத்தில முன்னுக்கு வரமுடியாது என. ." நான் அவளைத் தூண்டினேன்.

"இல்லையில்லை இரவோடு இரவாய் படித்த முற்போக்கு விடயங்களை தனியொருத்தி விடியற்காலையில் நடைமுறைப்படுத்த வெளிக்கிடுறது முட்டாள்தனம். விகார நடவடிக்கை. ஏன் இயங்கியலுக்கே முரண். சமுதாயம் புரிந்துணர்வு உள்ளதாக மாறாதவரை யாரும் தனிமனிதர் பலிக்கடாவாகி சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தலாம் என்றது நடைமுறையில் சாத்தியமில்லை. மகாத்மா காந்தி உண்மை பேசியதும். அசோகசக்கரவர்த்தி வன்முறையை கைவிட்டதும் யாரையும் பெரிசாய் பாதிக்கேல்ல"

"உங்கட கணக்கில பார்த்தால் புத்தரும் ஒரு பலிக்கடாதானே? ஆனால் அவரின் கருத்துக்கள் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்குதானே" நான் விடுவதாயில்லை.

"இருக்கலாம் புத்தர் தன்ரை வாழ்க்கையை பலிகொடுத்ததால அவரின் சமகாலத்திய மக்கள் அவரின் கருத்துக்களை ஏற்கவில்லை. படிப்படியாக இயங்கியலிற்கமைய புத்தர் வாழாத நாடுகளில்தான் அவரின் கொள்கைகள் ஏற்றுகொள்ளப்பட்டன. அதுவும் புத்தர் வாழ்ந்து காட்டியதாலதான் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சொல்ல முடியாது. ஏனென்றால் புத்தர் பிறந்த இடத்திலேயே புத்த சமயத்தை பெரும்பான்மையினர் ஏற்று கொள்ளவில்லை" விவாதமேடையில் பேசுவது போல் பேசினாள்.

"சாதனா இப்ப நீங்கள் என்ன சொல்ல வாறீங்கள் கண்டி எனக்கு விளங்கேல்லை"

"நான் என்ன சொல்லுறனெண்டா. எப்படி நாங்கள் அப்பா அம்மாவால "program " பண்ணப்பட்டு இப்படி இருக்கிறோமோ. அதேபோல வருங்கால அம்மா. அப்பாக்கள் எப்படி தங்களின் பிள்ளைகளை "program " பண்ணவேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். முன்ன முன்னலதான் எடுக்கவேண்டும்."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அப்ப நீங்கள் முற்றுமுழுதாய் பழமைவாத வழியிலா உங்கட வாழ்க்கையை தொடரப் போறீங்கள்"

"பழமைவாதம் எண்டு. . ." இழுத்தாள்.

"ஐ மீன் அப்பா அம்மா பார்க்கிற யாரோ ஒருத்தனுக்கு கழுத்து நீட்டி அடுப்படியில் இருந்து சமைக்கிறவரை"

" சிரித்தாள் நாணம் கலந்திருந்தது. சிரிப்பை அடக்க முயன்று தோற்றாள். கல்யாணப்பேச்சு எடுத்தவுடன் எங்கள் பெண்களுக்கு வெட்கம் எங்கிருந்தோ பிய்த்துக்கொண்டு வருகிறது. என் மனதுள் ஒளிந்துக்கொண்டிருந்த அந்த ராகம் பலம் பெற்றுக்கொண்டிருந்தது.

"அப்படியென்றில்லை முற்றுமுழுதாய் பெற்றவர்கள் என்ர வாழ்க்கையை தீர்மானிக்கிறதை நான் ஏற்கேல்லை. சில விடயங்களில் அம்மா. அண்ணாவை என்னுடைய விருப்பங்களை ஏற்கவேணும் எண்டு விரும்புறன்"

"அதென்ன சில விடயங்கள்" அவளைத் திரும்பிப்பார்க்கிறேன்.
அதே வெட்கம் அதே சிரிப்பு. தலை குனிந்திருந்தாள்.
"ஏதோ உங்கட கலியாணமாவது உங்கட விருப்பப்படி நடக்க வேணும். என்ற முற்போக்குவாதியாக இருந்தால் போதும். அம்மா அப்பாவுக்காக வாழ முயற்சிப்பது அல்லது வாழ்வது கொடுமை. மனித நேயத்திற்கே முரண். ஒருவர் தனது சுயவாழ்க்கையை கொலை செய்யிறதுக்கு சமன்."
அவளின் முகபாவனை எனது கருத்தை ஆமோதிப்பது போலிருந்து

"நீங்கள் married டோ" இயல்பாக கேட்டாள். இந்தக்கேள்வியை நான் எதிர்பார்க்க வில்லை.

" என்னை பார்த்தால் marry பண்ணின மாதிரியா இருக்கு? விட்டா எத்தனை பிள்ளையள் எண்டும் கேட்பீங்கள் போல கிடக்கு" சிரித்தேன். வெட்கம் இறைபோட ஓ இந்த விடயத்தில் "boys "க்கும் வெட்கம் வருமாக்கும். எனது முகத்தை அவள் வாசித்து விட்டாள். சற்று அவமானமுணர்ந்தேன்.

"ஏன்" என்றாள் நிதானமாக.

"ஏனென்று கட்டாயம் சொல்லவேணுமோ" வம்புக்கிழுத்தேன்.

"அது ஒரு personel விசயமெண்டால் வேண்டாம்." தயங்கினாள்.

"Its not personel" எனக்கு எங்கட "arrange marrage system " மே பிடிக்கேல்ல. முதலே பழகி புரிந்துகொண்ட girl ஐதான் "marry "பண்ண விரும்புறன். தெரியுந்தானே எங்கட சமுதாயத்தில இது எவ்வளவு கஸ்டமென்று "thats why i am late to marry ".

"இப்ப உங்களுக்கு எத்தின வயது?" என்னை திறந்து பார்ப்பதில் தீவிரமாகி விட்டாள் போலும்.

"My god I am sorry "என்ர வயதை சொல்லுற அளவுக்கு நீங்களும் நானும் இன்னும் நெருங்கிய நண்பர்கள் இல்லை."
சங்கடமாக என்னை பார்த்தாள். நிச்சயமாக அவளை சங்கடப்படுத்தி விட்டேன்.

சுவாரசியமாக கதைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ மிகவும் குறைந்த வேகத்தில் காரை ஓட்டிக்கொண்டிருந்தேன். கோப்பி ஒன்று குடித்தால் நன்றாக இருக்கும் போலிருந்தது. 'எக்சிற்' எடுத்தேன்.

'சாதனா" திடுக்குற்று யோசனையிலிருந்து மீண்டாள்.

"இறங்குங்கோ"

"என்ன இடம் வந்திட்டுதோ"என்றாள்

"இல்லை "tired " ஆய் இருக்கு கோப்பி குடிச்சிட்டு போவம்"

"எதிர்பார்த்தது போல் மறுத்தாள். ஆனால் நான் விடுவதாயில்லை.

"சாதனா ஏன் இப்படி நடக்கிறீங்கள் இதே நான் உங்கட அப்பா அல்லது அண்ணன் எண்டா மறுப்பீங்களா இல்லை உங்கட "boy friend " எண்டா மறுப்பீங்களா ? என்னை ஏன் ஒரு அன்னியன் போல நடத்திறீங்கள்"



கண் கலங்கினாள். ஏன்? கேள்விக்குறியாய் கண்களை விழித்தேன். ஏன்? ஏன்? என் மனதுள் சங்கடப்படுத்தி கொண்டிருந்தது. என்முகத்தில் பய ரேகைகள் படர்ந்தன.

"அப்படிக்கூப்பிட அண்ணாவுமில்லை. அப்பாவுமில்லை. அப்பா இருபது வருடத்திற்கு முன்னால இறந்து போனார். அப்ப எனக்கு இரண்டு வயது. ஆனால் அண்ணா. . . " நிறுத்திவிட்டாள் வலிய சொல்லட்டும் என்று விட்டுவிட்டேன். மனதை குழப்பியதற்கு மன்னிப்பு கோரினேன். பணிவான தயங்கும் குரலில் கோப்பி குடிக்க வரும்படி கேட்டேன். தயங்கி தயங்கி என்னை தொடர்ந்தாள்.

"Two small, double double "

அமைதியான அந்த "donut shop " ன் மூலையில் கோப்பியுடன் அமர்ந்தோம்.

"என்னுடன் கோப்பி குடிக்க வந்ததிற்கு நன்றி" சிரித்தேன். அவள் முகத்தில் சங்கடமான உணர்வுகள் சிரிக்க முயன்றாள்.

"இப்படி எங்களை மாதிரி இரண்டு பேர் தனியாய் வந்து கோப்பி குடிக்கிறது எங்கட சமுதாயத்தில ஒரு அசாதாரண விடயம் என " தலையை மேலும் கீழும் ஆட்டினாள். புன்னகைக்க தவறவில்லை.

"ஆனால் எனக்கிது விருப்பம். இப்படியான பல சந்திப்புகளூடாக பழகி புரிந்து கொண்டு வாழ்க்கை துணை தேடுறது நாகரீகம் என்று நினைக்கிறேன்."

"அவ்வளவுதான் இந்த பெண்மத்தில உங்களுக்கு கலியாணமில்லை." என்றுவிட்டு சிரித்தாள்.
"ஏன்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'ஏனோ? எங்கட சமுதாயத்தை விட்டு வெளியால நின்றுகொண்டு எப்படி அதுக்குள்ள ஒரு "girl "ஐ பிடிக்கப் போறீங்க?''

''நான் சிந்திக்கிற மாதிரி இன்னுமொரு தமிழ் "girl " சிந்திக்காது என்று நினைக்கிறீங்களா?''

''அப்படி சிந்திக்கிற ஒரு girl இருக்கலாம் ஆனால் அதைச்சந்திக்கிற சந்தர்ப்பம் almost zero ''

"Any way I will try "

கோப்பியை குடித்து முகம் களித்தாள்.

''சாதனா'' நிமிர்ந்து பார்த்தாள். தொடர முடியாமல் நிறுத்திவிட்டேன்.
''சாதனா என்ன சொல்லவாறனெண்டா.

எனக்கு நிறைய இடத்தில கலியாணம் பேசி வந்தது. நான் வேணாம் எண்டிட்டன். எனக்கிந்த பெண்பார்க்கின்ற சுவாச்சாரமே பிடிக்கேல்ல. ஒரு girl ஐ போய் பார்த்து நான் பிடிக்கேல்ல எண்டு சொன்னால் அந்த girl இன் மனம் எப்படி வேதனைப்படும். மாறாய் அந்த girl என்னை உண்மையாய் விரும்புறதா என்று எப்படி அறியிறது மொத்தத்தில இந்த கண்மூடித்தனமா கல்யாண முறை எனக்குப் பிடிக்கேல்லை. "I am looking for the right kind to marry. I thing I will wait as long as . . . I dont know " இருவருக்குமிடையில் வித்தியாசமான ஒரு மௌனம். அவளின் மனப் போராட்டம் முகத்தில் தெரிந்தது. என் மனதுள் இசைந்து கொண்டிருந்த ராகம் இலயம் தெரிந்தது.

''சாதனா உங்களுக்கு ஆட்சேபணை இல்லையென்றால் உங்களோடு பழக விரும்புகிறேன்.'' பெரிய மனச்சுமை இறங்கியதை உணர்ந்தேன். அவள் பதட்டப்பட வில்லை. இதை அவள் எதிர்

பார்த்தாள் போலும். நிதானமாக உணர்வுகள் உறைந்து போன முகத்திலிருந்து உலர்ந்த வார்த்தைகள் உதிர்ந்தன.

''எனக்கு உங்களை முன்பின் தெரியாமல்



எப்படி?'' நிறுத்தினாள்.
அவள் முகத்தில் பயம் கலந்த குதூகலம் தெரிந்தது. நான் கோப்பியை குடித்து முடித்திருந்தேன். அவள் இன்னும் குடிக்காமல் வைத்துக்கொண்டிருந்தாள். குறிப்பறிந்து கொண்டேன்.

'' கோப்பி பிடிக்கேல்லை'' என. கருத்தோடு சிரித்தாள்.

''வைச்சிட்டு வாங்க போவம்''
என்னை பின் தொடர்ந்தாள்.

''இவ்வளவு நேரத்தில என்னை புரிஞ்சு கொண்ட அளவில. . .'' முடிக்க முடியாமல் முறித்து கொஞ்சம் வெலவெலத்து. ..
'இப்பவும் கேட்கிறேன் முன் சீற்றில இருங்கோ'' தயங்கினாள். இருந்தும் அவளது கை முன் கதவை திறந்தது. என்நெஞ்சில் சுரம் பாய்ந்தது. மேலும் உமிழ்ந்து விழுங்கினேன்.

என் மனத்திலுள்ளதை மேலும் அவளுக்கு எடுத்து சொன்னேன். எதுவுமே பேசாமலிருந்தாள். எனக்கு தெரியும். இப்படியான ஒரு சந்தர்ப்பத்திற்கு அவள் prepared இல்லை. கல்யாணி அக்கா வீட்டில் அவளை இறக்கும் வரை முடிந்தவரை மௌனம் சாதித்தாள். இறுதி முயற்சியாக எனது போன் நம்பரை அவளிடம் கொடுத்தேன். முடியுமானால் தொடர்பு கொள்ளும்படி கேட்டேன். வாங்கிக் கொண்டாள்.
எதிர்பார்த்தது போல அவள் எனக்கு போன் பண்ணவில்லை. கல்யாணி அக்கா இல்லாத நேரம் பார்த்து போன் பண்ணி கதைத்தேன். சிரித்தள். எங்கிருந்து அவளுக்கு இவ்வளவு துணிவு வந்ததோ தெரியாது மிகவும் வேகமாக என்னை நெருங்கினாள். என் னென்றால் எண்ணை யாகும வேகம்

அவளிடமிருந்தது.
அவள் என்னிடம் கண்மூடித்தனமான அன்பு செலுத்தத் தொடங்கினாள். சில வேளை என்னால் நம்பமுடியாமலும் சலிப்பாகவும் இருந்தது. ஏதோ திருமணமாகி விட்டது போல் உரிமையெடுத்து பழகினாள். தன்னை பிடிச்சிருக்கா என்று அடிக்கடி கேட்டாள்.

மற்றுமொருமுறை போன் எடுத்தபோது ''முடிவு சொல்லுங்கோ'' என்று கடுமையாக என்னை வற்புறுத்தினாள். என்மனத்தில் சிறிது சங்கடமும் சினமுமாகவிருந்தது. ஒரு முறை கூட நாம் தனிமையில் சந்திக்கவில்லை. சந்தித்து ஒரு கிழமைகூட ஆகவில்லை. இந்த குறுகிய காலத்தில் எந்த முடிவையும் எடுக்கமுடியாது என்றேன்.

நான் உறுதியளிக்காத பட்சத்தில் என்னைவிட்டு ஒதுங்குவதென்பதை விட என்னிடம் உறுதிமொழி பெற்றுவிடுவதில் குறியாகவிருந்தாள். என்னோடு ஒரு சிநேகிதி போல் பழகுவதில் ஒரு பாதுகாப்பின்மையை அவள் உணர்வது போல் தெரிந்தது. என்னுடன் தனியாக பேசும்போது ஒருவிதமாகவும் கல்யாணியக்கா இருக்கும் போது இன்னொரு விதமாகவும் பேசினாள்.

சாதனா என்னிடம் உறுதிமொழி கேட்டது என்மனதுள் உறுத்திக் கொண்டே இருந்தது. என்னுடைய வழியிலிருந்து என்னை விலத்திவெடுக்க அவள் முயற்சிப்பது போலிருந்தது. மனதில் அமைதியின்மையை உணர்ந்தேன். பொறுமையின்றி போன் பண்ணினேன். "promise " பண்ணிவிட்டு பழகுவது பதிவுத்திருமணம் செய்துவிட்டு பழகுவது போலிருக்கும். நாங்கள் இருவரும் "Arrange " பண்ணி கலியாணம் செய்தது மாதிரியிருக்கும். இதுக்கும் இப்ப இருக்கும் திருமண முறைக்கும் எந்தவித வித்தியாசமும் இருக்காது என்று எனது மறுப்பை அவளுக்கு தெரிவித்தேன்.
எங்கள் உறவு எப்படியோ கல்யாணி அக்காவுக்கு தெரிந்து போய்விட்டது. போன் இல் என் முடிவைக் கேட்டாள்.

என்நிலைமையை தெளிவு படுத்தினேன். பழகிப்பார்த்து முடிவு செய்வதை அவர் விரும்பவில்லை. அதற்கு நிறைய காரணங்கள் சொன்னார். எங்கள் "girls " க்கு அதற்கு மனப்பக்குவம் போதாது. சமுதாயத்திற்கும் புரிந்துணர்வில்லை. சாதனாவின் வாழ்க்கை பலியாகக்கூடாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்படி இப்படி என்று ஆயிரம் காரணங்கள் சொன்னார். அவருடன் பழகுவதை தவிர்க்கும்படி கேட்டாள். ஏற்றுக் கொள்கிறேன் என்பதை விட அவளுக்கு வேறு எதுவும் சொல்லமுடியவில்லை.

கல்யாணி அக்கா என்ன சொல்வாளோ எனக்கு தெரியாது சாதனா போன் பண்ணி அழத் தொடங்கிவிட்டாள்.

"ஏனப்பா என்னை பிடிக்கவில்லையா?" கெஞ்சினாள். 'அப்பா' என்று விழித்தது விசராக இருந்தது.
"சாதனா உங்களை பிடிக்குதோ அல்லது பிடிக்கேல்லை என்றோ சொல்லுறதுக்கு எனக்கு உங்களைப்பற்றி என்ன தெரியும். சந்தித்து இரண்டு கிழமை கூட ஆகவில்லை. "girl friend" என்ற ரீதியில் உங்களை ஒருக்காலும்கூட சந்திக்கேல்லை."

"அப்ப என்னை சந்தியுங்கோ தொடர்ந்து பழகுங்கோ "please" "

"sorry சாதனா கல்யாணி அக்காவுக்கு promise பண்ணிட்டன். அவ எனக்கு எவ்வளவு நல்ல friend தெரியுமோ. அவவை என்னால ஏமாத்த முடியாது. அவவுக்கு தெரிந்தால் எவ்வளவு மனவருத்தப்படுவா"

"அப்ப அவவுக்கு தெரியாமல் சந்தியுங்கோ. கதையுங்கோ." கெஞ்சினாள்

"அப்படியான சந்திப்புக்களுக்கு பிறகும் எனக்கு பிடிக்கவில்லை என்றால் என்ன செய்யிறது"

"அப்படி நடக்காது" என்று அடம் பிடித்தாள்.

சந்திப்பதற்கு நாள் குறித்தோம். ஒரு பிரச்சனையை எதிர்பார்க்கும் பயம் என்

மனதில் குடிகொண்டது. கல்யாணி அக்காவை ஏமாற்றுகின்றோம் என்ற குற்றஉணர்வு துன்புறுத்தியது. ஏதோ வருவது வரட்டும் நல்லதோ கெட்டதோ ஒரு அனுபவமாக அமையட்டும் என்று மனத்தை திடப்படுத்தி கொண்டேன்.

திட்டமிட்டபடி அப்பாட்மென்றுக்கு கீழ் காரில் காத்திருந்தேன். முதன் முதல் ஒரு "girl" உடன் "date" க்கிற்கு போகிற பரபரப்பு மனதிலிருந்தது. நாணிக்கோணி வந்து காரின் பின்சீற்றில் ஏறி அமர்ந்து கொண்டாள். கச்சிதமாக உடுத்திருந்தாள். பட்டதாரியல்லவா.

மனித நடமாட்டமற்ற "no exit" பாதையில் காரை நிறுத்தினேன். சினிமாவில் வருவது போன்று மழை பெய்து கொண்டிருந்தது. என்ன கதைப்பது. எப்படித் தொடங்குவது என்பது இருவருக்கும் பிரச்சனையாயிருந்தது. சாதாரண விடயங்களில் ஆரம்பித்து நிலமையை சமுகமாக்கி கொண்டோம். என்னுடைய அவள் மீதான கண்ணோட்டம் முற்றுமுழுதான "studious" ஆக இருந்தது. சாதனாவுக்கு என்னொத்த வயது. தோற்றத்தில் எனக்கு அக்கா போலிருந்தாள். அவளிடம் அன்பான ஆக்கிரமிப்பு சுபாவம் இருப்பதை உணர்ந்தேன். என்னுள் மேலும் அவளை சந்திப்பதில்லை என்பது வலுப்பெற்றுக் கொண்டிருந்தது.

நான் இன்னும் "driving seat" இல் இருந்து கதைத்துக்கொண்டிருந்தேன். தன்னுடன் பின் சீற்றில் வந்து உட்காரும்படி கேட்டாள் ஒருவித பதட்டத்துடன் போய் உட்கார்ந்து கொண்டேன். இதோ வந்து விட்டேன் மேலும் என்ன என்ற மாதிரி அவளைப் பார்த்தேன். என்னை பார்க்க மறுத்தாள். முடிந்த அளவு விலகி. வெட்கமோ என்னவோ ஒருவித ஜட உணர்வு நிலையிலிருந்தாள்.
"இதற்காகவா பின் சீற்றுக்கு வரச்சொன்னீங்க" என்றேன் திடீரென என் மடியில் சாய்ந்தாள். 'என்னை கை விடாதீங்கோ என முணுமுணுத்தாள்' அவளை ஆதரவாக பற்றினேன். அவள் மடியில் படுத்திருந்தது என் உணர்வுகளை



பாதிக்காதது அதிசயமாகவிருந்தது. அந்த நிலையிலும் உண்மையாய் என் மனதில் தோன்றியதை அவளுக்குச் சொன்னேன். சுருக்கமாக அவள் என்னொத்த வயதிலிருப்பதை நான் விரும்பவில்லையென்றேன்.

இன்னும் என் மடியில் படுத்திருந்தாள். அவளைப் பொறுத்தவரை திருமணம் என்பது முடிவாகிவிட்டது ஆனால் நான் குழப்பத்திலிருந்தேன். மேலும் எதுவும் பேசாமலிருந்தேன். அவளும் மௌனம் சாதித்தாள். நேரம் போய் கொண்டிருந்தது. இப்போ என் மடியில் கொஞ்சம் சுமையை உணர்ந்தேன். சற்று அசையமுயன்றேன். புரிந்தவளாக நேரமிருந்தா என்றாள் பொய்க்கு இல்லையென்றேன் "போவோமா" என்று கேட்டேன். எழுந்து சுதாகரித்தாள். எந்தவித முடிவுமின்றி அன்று பிரிந்தோம்.

ரகசியமாக எங்கள் சம்பாசனை போனில் தொடர்ந்தது. அவள் ஆக்கிரமிப்பதும் நான் "defensive" வாய் கதைப்பதும் தொடர்ந்தது. மற்றுமொரு சந்திப்பை அவள் விரும்பினாள், நான் விரும்பாமலில்லை. ஆனால் அவள் தனது முடிவை என்மீது திணிப்பாள் என்ற பயம் இருந்தது. இருந்தும் எனது பாலுணர்வு வென்றது. மீண்டும் சந்தித்தோம் கதைத்தோம். சந்தித்தோம் கதைத்தோம் மிக இனிமையான உணர்வுகளை பகிர்ந்தோம். பருவ வயதுக்கனவுகளை அவளுடன் நனவாக்கும் வெறி சில வேளைகளில் என்னிடமிருந்தது. புத்தம் புது உணர்வுகளை தட்டி எழுப்பினோம். பல கணங்கள் மெய்மறந்தோம். மறக்க முடியவில்லைதான் ஆனாலும் ஒவ்வொரு சந்திப்பின் பின்னரும் அவளை விட்டு எப்படி பிரியலாம் என்றுதான் யோசித்தேன்.

ஏனோ அவளை முதற் தடவை பார்க்கும் போது ஏற்பட்ட பிரமிப்பு என்னுள் படிப்படியாக குறைந்து கொண்டிருந்தது.

அவளில் பிடிக்காத விடயங்கள் என்னுள் "accumulate" பண்ணப்பட்டு கொண்டிருந்தது.
மேலும் சந்திப்பதை தவிர்க்க முயன்றேன். ஏன்? ஏன்? என்று துளைத்தெடுத்தாள். ஏனென்று சொன்னால் மனமுடைவாள். மறுத்துவிட்டேன். வற்புறுத்தினாள். "personel" என்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவள் விட்டபாடில்லை. அழுதாள். கெஞ்சினாள். தற்கொலை செய்யப் போவதாக வேறு பயமுறுத்தினாள்.

"please சாதனா என்னை வற்புறுத்த வேண்டாம். ஏனென்டு தெரியேல்ல. ஆனால் இந்த உறவை தொடர என்னால் முடியேல்லை"

"ஏனப்பா என்னை பிடிக்கேல்லயா?" கெஞ்சும் குரலில் கேட்டாள். பாவமாயிருந்தது.

"சாதனா யாருக்குத்தான் உங்களை பிடிக்காது. "I like you a lot.but " நான் வாழ்க்கை துணையாக எதிர்பார்க்கிற "kind " நீங்களில்லை."

"இவ்வளவெல்லாம் பழகிட்டு இப்ப சொல்லுறீங்கள்" என்றாள் சற்று கோபமாக.

"என்ன இவ்வளவு அவ்வளவு! மூன்று மாதம் பழகியிருக்கிறம். மூன்று நாலு முறை சந்தித்திருக்கிறம். அந்த சந்திப்புக்களுக்கு பிறகுதான் இந்த முடிவுக்கு வந்தனான். "ஏன் ஆரம்பத்திலேயே".... தொடராமல் நிறுத்தினேன். "இந்த முடிவை நான் கல்யாணத்திற்கு பிறகு எடுக்கிறதோட ஒப்பிட்டால் இது நல்லதல்லவா ?" என் வார்த்தைகள் சூடாக இருந்தன.

"அப்படியெண்டால்என்னை தொடாமல் கொள்ளாமல் எட்ட இருந்தே பழகியிருக்கலாம்தானே." என்மீது குற்றம் சுமத்தினாள்.

"Its not nice சாதனா ஏன் இப்படி சிந்திக்கின்றீர். கிட்ட எட்ட என்று ஏன் வகைப்படுத்திறீர். ஒரு வரைபறைக்குள் உம்மோட பழகி என்னத்தை அறியிறது. என்னை பொறுத்தவரை free ஆகபழக விரும்பினேன். பழகினேன் thats it. உம்மை முத்தமிட்டதோ அணைத்ததோ உம்மை வற்புறுத்தியா செய்தேன். குற்றம் சுமத்த எண்டுபோனா இரண்டு பேரும் பொறுப்பேற்க வேண்டி வரும். தயவு செய்து இதை பெரிசாய் எடுக்க வேண்டாம்.

"என்ன பெரிசாய் எடுக்க வேண்டாம்" கத்தினாள்.
"நீங்கள் அனுபவிக்கிறதை அனுபவிச்சு போட்டு விட்டுகாரர் பாக்கிற பெண் கூண்டுக்கிளியை கலியாணம் செய்யிறது சின்ன விடயமே.இந்த நிலமை உங்கட தங்கச்சிக்கு ஏற்பட்டால் ஏற்றுக்கொள்ளுவீங்களோ?"

"stop it சாதனா என்ன விசர் கதை கதைக்கிறீர். தங்கச்சி அது இது எண்டு. உம்மை ஆசை காட்டி மோசம் செய்யும் சுபாவம் ஆரம்பத்திலிருந்தே இருந்தது என்கிறீரா? அம்மா அப்பா பேசும் கலியாணத்தை முடிப்பதற்காகவா உம்முடன் பழகுவதை நிறுத்துகிறேன். நீர் என்னை புரிந்து கொண்டது இவ்வளவுதானா! சந்தித்த முதல் நாள் என்ன சொன்னனான் எண்டு நினைவிருக்கா"

"என்ன?" ஆணவமாக அவள்

"நான் உங்களை கேட்க நீங்கள் என்னை முன்பின் தெரியாது எண்டு சொல்ல என்ன சொன்னனான்?" உம்மென்றிருந்தாள்.

"நான் என்ன கலியாணம் கட்ட சொல்லியா கேட்டனான். விருப்பமெண்டால் பழகுவம் இரண்டு பேரை பற்றியும் அறிவம். பிடிச்சால் காதலிப்பம். காதல் வாழ்க்கை திருப்திகரமாயிருந்தால் கலியாணம் முடிப்பம். அப்படித்தானே சொன்னனான். எவ்வளவு நாகரிகமாக இதை துவங்கினனான். அதே போல் நிறுத்தவும் விரும்புறன். அதுக்கேன் அடம்பிடிக்கிறீங்கள்."
அழுதாள். அழுதழுது கதைத்தாள்.

"உங்களுக்கென்ன ஆண்பிள்ளையள் பெண்ணாய் பிறந்தவள்தான் யோசிக்க வேணும்" மேலும் அழுதாள்.
"சாதனா " கத்தினேன்.

"இப்ப ஏன் அழுறீர். அழுது எதையும் சாதிக்க நினைப்பது எந்த விதத்தில் நாகரீகம். சரி உம்மில் இரக்கப்பட்டு இந்த உறவை தொடருறன் எண்டு வையும். பிறகு எப்பவோ ஒருநாள் எனக்கு பிடித்த ஒருத்தியை சந்திக்கேக்கை மனம் மாற மாட்டன்

என்றதுக்கு என்ன உத்தரவாதம். சரி அப்படித்தான் இல்லையெண்டாலும் நான் வாழ்நாள் முழுக்க விருப்பமில்லா ஒரு வாழ்க்கையை வாழ்ந்து மனம் நொந்து கொண்டிருக்க வேண்டுமா?" என் குரலில் ஆவேசம் தெரிந்தது.
"அப்படியெண்டில்லை என்னில இரக்கப்பட்டு யாரும் என்னை கலியாணம் கட்டிறதை நான் ஏற்கேலை. உண்மையாய் என்னை விரும்பிறவனைத்தான் நானும்

விரும்புறன்." அவள் குரலில் அமைதி தெரிந்தது.

பின்னே ஏன் சாதனா என்னை வற்புறுத்துறீர்"

"வற்புறுத்தேல்லை. ஆனால் உங்களை என்னால் மறக்க முடியேல்லை. உங்களோடு பழகிறதை நிற்பாட்ட மனம் ஏற்றுக்கொள்ளுதில்லை"

" விளங்குது நீர் சொல்லுறது சரி அதுதான் நிஜம். நான் ஏற்றுக்கொள்ளுறன். ஆனால் இது உம்மிலையோ என்னிலையோ மட்டும் பிழையெண்டில்லை. சமுதாய அமைப்பும் ஒரு காரணம். இங்க காதல் என்றதை விட கிடைத்தவரை விடகூடாது என்ற பிரச்சனை. உங்கள் அக்காவின் திருமணம் முடியிறவரை உங்களின் மேல் ஆண் வாடையே விளாது என்ற பிரச்சனை. உங்கள் அக்காவின் திருமணம் நடப்பதே கேள்வி குறியாக இருக்கும்போது நம்பிக்கையான எதிர்பார்ப்போடு இருக்கமுடியாத பிரச்சனை. எல்லாவற்றுக்கும் மேலாக பருவமடைந்த நாள் முதல் எட்டு வருடமாக பாலியல் உணர்வுகளிற்கு கிடைத்த "break " இழக்க விரும்பாத பிரச்சனை. இதை காதல் அது இது எண்டு "teen agers " மாதிரி அடம்பிடிக்க வேண்டாம். நாங்கள் தொடர்ந்தும் நல்ல நண்பர்களாக இருப்பம். காதல்கதை போதும்"
அவள் இன்னும் அழுது கொண்டிருந்தாள். நான் விடை பெற்றேன். எனது மனம் நொந்தது. கொஞ்சம் உபத்திரவமும் உணர்ந்தேன். என்னுடைய மனச்சாட்சி என்னை சுயவிமர்சனம் செய்வதை தவிர்க்க முடியாமலிருந்தது.

---

**தமிழர் வகைதுறைவள நிலையத்தின் கலாச்சாரக் குழு வழங்கும்**

**புரிதல்**

**(கலை நிகழ்வு)**

**காலம் - 27-05-1994**

**சனிக்கிழமை மாலை 6.00மணி**


**இடம் -காஸ்டல் பிராங் உயர் நிலைப் பாடசாலை மண்டபம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மறுபடி



தொலைவில் இருப்பைத் தொலைத்து
வேரற்று அலையும் நாட்கள்
கடுகதியில் சக்கரங்களுக்குள்
கேள்விகளற்றுப் பொழுதுகள்
பனிக்காற்றின் உறைச்சலில்
கனவுகளை இறுகப் போர்த்து
அன்னியமான பேழ்தின் அந்தரத்தில்
கதறுகிறது வாழ்வு

அன்றோர் இரவு
நிலவை ஒளித்து விட்டு உம்மென்றிருந்தது.
"மரண பயம் கொள்" "மரண பயம்கொள்"
இனவெறியின் குரூரம் விதித்தது.
போர் சூழ்ந்த தேசத்து நினைவுகளோடும்
சுற்றத்தின் கனவுகளோடும்
வீடு திரும்பிய ஒருவன்
ரொரன்டோ தெருக்கரையே குருதியோடக் கிடந்தான்.
இங்கும் இத்தெருவில்
சாவின் முன் அம்மாவெனக் கதறியது வாழ்வு
இனவெறியின் கரத்தால்
புகலிட வீதியில் இங்கோர் மனிதன் மாண்டான்.

கால்கள் இறுகிக் கொண்டன
குப்புற விழ்ந்தேன்
எழுந்திருக்க முடியவில்லை.
வாய்விட்டுக் கதறுகிறேன்
குரல் வெளிவரவில்லை.
மொட்டைத் தலையுடனும் இராணுவச் சப்பாத்துடனும்
அணிவித்துக் கொண்டது உருவம்
உடல் நடுங்கி வியர்த்துக் கொள்கிறது
வாழ்வுக்காய் கெஞ்சுகிறேன்
"ஐந்நூறு வருட மனித உண்ணியென"
இரணியச் சிரிப்போடு நெருங்குகிறது உருவம்
கூரிய பற்கள் குரல்வளையைப் பற்றிக் கொண்டன
கூரிய நகங்கள் தேகத்தைக் கிளிக்கின்றன
"உதவி" காப்பாற்றுகவெனக் கதறுகிறேன்
மௌனம் மட்டுமே எதிரொலித்தது
இதயம் வலித்து மூச்சடைத்தது.......
கனவுகளிலும் வாழ்வை உறுத்தும்
அதே கனவு மீண்டது
விழித்துக் கொண்டேன்

வெள்ளிகள் அப்பிய வானத்தில்
நிலவெழுந்திருந்தது
நானுமிருந்தேன்
உறைபனி மூடிய புல்லாய்
வேரிற்குள் நாளையை ஊன்றிவிட்டு

பா. அ. ஜயகரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மெக்ஸிக்கோ பூர்வீக மக்களின் எழுச்சி

## சன்கிறிஸ்டோபலில்' வெளியிடப்பட்ட போராளிகளின் பிரகடன அறிக்கையிலிருந்து.

மெக்சிக்கோ நாட்டு தெற்கு மாநிலமாகிய "சியபாசில்" 'சபடிஸ்டா தேசிய விடுதலைப்படை' போராளிகள் 1994 ஜனவரி 1ம் திகதி ஓர் கிளர்ச்சியை ஆரம்பித்தனர். சுமார் 2000 'ஷோட்ஸி ஷெல்டல்' மாயன், இந்தியர்கள் கிளர்ச்சியில் முதல் நாளே ஐந்து நகரங்களை கைப்பற்றினர். **அவர்களால் 'சன்கிறிஸ்டோபலில்' வெளியிடப்பட்ட போராளிகளின் பிரகடன அறிக்கையிலிருந்து**.... " சர்வாதிகாரிகள் எமது சந்ததியை படிப்படியாக அழித்துவருகின்றனர். அதனால்தான் மெக்சிக்கோ மக்கள் இந்த புரட்சி மூலம் தங்கள் விடுதலை, சுதந்திரம், நீதி, சமாதானம், ஜனநாயகம், வீடுவாசல், கல்வி, சுகாதாரம், ஆகியனவற்றை மீளப்பெற தங்கணம் கட்டியுள்ளார்கள். இதற்கு மக்களின் பங்களிப்பும் ஆதரவும் தேவைப்படுகிறது"

"சபடிஸ்டா தேசிய விடுதலை" இயக்கத்தின் நடவடிக்கைகள் எதிர்பார்த்ததுதான். **1994ன் உதயம், வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் உதயத்துடன் ஆரம்பமானது.** "சபடிஸ்டாஸ்" தமது போர்பிரகடனத்தில் மேலும் "இந்த வர்த்தக உடன்படிக்கை மெக்சிக்கோ பூர்வீக மக்களுக்கு ஓர் சாவுமணி. மெக்சிக்கோவின் ஜனாதிபதி ஷலினாசிக்கு எதிராக நாம் செயற்படுவோம். 1988 இலிருந்து சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் தாக்கங்களை காணக்கூடியதாக இருந்தது. 1988ம் ஆண்டிலிருந்து மெக்ஸிக்கோ அரசாங்கம் வர்த்தக ரீதியிலான தடைகளை தளர்த்தி எங்களது பொருளாதாரத்தை உலகளாவிய பொருளாதாரமாக்கியது. அரச தாபனங்களை தனியார் மயமாக்கியதோடு, பலவற்றை பணக்கார முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டது. இதன் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வேலைகளை இழந்தனர். சிறு, நடுத்தர அளவிலான தொழில்கள் மூடப்பட்டன. வர்த்தக உடன்படிக்கை கூட்டுத்தாபனங்களுக்கு மேலதிக லாபம் பெறவும், குறைந்த ஊதியத்தை தொழிலாளர்களுக்கு வழங்கவும் வழிசமைத்ததோடல்லாமல், தொழில் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களை உடைத்தெறியவும் வழிசெய்கிறது. குறைந்த வேதனம் வாங்கும் தொழிலாளர்களை வழங்குவதன் மூலம் மெக்சிக்கோ நாட்டு தேசிய ஆட்சியை



1910களில் மெக்சிக்கோ சர்வாதிகார அரசுக்கெதிராக எதிராக எழுந்த சபடிஸ்டா

இழக்கவும் வழிகோலுகிறது. இதன் மூலம் மெக்சிக்கோ மக்களின் நிலங்களும் சூறையாடப்படுகிறது" மெக்சிக்கோ அரசியல் அமைப்பின் 27 வது சரத்தின்படி பூர்வீக மக்களுக்கு இருந்த காணி, நிலம் தொடர்பான உரிமைகள் எல்லாம் ஜனாதிபதி ஷலினாஸினால் பறிக்கப்பட்டது. இந்த சரத்தை வாபஸ் வாங்கியதன் மூலம் ஷலினாஸ் இந்த வர்த்தக உடன்படிக்கையின் "பொருளாதார விருத்தி" கொள்கைக்கு ஒத்தாசை வழங்கினார்.

**காலனித்துவத்திற்கு பூர்வீக மக்களின்எதிர்ப்பு**

மெக்சிக்கோவை பொறுத்த அளவில் வடஅமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கை என்பது அன்று தொட்டு தொடர்ந்து வந்த இன அழிப்பு கொள்கையின் இன்னும் ஒரு அங்கமாகும். இவ்வின அழிப்பு கொள்கைகள் இன்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 1492ல் கிறிஸ்டோபர் கொலம்பஸ் அமெரிக்காவில் காலடி வைத்த காலம் முதல் தொடர்வதொன்றாகும். ஐரோப்பிய காலனித்துவத்தின் பண வேட்கைக்கு மெக்சிக்கோவும் இரையானது. கொடூர அடக்குமுறையாளன் "ஹெர்ணாண்டோ கோடூரஸ்" 1517 — 1521 காலப்பகுதியில் தங்கத்திற்காக லட்சக்கணக்கான மெக்சிக்கன் மக்களை கொன்றுகுவித்தான். 1524ல் "பீட்டோ அல்ஹூடோ" இதே மாதிரியான கொடூர செயலில் ஈடுபட்டு "எல்சல்வடோர், கௌதமாலா, தெற்கு மெக்சிக்கோ" ஆகிய நாடுகளில் பல 'மாயன்' மக்களை கொன்று குவித்தான். "ஸபடிஸ்டா" ஆயுதபுரட்சி இன்று நேற்று தோன்றியதொன்றல்ல. இது காலனித்துவம் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து தொடங்கிய ஒன்றாகும். பூர்வீக மக்கள் எப்பொழுதுமே கிளர்ந்தெழுந்தார்கள். 1712ல் ஸ்பானியருக்காக ஆலயம் கட்டுவதற்கு கட்டாய நிதி வசூலுக்கு எதிராக 'ஷெல்டன் இந்தியர்கள்' கிளர்ச்சி செய்தார்கள். "ஹிடெல்கோ" என்னும் ஒரு கிராமிய சமயகுரு 80,000 பூர்வீக விவசாயிகளின் கிளர்ச்சியை முன்னின்று நடாத்தினார். இதன் மூலம் அடிமைகளை மீட்டு பறிபோன நிலங்களை மீளப்பெற்றனர். "மொர்லொஸ்" என்ற இன்னுமொரு சமயகுரு "பூர்வீக இனமக்களின் கிளர்ச்சியும் சமூகப்புரட்சியும்" என்ற ஒரு குழுவை தொடங்கினார். இக்குழு ஒரு காலத்தில் மெக்சிக்கோவின் பல பகுதிகளை தன் ஆதிக்கத்தில் வைத்திருந்தது!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1900ல் மெக்சிக்கோ அமெரிக்காவின் ஒரு அடிமை காலனியாக இருந்தது. பெருந்தோட்டங்கள். நிலம். நீர். தொழிலாளர்கள் ஆகியவற்றில் வெளியாருக்கு ஏற்பட்ட தனியுடமையாக்கும் ஆசை பல பூர்வீகக்குடிகளை இடம்பெயர



சபடிஸ்டாவின் தலைமையில் அணிதிரண்ட போராளிகள்(1910-1919)

வைத்தது. 1990ல் நிலச்சுவிகாரம் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு சட்டம் ஸபடிஸ்டா கிளர்ச்சிக்கு வழிகோலியது. 'ஸபடா' 10 வருடங்களாக நிலச்சுவிகாரத்திற்கு எதிராகவும். மக்களின் நில உரிமைக்காகவும் அமெரிக்கா. மெக்சிக்கோ அரசாங்கங்களிற்கு எதிராகவும் போராடினார். 1919ல் இவர் கொலை செய்யப்பட்டாலும் அவரது கொள்கைகள் அழியாது இன்னும் பூர்வீக மக்கள். விவசாயிகள் மூலம் புத்துயிர் பெற்றுள்ளது. 1970 களின் முற்பகுதியில் பூர்வீககுடிகள் பல நிலங்களில் குடிபுகுந்திருந்தார்கள். 1975ல் "சினலோ" மாநிலத்தில் 25.000 ஏக்கர் நிலம் சொந்தமாயிருந்தன. 1976ல் இன்னும்பல நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் குடிபுகுந்தார்கள் இதன் பின் அரசின் மிதவாத கொள்கையினால் இந்திய விவசாயிகள் பலர் அழிக்கப்பட்டனர். மெக்ஸிக்கோவில் பெரும்பான்மையினர் பல்நிறத்தவர்களாயினும் வெள்ளை நிறத்வர்களும். வெள்ளைநிற வழித்தோன்றல்களும். (மெஸ்டிலோஸ்) கலப்பினத்தவர்களும் பூர்வீக மக்கள் மீது

இனவெறியை காட்டுகின்றனர். பூர்வீக மக்கள் வேலையில்லா திண்டாட்டம்.

வறுமை ஆகியவற்றின் கோரப்பிடியில் அகப்பட்டுள்ளனர். ஜனாதிபதி சலினாஸ் போன்ற வெள்ளை நிற மெக்ஸிக்கர்களே அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.


மெக்ஸிக்கோவில் அரசியல் நிலைமை சீராக இருப்பதாக பிரச்சாரம் செய்கின்றன. ஆனால் உண்மையில் **மனித உரிமை மீறல்களும். எதிர்கட்சிகளை வன்முறைமூலம் அடக்குதல் என்பன அங்கே அன்றாடம் காணக்கூடிய தொன்றாகும்.** 1968ல் 400க்கும் அதிகமான மாணவர்கள் மெக்ஸிக்கோ நகரில் அரச படையினரால் கொல்லப்பட்டனர். **கடந்த ஐந்து வருடங்களில் எதிர்க்கட்சியை சேர்ந்த 250 அங்கத்தினர் கொலை செய்யப்பட்டனர்.** பலர் சந்தேக கைதிகளாக பொய்க்குற்றச் சாட்டுகளுக்குட்படுத்தப்பட்டு கொடூரமாக தாக்கப்பட்டுமுள்ளனர்.

**சியபாஸ்— கிளர்ச்சியின் அந்திவாரம்**

தற்போதைய கிளர்ச்சி மெக்சிக்கோவின் வறுமையான மாநிலமாகிய சியபாசில் தொடங்கியது. இந்த மாநிலம் சிசு மரணம். மந்த போசனம் என்பனவற்றை கூடிய விகதத்தில் கொண்டது. அனேகமானோருக்கு நன்னீர். மலசலகூட வசதிகள் இல்லை.

**அடக்குமுறைகளும் ஊழல்களும்**

நிறுவன புரட்சி கட்சி(Institutional revolution party) என்பது மெக்ஸிக்கோவின் அரச கட்சியாகும். 1929ம் ஆண்டிலிருந்து 65 வருடங்களாக ஆட்சி செய்து வரும் இக்கட்சி அதன் ஆட்சி திறமைக்கு மாறாக ஊழல். மாற்றுக் கட்சிகளை அடக்கு முறைக்கு உட்படுத்தல் என்பனவற்றுக்கு கைதேர்ந்த கட்சியாகும்.



NAFTA சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலம் இரண்டு பெரிய ஜனநாயக நாடுகளான அமெரிக்காவும். கனடாவும் மெக்ஸிக்கோவை தமது அடக்குமுறைக்கும் ஆதிக்கத்திற்கும் பயன்படுத்துகின்றன. இவை

அரசபடைகளும் பொலிசாரும் தமது வன்முறைகளை கட்டவிழ்த்துள்ளனர். இதனால் சியபாஸ் பகுதி மனித உரிமை மீறல்களுக்கு பேர்போன இடமாகும். கடந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

30 வருடங்களாக பூர்வீகமக்கள் மிருகத்தனமாக தாக்கப்பட்டு வந்துள்ளனர். 1991 மார்கழி மாதத்தில் பூர்வீகக்குடிகள் இந்த பொலிஸ் வன்முறைகளுக்கு தங்களது எதிர்ப்பை காட்ட அமைதியான முறையில் போராடினார்கள். அவ்வேளை நூற்றுக்குமதிகமான மக்கள் கைது செய்யப்பட்டதோடு கொடூரமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள்.

**கௌதமலாவிலிருந்து வந்த அகதிகள்**

1980களில் 'மாயன்' குடிகளுக்கு எதிராகவும், அவர்களது கிளர்ச்சிகளுக்கு எதிராகவும் கௌதமலா அரசபடைகள் தாக்கத் தொடங்கியதன் காரணமாக ஆயிரக்கணக்கான அகதிகள் கௌதமால—லை அண்டியுள்ள சியாபாஸ் மாநிலத்திற்கு வந்து சேர்ந்தனர். இவர்களில் பெரும்பாலோர் பெண்களும் பிள்ளைகளுமாவர். நாற்பத்திமூவாயிரம் அகதிகள் அகதிமுகாம்களிலும், ஒன்றரை லட்சம் கணக்கெடுப்பற்ற அகதிகள் மெக்சிக்கோ நகரிலும் அதன் தென்பகுதியிலும் வாழ்கின்றனர். பெரும்பாலான அகதிகள் "மாயன்" குடிமக்களாக இருப்பதினால் மெக்ஸிக்கோ அரசாங்கத்தின் கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளினால் பயத்துக்குள்ளாகி வாழ்ந்துவருகின்றனர்.

**ஒரு புரட்சி— ஒரு போர்**

1990 நடுப்பகுதியில் "மொஹாக்" பகுதி பூர்வீக மக்கள் கனடிய அரச படைகளிற்கும் பொலிஸ் படைகளுடனும் 77 நாட்கள் எதிர்த்துப் போராடினார்கள். "சியபாஸ் புரட்சி" போன்று இதுவும் 500 வருட காலமாக பிரயோகிக்கப்பட்டு வரும் காலனித்துவத்திற்கும், இன அழிப்பிற்கும் எதிராக தோன்றிய போராட்டம் ஆகும். "சியபாஸ் கிளர்ச்சி" போன்று "கஸஸ்டேக் புரட்சியும்" நிலச்சொந்தத்திற்காகவும் நாட்டின் இறைமைக்காகவும், சுதந்திரத்திற்காகவும் தோன்றியதொன்றாகும். மெக்ஸிக்கோ பூர்வீக மக்களைப்போன்றே கனடா பூர்வீக மக்களும் தங்களது பாரம்பரிய நிலங்களையும் தங்களது வாழ்க்கை முறைகளையும் இழந்து வருகிறார்கள். மெக்ஸிக்கோவைப் பொறுத்தவரையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை நேரடியாக அவர்களது பொருளாதாரத்தை தாக்குகிறது. சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் கனடாவின் பங்கு சக்தியையும், வளங்களையும் புதுப்பொருளாதார வலையத்திற்கு வழங்குவதாகும். 'சஸ்கச்சுவான்' மாகாணத்தில் உள்ள 'ஜேம்ஸ்பே' யில் பாரிய நீர்தேக்கத் திட்டங்களையும், அல்பேட்டா மாகாணத்தில் 'ஒல்ட்மான்' நதி பாரிய வேலைத்திட்டங்களும் பூர்வீக மக்களின் நிலங்களை சூறையாடும் திட்டங்களாகும். இவ்வாறான பல அச்சுறுத்தல், அடக்குமுறை, சூறையாடல், மனிதஉரிமை மீறல்கள் ஆகிய இன்னென்ன காரணங்களால்தான் பூர்வீக மக்கள் இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதப்புரட்சியொன்றை முன்னெடுத்தனர். பூர்வீக மக்களின் இந்த இக்கட்டான காலகட்டத்தில் அவர்கள் முழு ஒற்றுமையுடன் செயல்படுவது அவசியமாகிறது.

**மௌனம் சாவுக்கு சமன்!**


பூர்வீக மக்களின் மீது வன்முறை கட்டவிழ்த்து விட்டிருப்பதை எதிர்த்து குரல்கொடுப்பது மனிதநேயம் மிக்கவர்களின் உடனடிக்கடமையாகும்.

**மொழியாக்கம் — திரு நாகா**

## நீ அறியாத கோட்பாடுகள்

— சுகுமார் —

**எப்படி எம்மை கொலை**
**செய்வாய்?**
**வரிசையில் நிறுத்தி சுட்டுத்தள்ளி.**
**ஆந்தைகள் அலறும் இரவுகளில்**
**இருட்காடுகளில் நெருப்பை**
**உமிழ்ந்து**
**எம்மை கொலை செய்யலாம்.**



**பிறகும் அதிரவைத்த**
**குண்டுகளில்**
**உன்னோடு வந்தவர் துண்டாய்**
**சிதறப்**
**பொறி தெறித்து நீ ஆடிய**
**கணங்களில்**
**நிதர்சனமாயுன் முன் மறுபடி நாம்**
**தயவின்றி சுட்டுத்தள்ளுவாய்.**

**ஊர் ஊராய் நெருப்பின் நாக்கில்**
**எமது உடலை. உடமையை**
**கருக்கு**

**மதகின் கீழே வீசியெறிந்து**
**உயிருடன் தீயிடு.**
**பிறகும் நிலம் பிளந்து**
**நூறாய். ஆயிரமாய் வருவோம்**

**உனக்கு புரிவதில்லைதான்**
**ஒரு பூவில் இருந்து**
**நூறு விதைகள் உண்டாவது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மாத்தையாவும் மரண தண்டனையும்

93ம் ஆண்டின் தொடக்கத்திலிருந்து வதந்திகள் செய்திகளென மாத்தையாவிற்கும் தலைமைக்குமான முரண்பாடுகள் வெளிவரத் தொடங்கின. ஆயினும் மாத்தையாவின் விடயம் குறித்து மௌனம் சாதித்து வந்த புலிகள், அரசியல்கட்சி கலைக்கப் பட்டு மாத்தையாவும் மற்றும் சிலரும் வேறுபதவிகளுக்கு அமர்த்தப்பட்டிருப்பதாக அறிவித்தனர். இதைத் தொடர்ந்து புலிகளின் ஆலோசகர் பாலசிங்கத்தின் பேட்டி மாத்தையா— தலைமை முரண்பாட்டை வெளிப்படையாக்கியது. எனினும் 93ன் இறுதியில் புலிகள் உத்தியோகபூர்வமாக மாத்தையாவின் விடயங்களை அறிவித்தனர். புலிகளின் சாராசரி உள்முரண்பாடுகள் ஒரு புறமிருக்க இந்தியாவுடன் இணைந்து தலைமையைக் கொல்ல சதி! செய்தார் என்று இலங்கைப் படைகளுக்கு உளவு கொடுத்தார் என்றும் புலிகள் குற்றச்சாட்டுக்களைப் பகிரங்கப் படுத்தினர். ஆயினும் இது குறித்த விசாரணைகள் மூடுமந்திரமாக இருக்கும் நிலையில். உண்மை நிலையை அறிந்து கொள்வது கடினமே. எனினும் தலைமையின் மனோ பாவமாற்றங்களை நாம் அறியக் கூடியதாயுள்ளது. வழமையாக தலையில் போடும் பாணியை கடைப்பிடித்து வந்த புலிகள் மாத்தையாவின் விடயத்தில் பலத்த தயக்கத்தினையே காட்டி வருகின்றனர். மாத்தையாவிற்கு மரண தண்டனை வழங்குவதற்கு முன்பாக அதற்கான ஆதாரத்தை திரட்ட வேண்டிய நிலையிலும். அதற்கு எதிராக கிளம்பக்கூடிய சக்திகளை தடுக்க வேண்டிய நிலையிலும் உள்ளனர். இந்நிலையில் புலிகளின் சககட்சி உறுப்பினர்கள் உட்பட 600க்கும் மேற்பட்டோர் கைதாகியிருப்பதும். பலருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் புலிகளின் பிரச்சார சாதனங்கள் மாத்தையாவிற்கு வழங்கப்படவிருக்கும் தண்டனையை நியாயப்படுத்தும் விதத்திலான பிரச்சாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். "இந்தியாவுடன் மாத்தையாவின் உறவு" என்பதை வைத்துக் கொண்டோ அல்லது உள்முரண்பாட்டை தீர்க்கும் வழியாக கருதிக் கொண்டோ பார்ப்போமாகில்! இந்தியா தனது கைங்கரியங்களை மாத்தையாவினூடே செய்யமுயன்றதா? அல்லது நட்பு ரீதியான முரண்பாட்டை பகைமுரண்பாடாக்கி புலிகளின் கட்டுக்கோப்பை குலைக்க முற்பட்டதா என்று தெரியவில்லை. உள்முரண்பாட்டை தீர்ப்பதற்கான அரிய சந்தர்ப்பமான பூநகரித்தாக்குதலின் பின்பும் மாத்தையாவிற்கு எவ்விதத் தண்டனையும் அறிவிக்கப்படவில்லையென்பது தலைமை



வழமையாகச் செயற்படும் தன்மையில் தளம்பல் ஏற்பட்டுள்ளது என்பதைக் காட்டுவதோடு இதனையும் மீறி வன்னிப்பிராந்தியத் தளபதிகளை சந்தித்து "தூய புலிகள்" என்ற வகையிலான பிரச்சாரத்தில் நேரடியாக இறங்கியிருப்பது தலைமைக்குள்ள தலையிடியை புரிந்து கொள்ள கூடியதாயுள்ளது. விடுதலைப் புலிகளின் தலைமை உருவாக்கம் என்பது பல கொலைகளின் பின்னே தான் சாத்தியமாயிற்று. அதன் பிற்பாடு அத்தலைமையை தக்கவைக்க பல கொலைகளை செய்ய வேண்டிய கட்டாயமும் தலைமைக்கு ஏற்பட்டது. அதாவது புலிகளின் தாபன அமைப்பு முறையானது இவ்வகையான கொலைகளுக்கூடாகவே தலைமையை காப்பாற்ற வேண்டிய ஒழுங்கிலேயே உள்ளது. தலைமைப் பிரதியீடு என்பது தலைமையை கொலை செய்வதினூடே சாத்தியமாகும். இனி தலைமையை தக்கவைக்கவே மாத்தையா கொல்லப்படுவாரெனில் அதற்கு மாத்தையாவும் உடந்தையானதான். ஏனெனில் பிரபாகரனின் தலைமையை தக்கவைக்க பல கொலைகளை புரிந்தவர் அவற்றை நியாயப்படுத்தியவர் மாத்தையா. ஜனநாயக கட்டுக்கோப்பற்ற தாபனத்தில் மாற்றுக்கருத்திற்கும் விவாதத்திற்கும் பதில் கொலையே. தலைமைக்காய் கொலைகள் புரிந்தவர்கள் தங்கள் தலைக்கு ஆபத்து வந்தநிலையில் இவற்றை புரிந்து கொண்டிருப்பார்கள். ஆயுதங்கள் களையப்பட்டு அன்னியமாக்கப்பட்ட நிலையில் தனிமனித சுதந்திரத்தின் அவசியத்தை அறிந்திருப்பபார்கள்.

## தேர்தலும் கோமாளித்தனங்களும்

கிழக்கு மாகாணத்திலும். வடக்கில் வவுனியாவிலும் தேர்தல்கள் இடம்பெற்றுள்ளன. அரசியல் கோமாளித்தனம் மிகுந்தது இத்தேர்தல். தமிழ் மக்களின் பிரச்சனைகளை பயங்கரவாதப் பிரச்சனையாக கூறிக்கொண்டே செயற்படும் இந்த ஜனாதிபதியும், அவரது அரசும், தமிழ் மக்களின் பிரச்சனைகளை எந்தவிதத்திலும் விளங்கிக் கொள்ளாதவர்கள் அல்லர். மாறாக அவ்வாறான பிரச்சனைகளிற்கூடாக தம்மை தக்கவைக்கும் நிலையில் உள்ளவர்கள். எனவே இந்த அரசினால் தீர்வு ஒன்று வைக்கப் படுமா? என்ற கேள்வி இங்கு தேவையில்லை. தெற்கின் சந்தர்ப்பவாத அரசியலே இன்றைய தமிழ்மக்களின் போராட்டம் என்பதை பலரும் அறிந்திருந்தும் அதற்கான உண்மையான தீர்வை முன்வைக்க எந்தத் தென்னிலங்கை அரசியல் கட்சிகளும் முன்வராதது அரசியல் சந்தர்ப்பவாதத்தை நிறுவிக்கொண்டே இருக்கிறது. அதுதவிர நடந்த தேர்தலில் தமிழ்கட்சிகள் கலந்து கொள்வதில்லை என்று அறிவித்திருந்த போதும் "புளொட்டின் அரசியல் கட்சியும் மற்றும் சில "கயேழ்சைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழுக்களும்' தேர்தலில் கலந்து கொண்டுள்ளன. இந்தத்தேர்தலின் பின்னணியை அறிந்திருந்தும் சில தமிழ் அரசியல் கோமாளிகள் இன்னும் எதனையோ சாதிக்கப் போவதாக கூறிக்கொள்வது சிரிப்பாகவேயுள்ளது. மொத்தத்தில் சுதந்திரமான சூழ்நிலையில் இடம்பெறாத இத்தேர்தல்கள் எதனையுமே சாதிக்கப்போவதில்லை.

### தமிழர்களும் உடையலங்காரங்களும்

அண்மைக்காலமாக தமிழர்கள் நிகழ்த்தும் கலை நிகழ்ச்சிகளில் ஒரு அம்சமாக அமைவது ஆடை அலங்காரம் ஆகும். ஆடை அலங்காரத்தின் தோற்றம் வியாபார ரீதியான விற்பனைத் தந்திரங்களில் ஒன்று. ஒரு நிறுவனமோ, தனிநபரோ தமது தயாரிப்பினை மாடல்களுக்கு அணிவித்து தமது தயாரிப்புகளை வெளிக்கொணர எடுக்கும் முயற்சி அழகியல் சார்புடையது. ஆயினும் ஒரு சமூகத்தின் ஆடை அணி அலங்காரம் என்பது வெறுமனே ஆடைஅலங்காரமாக அல்லாது கலாச்சார சரித்திரபின்னணிகள் சார்ந்தது. வெறுமனே இயற்கையில் இருந்து தன்னை காப்பாற்ற உடைகளை அணியத் தொடங்கிய மனிதன் பிற்பாடு சமூகத்தின் அந்தஸ்தை வெளிக்காட்டுவதற்காகவும் தனது ஆடை அணியினை மாற்றியமைத்தான். எமது சமூகத்தில் சாதி வாரியாக கூட ஆடையலங்காரங்கள் அமுலில் இருந்தது. அது ஒரு புறமிருக்க தமிழர்களின் ஆடை. அணிகள் என்ன? தமிழர்களின் கலாச்சார பின்னணி என்ன? தற்பொழுது தமிழர்களாகிய நாம் அணியும் ஆடைகள் தமிழர்களுடையதா? என்பதான பல கேள்விகள் எழுகின்றன. இவ்வாறான கேள்விகளுக்கு பதிலளிப்பதாயின் நீண்ட வரலாற்றுப் பார்வையுடையவர்களாக இருத்தல் வேண்டும். உண்மையில் எமது சமூகத்தில் பல விதமான பிறபாதிப்புகள் இருந்திருக்கின்றன. பாரசீக மேலைத்தேய தொடர்புகள ' ஆரியமதம் (இந்துமதம்) என்பன பொதுவாக திராவிடர்களின் உடையலங்காரங்களில் மாற்றங்களை ஏற்படுத்தியது. தற்போது தமிழர்கள் கலாச்சாரமாய் கருதி வருவது இந்துமத கலாச்சாரத்தையே. எனவே தமிழர்களின் கலாசாரம் என்ன? என்ற கேள்வி நோக்கி நிற்கின்றது. எனவே தமிழர்களின் உடையலங்காரம் என்று கூத்துப் போடுவதை விட்டுவிட்டு கலாச்சார வரலாற்றுப்பின்னணிகள் தொடர்பானறை அறிந்து தமிழர்களின் அணி ஆடை அலங்காரத்தை விவரணமாக செய்யின் தமிழுக்கும் தமிழருக்கும் உதவியாக இருக்கும்.

### பூர்வீகக்குடிகளும் வட அமெரிக்காவும்

1990 இன் வசந்தகாலப் பகுதிகளில் "ஒக்கா" பகுதிகளில் நடந்த சம்பவங்களை நினைவில் கொள்ளுவோம். ஒக்காவில் உள்ள — "கொல்வ்ஜி" ஆடும் திடலுக்காக — அதனை விஸ்தரிக்கும் நடவடிக்கையாக பூர்விக நிலத்தை ஒக்கா நகரசபை தாரைவார்த்தது . அதை எதிர்த்து "மெர்சியேஜி" பாலத்தை (மொன்றியலையும் பிற பகுதியையும் இணைக்கும் ஒட்டாவா ஆற்றின் மேல் போடப்பட்டுள்ள பாலம்) பாலத்தை தடை செய்தார்கள். ஒக்காவில் குறிப்பிட்ட நிலத்திற்கு வரும் பாதை ஒன்றையும் தடைசெய்தனர். இந்த போராட்டம் 78 நாட்கள் வரை நீடித்தது. ஆயுதம் ஏந்திய மொகாக் போராளிகள் ஒருபுறமும் கனடிய இராணுவமும்: சகல தாக்குதல் சாதனங்களும் மறுபுறமும என அந்த நாட்கள் நீண்டன. இதைத்தவிர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகளில்கூட அரசு சரியான முடிவுகளைக் கொண்டிருக்கவில்லை. பின்பு படிப்படியான இராணுவ நெருக்கடியாலும். அடிப்படைவசதிகள் தடை செய்யப்பட்ட நிலையிலும் ஒக்கா போராளிகள் தமது போராட்டத்தை கைவிட்டனர். பின்னர் அவர்கள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டனர். இந்த ஒக்கா மக்களின் போராட்டமானது 370 வருட கால பழமை வாய்ந்தது. மொன்றியல் தீவில் குடியிருந்த மக்கள் பிரஞ்சு மத பீடங்களின் வருகையின் பின்னர் மொன்றியல் தீவிலிருந்து அகற்றப்பட்டு ஒட்டாவா ஆற்றுக்கு அப்பால் "கனசடாக்கே" என்னும் இடத்தில் குடியமர்த்தப் பட்டனர். அதன் பின்னர் பிரித்தானியர்களின் வருகையின் போது தமக்கு அடிபணிய வேண்டும் அல்லாவிடில் தாக்குதல் நடாத்தப்படும் எனும் மிரட்டல்களும் பூர்வீககுடிகளிற்கு சொந்தமான வேறு நிலங்களும் பறிக்கபபட்டன. ஆயினும் மேலும் நிலங்களை ஐரோப்பியர் பறித்தலுக்கு எதிராக மக்கள் போராடி வந்துள்ளனர். இதன் போது பலர் கொல்லப்பட்டனர் இன்னும் பலர் ஐரோப்பியர்களின் சிறைகளில் வாட நேர்ந்தது. இன்றும் அதே வகையாக இராணுவ துன்புறுத்தல்களையே அம்மக்கள் சந்திக்க நேர்ந்தது.

நவீனஉலகில் மனித உரிமைகளை மதிக்கும் நாடாக மார்தட்டும் கனடாவின் இந்நடவடிக்கைகள் மனித உரிமை அமைப்புகளால் கண்டிக்கப்பட்டன. இந்த 78 நாள் பூர்வீகக்குடிகளின் போராட்டத்தை முறியடிக்க் கனேடிய. கியூபெக் அரசுகள் 150 மில்லியன் டொலர்களை விரையமாக்கின. அது மட்டுமல்லாது பூர்விக இந்தியர்களை இரண்டாம்தரமாக பாவிப்பவதும் அவர்கள் சமூக. அரசியல். பொருளாதார நிலைகளில் சுரண்டப்படுகின்றார்கள் என்ற விடயமும் பிரபல்யமானது. கனடாவில் பூர்விக மக்களுக்கு தம்மைத் தாமே ஆளக்கூடிய "சுயஅரசுஜி" என்ற நிர்வாக ஊடகத்தை கனேடிய அரசு கருத்தில் கொள்ளுமளவிற்கு இப் போராட்டம் வலிமையுடையதாக அமைந்தது. இப்போராட்டம் நடந்து மூன்றாண்டுகள் போயின. 1994 ல் ' மெக்சிக்கோவில் சியாப்பஸ் மாநிலத்தில் பூர்வீகக்குடிகள் போராட்டத்தில் இறங்கினர். 1994 ஜனவரி 1ம் திகதி அமுலில் கொண்டு வரப்பட்ட வட அமெரிக்காவின் சுதந்திரவர்த்தக வலயத்தை கண்டிக்கும் வகையிலும் நெடுங்காலமாக மறுக்கப் பட்டு வந்த அடிப்படை உரிமைகளிற்காகவும் மெக்ஸிக்கோ பூர்விக இந்தியர்கள் இப்போராட்டத்தில் குதிக்க வேண்டி ஏற்பட்டது. மாயா இந்தியர்களான இவர்களது அமைப்பானது "சாப்டிஸ்டாஜி தேசிய இராணுவம் என்று அழைக்கப்படுகிறது. (EZLN) 1492 கொலம்பஸ்ஸின் அமெரிக்க வருகையின் பின்னர் தொடரும் பூர்விக இன அழிப்பும் அவர்களின் நிலங்கள் பறிக்கப் பட்டும் வரும் இந்நிலையில் அவர்களது எழுச்சியானது 500 வருடப்பழமை வாய்ந்தது. மெக்சிக்கோ அரசு இந்தியர்களின் கோரிக்கைகள் குறித்து சாப்பனிஸ்டா போராளிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருப்பது எழுச்சியின் வெற்றியே.

### மஞ்சரியும் மாரீசமும்

முன்பு செந்தாமரையோடு வந்து கொண்டிருந்த மஞ்சரி தற்போது தாமரைக்குத் தண்ணீர் காட்டிவிட்டு வெளியே வந்துவிட்டது. இது பலரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

எதிர்பார்த்த நிகழ்வுதான். மஞ்சரியின் ஆசிரியரும் அதே டி.பி. எஸ். ஜெயராஜ் தான். இருபது வருட கால பத்திரிகை அனுபவம் வாய்ந்தவர் அதனால் எந்த நேரத்தில் எதற்குத் தண்ணீர் காட்டுவது எதற்கு எண்ணை தடவுவது என்று நன்றாக அறிந்தவர். சரி அது ஒருபுறம் இருக்கட்டும் "சுபமங்களா" மார்கழி 93 இதழில் "கனடாவில் தமிழ்" என்ற தலைப்பில் மகரந்தன் என்பவர் கட்டுரை எழுதியிருந்தார். இதில் பெரும்பாலும் தமிழர் வகைதுறைவள நிலையத்தின் செயற்பாடுகள் பற்றியே குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னொரு வகையில் தேடகத்தின் துதி பாடல் என்றும் சொல்லலாம். இக்கட்டுரையை வாசித்த அனைவருக்கும் இவ்வகையான உணர்வே ஏற்படும். தேடகத்தைப் பற்றி எழுதிய விடயங்கள் உண்மையாக இருப்பினும் "கனடாவில் தமிழ்" என்னும் தலைப்பில் தனியே தேடகத்தைப் பற்றி எழுதியிருக்கக் கூடாது. ஆயினும் இது குறித்து மஞ்சரியில் "எமது எண்ணமிது" பகுதியில் "கனடாத்தமிழரின் மானம் காக்க புறப்பட்ட மாவீரன்" விளாசல் ஒன்று விடப்பட்டிருக்கிறது.

ஐயா காவலரே!

உலகத்தமிழர். உலகத்தமிழர் இயக்கம் என்றெல்லாம் பெயரை வைத்துக் கொண்டு புலிப்பணி மட்டும் செய்து கொண்டிருப்பவர்களை உங்களுக்கு தெரியவில்லையா? கனடாத் தமிழரின் மானம் காக்கப்புறப்பட்ட நீங்கள்! உலகத் தமிழரும் தாங்களோ, ஈழத்தமிழரும் தாங்களோ. கனடாத் தமிழரும் தாங்களே. புலிகளும் தாங்களோ என்று வால் நீட்டித்திரிபவர்கள் எவ்விதம் உங்கள் கண்களிற்கு புலப்படாமல் போனார்கள். உங்கள் மானம் பொத்துக்கிட்டு வரவில்லையா? இவர்களும் "புலித்தமிழர்" இயக்கம் . "புலித்தமிழர்" என்று பெயரை மாற்றிக் கொள்ள வேண்டியதுதானே என ஆலோசனைகளை எடுத்துவிடலாமே. எங்களுக்குத் தெரியுமே "இந்தவிசயங்களில் மானம் பொத்துக்கிட்டா உங்க உடம்பு புண்ணாயிடும் ஐயா நீங்க சொன்னீங்களே மாசீசம் அது உங்களுக்கும் நிச்சயமாய் வடிவாய் பொருந்தும்.

# கருவுக்கு உயிர் உண்டு



# அழித்தால் கொலையில்லையாம்

**கருக்கலைப்பு உயிர்க்கொலையா? என கனடாவிலிருந்து வெளிவரும் தேடலில் சலிர் கேட்டு முடிவில் அது உயிர்க் கொலையில்லை என வாதிட்டுள்ளார்.**

நாம் சமர் 5. 6 ல் சுட்டிக்காட்டிய அரசியல் காரணங்களை விமர்சிக்காமல் நழுவி தனது நிலையை புதிய ஒரு பிரச்சனைக்கூடாக நியாயப்படுத்த முனைந்துள்ளார். ஒரு கருத்தின் மீதான விமர்சனத்தை ஒரு விமர்சகர் மறுதாப்பாக எழுப்பும் அனைத்து விடயங்கள் மீது வைப்பதன் மூலமே தனது கருத்தை நிலைநாட்ட வேண்டும். இதுவே ஒரு கருத்தின் மீதான விமர்சனப் பண்பு. சமர் 7 இலும். சக்தி. அ.ஆ.இ. க்கு எழுதிய கருக்கொலை தொடர்பான எமது கட்டுரைகள் இவர் எழுப்பும் பல பிரச்சனைகளுக்கு பதிலும் அளித்துவிடுகிறது. இவர் புதிதாக எழுப்பும் பிரச்சனைகளைப் பார்ப்போம். இக் கட்டுரையில் கருவில் உள்ள குழந்தைக்கு உயிர் உள்ளது என்று ஏற்றுக்கொண்டு. இது பெண்ணின் உடல். உள சம்பந்தப் பட்டது எனக் கூறி கருவைக் கொலை செய்யமுடியும் எனவும் கூறியுள்ளார். இவர தனது கட்டுரையில் உயிர் பற்றி விளக்க முற்பட்டவர். பின் உயிரை சமூகத்தொடர்புடன் மட்டுப்படுத்தி கொலை செய்யமுடியும் எனவாதிட்டுள்ளார். உயிரின் தோற்றத்தை அசேதன. சேதன உருவாக்கமும் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட இரசாயன மாற்றத்துடன் மட்டும் தொடர்புபடுத்தி கூறி உயிரியல் விதியை நிராகரித்துள்ளார்.

**உயிர் என்பது உணவா? ஆம் எனின் உயிர் என்பது வெளியில் இருந்து உடலில் உட்புகும் ஒரு நிகழ்வு அல்ல. உயிர் என்பது பொருள்சார்ந்தது. இதை விரிவாகப் பார்ப்போம்.**

உலகில் இன்று 15லட்சத்துக்கு மேற்பட்ட விலங்கு இனங்களையும். 5லட்சத்து மேற்பட்ட தாவர இனங்களையும் மனிதன் கண்டுபிடித்துள்ளான். இவைகளில் 4000 பாலூட்டி விலங்குகளையும் கண்டுள்ளான். தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை நாம் பார்ப்போம். "தாவரங்கள் மண்ணில் வேர்களை ஊன்றி நாற்புறமும் சிதறியுள்ள அனைத்து உணவை உட்கொள்வதன் வாயிலாக இடத்தை விட்டு அசையாமலே தங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளமுடியும். விலங்குகளோ தங்கள் உணவைத்தேடி வெகுதூரம் செல்வது அவசியமாய் இருக்கிறது. இடைவெளியில் இயங்குவது பெரும்பாலான விலங்குகளைத் தாவரத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டும் சிறப்பியல்பாகும்." விதை என்பது ஒரு உயிரமைப்பு" இதனுள் வளர்ச்சி மாற்றமும். மற்ற மாற்றங்களும் இடையறாது நடை— பெற்று வருகின்றது.

"ஒவ்வொரு விலங்கின் உடலுக்குள்ளும் உயிர்ப்பொருள் இரசாயன மாற்றம் நிகழ்கிறது. அவை எல்லாம் இனப்பெருக்கமும் செய்கின்றன. தமக்குப் பின் சந்ததிகளை விட்டுச்செல்கின்றன. எல்லாவற்றிற்கும் உடல் உயிரணுக்களால் (ஓரணுவுயிர்களுக்கு ஓர் உயிரணுவாலும். மற்றவற்றிற்குப் பல உயிரணுவாலும்) ஆனது.

ஒவ்வொரு விலங்கும் தன்னைப் போன்றவற்றை உற்பத்தி செய்கிறது. சந்ததிகள் தங்கள் பண்புகளை மரபு வழியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெறுகின்றன. ஆனால் எல்லாம் ஒரே மாதிரி இருப்பதில்லை. சந்ததிகளின் வளர்ச்சி எந்த நிலமைகளில் நிகழ்கிறதோ அந்தநிலமைகள் அவற்றின் "பல்வகைப்பாட்டில்" பெரிதும் பாதிப்பு ஏற்படுத்துகின்றது.

பூமியில் முதன் முதலாக நிலவிய பிராணிகள் ஓரணுவுயிர்களே. இவற்றின் உயிர்ச்செயல்முறை முழுவதும் ஒரே உயிரணுவில் நிறைவேறிவிடுகிறது. ஓரணுவுயிர்களிலிருந்து பல்லுயிரணுப் பிராணிகள் தோன்றின. சிக்கலான கட்டமைப்புள்ளவை உட்பட எல்லா பல்லுயிரணுப் பிராணிகளும் தங்கள் வளர்ச்சியை ஒரே உயிரணுவிலிருந்துதான் தொடங்குகின்றன என்பதே. கருவுறல் நிகழ்ந்த பின் இந்த உயிரணு பன்முறை பலவாகப் பிளவுறுகிறது. விளைவாகப் பல்லுயிரணுக்கள் கொண்ட முளைக்கரு உருவாகிறது. இதுதான் முதிர்ந்த பிராணியாக வளர்கிறது.

மனித உடல் உயிரணு பிளவுபடுவதை மைக்ரோபிலிமின் துணையுடன் பார்க்கமுடியும். மனித உடலில் இந்த உயிரணு பிளவுறும் நிகழ்ச்சி ஒரு மணிநேரம் முதல் இரண்டு மணி நேரம் வரை நிகழ்கிறது. அதன் உட்கரு இரண்டாகப் பிளவுபடுகிறது. ஆனால் உயிரணு என்னமோ அப்படியேதான் இருக்கிறது. இந்த மாற்றம் முடிவுற்று விடுகிற தருணம் வந்தவுடன் பழைய உயிரணு மறைந்த அந்தஇடத்தில் புதிய இரண்டு உயிரணுக்கள் தோன்றுகின்றது.

மனிதன் வெறும் இயந்திரம் அல்ல. அவன் சிந்தனை செய்கிற உணர்ச்சி அடைகிற ஓர் உயிர்ப் பிராணி. சிந்தித்துப்பார்க்கும் எவரின் ஆன்மீகப் புலப்பாடுகள் பொருள் வகைப் புலப்பாடுகளே.
மனிதன் (மரண மயக்கத்திலும். புலன் கடந்த நிலையிலும்) உணர்வற்று இருப்பதை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். ஆயினும் மனிதன் இல்லாமல் சிந்தனை மட்டும் இருந்ததை யாரும் எங்கும். எப்பொழுதிலும் கண்டதில்லை. இரண்டாவதாக நம்ப முடியாத ஒன்று. அதாவது பொருள்வகை

ஆதாரம் இன்றித் தனியாக சிந்தனை மட்டும் இருக்க முடியாது.
உயிரணுப் பொருட்களில் புலனுணர்வோ சிந்தனையோ இருப்பதற்கான அடையாளங்கள் எதையும் விஞ்ஞானிகள் என்றுமே காணவில்லையாதலால் உணர்வு தோன்றுவதற்கு இன்றியமையாத முதல்தேவை உயிர்தான் என்று முடிவு செய்கிறது விஞ்ஞானம். பூமியில் உயிர் எப்பொழுது தோன்றியது? பூமியின் புறத்தோட்டின் வயது சுமார் நாலு கோடி ஆண்டுகள். சுமார் ஆறு கோடியே தொண்ணூறு லட்சம் ஆண்டுகள் முதல் பத்துலட்சம் ஆண்டுகள் வரை உள்ள காலத்திற்கு முன்பு பாலூட்டிகள் தோன்றின விலங்கு உலகத்திலிருந்து மனிதன் பிரிந்த நிகழ்ச்சி 50இலட்சம் முதல் 10 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்தது.

பருப் பொருளினுடைய இயக்க வடிவங்கள் பண்பாவில் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டவை. எந்த ஒரு வடிவத்தையும் மற்றொன்றுக்கு மாற்ற முடியாது. உதாரணமாக பிராணி உடலிலும் . பிராணி உலகிலும் வெவ்வேறு இனங்கள் உண்டாக்குகின்ற நிகழ்ச்சிப் போக்குகளிலும் இரசாயன விளைவுகள் பிரம்மாண்டமான பங்கு வகிக்கின்றனவாயினும் பிராணிகளின் வாழ்க்கையை இயக்கத்தின் ஒரு இரசாயன வடிவ இயக்கம் என்று கூறமுயல்வது கொச்சைத் தனமான தவறாகும். உயிரற்ற இயற்கையில் செயற்படாத உயிரியல் விதிகள். உயிர் தோன்றியதோடு அமுலுக்கு வந்து விடுகிறது. உயிர் என்பது பருப்பொருளின் இயக்க வழக்கங்களில் ஒன்றாகும்.

பருப் பொருளினது வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்திலும் இரசாயன நிகழ்ச்சிப்போக்குகள் மேலும் சிக்கலுற்றதாலும் பூமியில் உயிர் வாழ்க்கை தோன்றியது. இது பருப் பொருளினுடைய இயக்கத்தின் ஒரு புதிய வடிவமாகும். பருப் பொருளின் சிக்கலான இயக்கவடிவங்கள் எளிமையான இயக்க வடிவங்களின் வெறும் கூட்டுச் சேர்க்கையல்ல. எந்த ஒரு இரசாயன எதிர் விளைவுகளையும் தம்முள் மின்காந்த நிகழ்ச்சிப் போக்குகளையும் இதர பௌதீக நிகழ்ச்சிப் போக்குகளையும் கொண்டிருக்கிறது.

உயிரணுக்களை அமைக்கும் மூலகக் கூறுகளினால் மரபுவழி இயல்புகள் செயல்படுகின்றன என்றும் தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒரு பிராணி உயிரோடு இருக்கிறதா? இல்லையா? என்பது நமக்குத் தெரியும். சந்தேகத்திற்கு இடமின்றி இதை நிச்சயமாக சொல்ல முடியும். ஆனால் நெருங்கிச் சென்று ஆராய்கையில் பல சந்தர்ப்பங்களில் இது மிகச் சிக்கலான பிரச்சனையாவதைக் காண்கிறோம். சட்டத் துறையினர் இதை நன்கு அறிவர். கர்ப்பமடைந்த தாயின் வயிற்றிலிருக்கும் சிசுவைக் கொல்லுதல் எந்த வரம்புக்கு அப்பால் கொலைக்குற்றமாகிறது என்று அறிவுக்குகந்த ஒரு வரம்பை வகுத்திட இவர்கள் எவ்வளவோ மண்டையுடைத்தும் பயனில்லை. மரணம் உண்டாகும் தருணத்தை முழு உறுதியுடன் நிர்ணயிப்பதும் இதே போல முடியாத காரியமே. ஏனெனில் மரணம் திடுமென உடனடியாக நடைபெறும் நொடி நேர நிகழ்ச்சியல்ல. நீடித்தவொரு நிகழ்ச்சிப் போக்கு என்பதை உயிரியல் நிரூபித்திருக்கிறது. இதே போல் உயிருள்ளது எதுவும் இதே முறையில் ஒவ்வொரு கணமும் அதுவாகவும் அதேபோல் அதுவல்லதாகவும் இருக்கிறது. ஒவ்வொரு கணமும் அது ஒரு புறத்தே இருந்து தரப்படும் பொருளைக் கிரகித்துக் கொள்கிறது. பிற பொருளை தன்னுள்ளிருந்து வெளியேற்றுகிறது.

சேதன. அசேதன பொருட்களின் தோற்றத்துடன் . அமினோ அமிலங்களின் செயற்பாட்டுடன் உயிரை வரையறுத்தவர் கருவிலுள்ள உயிருக்கும். குழந்தை பிறந்தபின் உள்ள உயிருக்குமான வேறுபாட்டை காட்ட முடியாது போயுள்ளனர். ஆனால் குழந்தை பிறந்த பின் குழந்தை சமூகத்துடன் தொடர்பு கொள்ளும் வரையுள்ள கருவை கொல்லுதல் உயிர்க் கொலையல்ல என வாதிட்டுள்ளனர். சமூகத்துடன் தொடர்புகொள்ளும் போதே கருவில் உள்ள உயிர் பூரணமனிதனாகிறது எனக்கூறி கருக் கொலையை நியாயப்படுத்த புதிய வழியைத் தேடியுள்ளனர். சமூகத்துடன் தொடர்பு கொள்ளமுன் உள்ள கருவில் உயிரைக் கொன்றாலும் அது உயிர்க் கொலை அல்ல என வாதிட்டுள்ளனர். எந்த உயிராக இருந்தாலும் அது உயிராக உள்ளவரை அது உயிர்க் கொலைதான்.

கரு. விதை என்பன ஒரு உயிர்த்தொகுதியே. இவைகளில் உருவாக்கம் என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கான மூலக்கூறுகளின் இணைப்பின் பின்பே. உலகில் உள்ள அனைத்து பொருட்களும் தமக்குள்தாம் இயங்கிக் கொண்டுதான் இருக்கின்றன. உயிர் உள்ள பிராணிகள் இயங்கும் போது அது உயிரியல் விதிக்கமைய இயங்குகின்றன. உயிர் என்பது உயிரணுவினால் ஆனது. இவ்வுயிரணு இரசாயன மாற்றத்திற்குள்ளாகின்றது. இதை வெறும் இரசாயன மாற்றம் மட்டும் என வரையறுத்துவிட முடியாது. ஏனெனில் உயிரற்ற இயற்கையில் இதே இரசாயன மாற்றம் நிகழ்த்தப்படாது இருக்கும் போது அது உயிராக மாறியவுடன் இவை அமுலுக்கு வருகிறது. எனவே இங்கு இரசாயன மாற்றத்துடன் உயிரியல் விதியும் இணைந்தே உயிரை உருவாக்குகிறது.

உயிருள்ள ஒரு பிராணி கருவுறல் நிகழ்ந்தபின்பு உருவாகும் கருவில் உயிரணு பலமுறை பலவாகப் பிளவுறுகிறது. ஒரு உயிரணுவின் பிளவின் போது அது இரண்டாகப் பிளவுற்று இரண்டு உயிரணுக்களை உருவாக்குகின்றது. இது தொடர்ச்சியாக நிகழ்ந்து பல உயிரணுக்களைக் கொண்ட மூளைக்கரு உருவாகின்றது. இது ஒரு முதிர்ந்த பிராணியின் வளர்ச்சியாகும். இவ்வுயிரணுபிளவு என்பது கருவின் உருவாக்கத்திலிருந்து மனிதனின் இறப்பு வரை எந்த மாற்றமுமின்றி தொடர்ச்சியாக நிகழ்கின்றது. கருவில் உள்ள உயிரணுவிற்கும் மனிதனில் உள்ள உயிரணுவிற்கும் இடையில் எந்த வேறுபாடும் கிடையாது. இரண்டும் உயிரிற்கான பண்பைக் கொண்டு இருப்பதுடன் அதற்கான செயற்பாட்டையும் கொண்டுமுள்ளது.

கரு செயற்படாத ஒரு ஜடமல்ல. கரு ஒரு இயந்திரமுமல்ல. கரு தனக்கேயுரிய உயிரியல் செயற்பாட்டை கொண்டது. இது மனித செயற்பாட்டுக்குரிய உயிரின் அணுவுக்கும் கருவிலுள்ள உயிரியல் அணுவுக்கும் இடையில் எந்த வேறுபாடும் கிடையாது. கரு உணர்தல். கேட்டல். . . என அனைத்தும் கருவிலுள்ள குழந்தைக்கும் உண்டு. கரு தனது சூழ்நிலைக்கு ஏற்பவும் மனிதன் தனது வெளிச்சூழ்நிலைக்கு ஏற்பவும் இயங்கும் தன்மையில் சில வேறுபாடுகளைக் கொண்ட போதும் பல ஒத்த செயற்பாட்டைக் கொண்டுள்ளது. கருவில் உள்ள குழந்தைக்கு தாயின் வயிற்றின் ஊடாக இசைகளைச் செலுத்தும்போது அக்குழந்தை அதைக்கேட்டு வருவதும் பிறந்தபின் மற்றைய குழந்தைகளை விட இசை தொடர்பாக முன்னேறிய தன்மைகொண்டிருப்பதை இன்று விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது.

கரு இன்றி ஒரு மனிதன் உருவாகமுடியாது. உதாரணமாக தவளையை எடுப்பின் அதன் வளர்ச்சியில் எத்தனை மாற்றம். வாற்பேத்தையை தவளை இல்லை என வாதிட முடியுமா? வாற்பேத்தையின்றி தவளை இல்லை வால்பேத்தையை கொல்லமுடியும். ஆனால் தவளையை கொல்ல முடியாது என வாதிடல் எவ்வளவு நகைப்புக்கு இடமானது. உயிரியத்தின் தோற்றம் என்பது வெவ்வேறு நிலமைகளில் உருவாகின்றன. அவைகளின்றி ஒரு உயிரினம் உருவாகமுடியாது. குழந்தைக்கான கருவின்றி குழந்தை உருவாகமுடியாது. குழந்தை ஒரு உயிர்தான் எனின் கருவும் ஒரு உயிர்தான். யாராவது கருவை உயிரில்லையெனச் சொல்ல முடியுமா? கருவை உயிரில்லையெனச் சொல்பவர்கள் கருத்துமுதல் வாதிகள். ஒரு கரு உருவாகமுன்பு ஆண் விந்தும் பெண் முட்டையும் ஒரு உயிர்தான். ஆனால் அவை தனித்தனியுள்ளவரை அவை குழந்தையின் உயிரல்ல. இரண்டும் சேரும்போது மட்டுமே அது குழந்தை உயிராக மாறுகிறது. உதாரணமாக நீர் என்ற மூலக்கூறு $H_2O$ வாகவுள்ளது. இங்கு ஐதரசன் (H). ஒட்சிசன்(O) சேரும் போது நீர் ($H_2O$)உருவாகிறது. இது சேராதபோது H ஆகவும் O ஆகவும் மூலக்கூறுகளாக வேயிருக்கும். இவை இயற்கைக்காக ஒட்சிசன் ஒன்று தொடர்பு பட்டபடியிருந்தபோதும் $H_2O$ ஆக மாறிவிடுவது இல்லை. அதற்கான சூழ்நிலை உருவாகும் போது மட்டும் $H>0$ மூலக்கூறுகள் இணைந்து $H_2O$ உருவாகுகின்றது. இவை போலத்தான் ஆணின் விந்தும். பெண்ணின் முட்டையும் சரியான சூழ்நிலையில் இணையும் போது மட்டும் கரு உருவாகின்றது. இந் நிகழ்வின் பின் இக்கரு ஒரு குழந்தைக்கான உயிராகும். ஏனெனில் இப்படி உருவாகும் எல்லாக் கருவும் நிச்சயமாக ஒரு மனிதனை உருவாக்குகின்றது. கருக் கட்டலின் பின் உட்புகுவதில்லை. கருவில் உள்ள உயிர் அதுவாக உருவாகின்றது.

சுனிம் சமூகத் தொடர்பின் பின்னரே முழுமையான மனிதன் என பார்க்க முடியும் என வாதிட்டுள்ளார். அதே உயிர் கருக்கட்டலிற்கு பின் உட்புகுவது இல்லை எனவும் கூறியுள்ளார். இங்கு உயிர் தொடர்பான வாதம் ஒரு நியாயப்படுத்தலுக்காக கையாளப்பட்டுள்ளது. கரு உருவாக்கத்துடன் கரு உயிரைக் கொண்டுள்ளதை ஏற்றுள்ளார். ஆனால் அதை அழித்தால் உயிர்க் கொலையில்லை என்கிறார். இவரின் கட்டுரையில் உயிரை வரையறுக்கும் போது சேதனச் சேர்வைகளில் காணப்பட்டுள்ள அமினோ அமிலச்சேர்வையுடன் அதற்கு உள்ளேயே உள்ளது என வாதிட்டுள்ளார். ஆனால் கட்டுரையில் குழந்தைக்கு உயிர் இல்லை என்று பதில் கொடுக்கும் வகையில் முரண்பட்டுக் கொண்டே விவாதிக்கிறார். குழந்தையும் இவரின் பார்வையின் படி சேதன அமைப்பில் உள்ள அமினோ அமிலங்கள்தானே.

ஒரு பூரண மனிதனின் வளர்ச்சியை குழந்தை பிறந்து சில காலத்தில் பெற்று விடுவதாகக் கூறி உயிரியல் இயங்கியல் விதியையே நிராகரித்துள்ளார். ஒரு குழந்தையின் தோற்றத்தினை சமூகத் தொடர்பின் பூரணமடைந்து விடுவதாக கூறி அதன் பின் குழந்தையைக் கொல்ல முடியாது என்கிறார். சமூகத் தொடர்பின் பின்னர் அக் குழந்தைக்குள் உயிர் உட்புகுவது இல்லையோ. அதே போல் பூரண மனிதனுக்குள்ளும் (சுனிம் கருதியபடி )உயிர் என்ற ஒன்று உட்புகுவதில்லை. எப்படிக் கொலை இந்த இடத்தில் கருதிக் கொள்வது. உயிர் என்பது பல உயிரணுக்களால் ஆனது. அது ஒரு மனிதனுக்குள் திடீரென உட்புகுவதில்லை. அது கருவில் இருந்தே இருப்பவையே. இங்கு இவ்வுயிரணுவை எப்போது கொன்றாலும் அது கொலையே.
சமூகத் தொடர்பு. சூழல் எனப் பார்ப்பின் அவை புறவயமாகக் குழந்தைக்குக் கிடைத்திருப்பவையே. புறவயமான இச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்பாட்டை சலீம் கூறி இதை வைத்துக் கொண்டே கொலைக்கான விளக்கத்தை கொடுத்துள்ளார். புறவயமான இந்த சில நிலமைகள் இன்று கருவில் உள்ள குழந்தை பெறுவதை இன்று விஞ்ஞானிகள் நிறுவியுள்ளனர். ஒரு இசையை தாயின் வயிற்றில் செலுத்தும் போது கருவில் உள்ள குழந்தை அதைப் பெற்றுக் கொள்கிறது. அக்குழந்தை பிறந்தபின் இசை தொடர்பான மற்றக் குழந்தைகளை விட முன்னேறிய நிலையை அக்குழந்தை அடைந்திருப்பதை இன்று விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது. புறவயமாக குழந்தை சந்திக்கும் நிலையை தாயின் வயிற்றில் இருக்கும் போதே உணர்கிறது.

இன்று சோதனைக்குளாய்கள் மூலம் மூன்று மாதம்வரை கருவைப் பாதுகாக்க முடிந்துள்ளது. அதுபோல் தாயின் வயிற்றில் இருந்து 6 மாதத்திற்குப் பின் எடுத்த குழந்தையையும் பாதுகாக்க முடிந்துள்ளது. புறவயமான ஒரு நிலமைதான் குழந்தையைக் கொல்லுதல் என்ற வரையறை. தனது கருத்தைப் பாதுகாக்க கண்டு பிடித்த ஒரு குறுக்குவழியே. இது எந்த விஞ்ஞான ஆதாரமற்ற கற்பனையான ஒரு கனவே.

"அபிவிருத்தி அடையாத நாடுகளில் பட்டினி பற்றாக்குறைகளுக்கு பிரதான காரணங்கள் மேலாதிக்கம். சுரண்டல். நவகாலனித்துவம் போன்றவையே. இங்கு தேவை.அவசியம் என்பது இச்சுரண்டல் ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடுவதே எனநிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் கருக்கலைப்பு என்பது ஒரு பெண் தன் உடல் சார்ந்த விடயங்களைத் தீர்மானிப்பதற்கு பெற்ற தனிமனித சுயநிர்ணய உரிமையாகும்" என்ற வாதத்தில் தனது கருத்தை "ஆனால்" போட்டு நியாயப்படுத்தியுள்ளார். இவர் ஆனாப் போட்டு சொன்ன கருக்கொலைக்கான அனைத்துக் காரணங்களும் (விதி விலக்காக தாய். குழந்தை உயிராபத்தான கரு தொடர்பான மருத்துவர் உறுதிப்பாடு தவிர) மேலாதிக்கம். சுரண்டல். நவகாலனித்துவம் போன்றவற்றிற் குட்பட்டதே. நீங்கள் சொன்ன அனைத்து விடையும் இதற்குட்பட்டதே. உங்களால் இக்காரணத்திற்கு அப்பால் ஒரு கரு

அழிப்பைக் காட்ட முடியுமா? உங்களால் முடியாது. அனைத்தும் சுரண்டல் அமைப்புச் சார்ந்ததே. குறித்த கால இடைவெளியில் குழந்தைபெறுதல். பெண்களின் உடல், உள ஆரோக்கியமானது என்றவிடயம் பாலியல் கல்வி தொடர்பானது. பாலியல் கல்வியின் அவசியத்தை கோரி அதற்காகப் போராட வேண்டுமே அல்லாமல். குழந்தையைக் கொல்லுவதல்ல, இன்று பாலியல் கல்வி பெறாத. கருத்தடையை பாவிக்காத பெருந் தொகையான மக்கள பட்டினியுடனும். கால இடைவெளியைப் பேணியும் உடல் ஆரோக்கியமாக வாழ்கின்றனர். இன்று இது பற்றிக் கோருவோர் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் உள்ள மேல்த்தட்டு வர்க்கப்பெண்களே, ஒரு நேரம் உண்ண முடியாத. கருத்தடை மருந்தை வாங்க முடியாத நிலையில் உள்ள 80வீதமான மக்களின் கோரிக்கையல்ல. உடல் ஆரோக்கியத்துடன் குழந்தை பெறுதல் என்பது. மேல்த்தட்டு வசதிபடைத்தோர் தமது மிதமிஞ்சிய தவறான பாலியல் வாழ்க்கையை நியாயப்படுத்தக் கோரும் இக்கோரிக்கை அவர்களுக்கு உண்மையானது இல்லை. உடல். உள ஆரோக்கியத்தை பெண்கள் பெறப் போராடுவதும். பாலியல் கல்வியை சமூகத்திடம் கோருவது அவசியமே ஒழிய ஒரு குழந்தையைக் கொல்லுவது அல்ல,

குடும்பம் ஒன்றின் கதையைக் கூறி தமக்கையின் கணவருக்கும் தங்கைக்கும் உருவான கருவை அழித்ததை நியாயப்படுத்தியுள்ளார். இங்கு இவர் ஆணாதிக்கத்தை நியாயப்படுத்துகின்றார். இச்சமூக அமைப்பை அங்கீகரிக்கக் கோருகின்றார். தங்கை கருவைப் பெற்றது என்பது இங்கு இருவரும் விரும்பியே. இருவரும் விரும்பிப் பெற்ற இந்நிகழ்ச்சியின் பின் குழந்தை உருவாகின்றது. ஏன் அழிக்கப்படுகிறது இச் சமூகஅமைப்புக்குப் பயந்து தமக்கிடையிலான குடும்ப அமைப்பை பேண இங்கு ஆணாதிக்க சமூகத்தின் அனைத்து நடைமுறையையும் காப்பாற்ற குழந்தை அழிக்கப்படுகிறது. இங்கு குழந்தையைப் பெற்று இச்சமூகத்திற்கு எதிராக எழுந்துநின்று அப்பெண் போராடும்போது இச்சமூக அமைப்பு வெட்கித்தலை குனியும். குழந்தையைப் பெறுதல் என்பதே இச்சமூகஅமைப்புக்கு

எதிரானது. இங்கு இச்சமூக ஒழுங்கைப் பேண குழந்தையைக் கொன்று மீண்டும் அப்பெண் ஆணாதிக்க சமூகத்தை காப்பாற்ற மீண்டும் ஒரு திருமணத்தை ஆணாதிக்கசமூகத்திற்கு அமைய கோரிநிற்கிறாள். இதை சலீம் ஏற்றுக் கொள்கிறார்.

இப்படிப் பிறக்கும் குழந்தைகளை சமுதாயத்தின் குழந்தைகளாக பராமரிக்கும் உச்ச சமூகக் கட்டமைப்பிலா நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்? எனக் கேள்வியை எழுப்பி இன்றுள்ள சமூகஅமைப்புக்காக வாதிட்டுள்ளார். இப்படிப் பிறக்கும் குழந்தை இச்சமூகத்திற்கு சவால் விடுகிறது. அதைப் பெற்றெடுக்கும் பெண் இச்சமூகத்தின் மீது தீச்சுவாலையாக மாறுகின்றாள். இதற்கு மாறாக அதை அழித்து இச்சமூக அமைப்பைப் பேண குழந்தையை கொன்று. அப் பெண் தனது தலையைக் குனிந்தபடி மீண்டும் இவ்வாணாதிக்க சமூகத்திடம் தலைகுனிந்தபடி நிற்பதை சலீம் அங்கீகரித்துள்ளார். நாம் உச்ச சமூகக் கட்டமைப்பிலா வாழ்கின்றோம் என்ற கேள்வியில் யாரோ போராடி அச்சமூக அமைப்பினைப் பெற்றுத்தந்து விடப்போவதாக எதிர்பார்க்கின்றார். நாம்தான் போராடவேண்டும். போராடும்போது உச்சகட்டசமூக அமைப்பில் உள்ள தீர்வை முன்வைத்தே மக்களை அணிதிரட்ட வேண்டும். அதுவே புதிய சமூகஅமைப்பிற்காக புதிய சிந்தனையுடன் உருவாகும். இதை விடுத்து இந்தச் சமூகஅமைப்பை பேணும் வகையில் அதை அங்கீகரிக்க கோருவது என்பது இச்சமூக அமைப்பில் உள்ள சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட தீர்வே.

"உடலுக்கு வெளியில் உயிரென்ற விடயம் நிராகரிக்கப் படுவதால் தாயின் உடலுடன் சிசுவின் தொடர்பு நீடித்திருக்கும் வகையில் அதாவது சிசு பிரசவிக்கப்படும் வரையில், சிசுவானது தாயின் அங்கமாக" இருக்கும் என வாதிட்டுள்ளார். உடலுக்கு வெளியில் உயிரென்பது இல்லை. இது தாய்க்கும் பொருந்தும். உயிர் என்பது குழந்தைக்கு மட்டுமல்ல தாய்க்கும் பொருந்தும். சிசு என்பது தாயில் உள்ள உயிரணுக்கள் போல் உயிருக்காய் உருவானது. சிசு என்பது உயிர் வாழ சுவாசித்தல். கழிவகற்றல் என அனைத்து வகைச் செயற்பாட்டையும்

தொடர்ச்சி மறுபக்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விவாதம்

# கேந்திர கண்ணிகள் மீது குறிவைப்பு வளர்த்தெடுப்பா? தாரைவார்ப்பா?

**மனிதம் — 23 இதழில் கரிகாலன் லெனினியக் கட்சிக்கோட்பாடுகள் நடைமுறைகளில் காணப்படும் முக்கிய மூன்று குறைபாடுகள் தொடர்பாக தெரிவித்திருந்த கருத்துக்களின் மீதான என் விமர்சனக்கருத்துக்களை இப்பதில் வடிவிலான கட்டுரை மூலம் வாசகர்களுடன் பரிமாற விழைகின்றேன்.** —
மாறன் மொன்றியல் —

**கட்சி அமைப்பு வடிவம் — ஊழியர்களிடையேயான உறவு**

கம்யூனிசக் கட்சிகள் ஊழியர்களை கம்யூனிஸ்ட்டுக்களாக வளர்த்தெடுப்பதை நோக்கமாக கொண்ட வகையிலிருக்க வேண்டுமென்றும். சொந்த நலன்களை அடைவதை இல்லாதவாறு செய்யக்கூடிய விதிகளை ஸ்தாபனம் கொண்டிருக்க வேண்டுமென்றும் கரிகாலன் குறிப்பிடுவது யாராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே தொடர்ந்து "லெனினியக் கட்சிகள், ஸ்தாபனங்கள் கூட்டுத் தலைமையுடையன என்று பிரகடனப்படுத்தினாலும் நடைமுறையில் அது உண்மையல்ல" என்று குறிப்பிடுவதன் மூலம் ஒட்டு மொத்தமாக லெனினியக் கட்சிக் கோட்பாடுகளை வரித்துக் கொண்ட அனைத்து புரட்சிகரக் கட்சிகள், ஸ்தாபனங்கள் அனைத்திலும் தனிநபர் சர்வாதிகாரமே நிலவி வந்திருப்பதாக, நிலவி வருவதாக ஒரு கருத்து உருவாவதை கிருஷ்டிக்க விழைகிறார். லெனின், ஸ்டாலின், மாவோ, சண்முகதாசன் வரையில் அவர்கள் தமது கட்சிகளுக்கு தொடர்ந்து தலைமைதாங்கியதை சுட்டிக்காட்டி அவர்கள் ஜனநாயக பூர்வமற்ற வழிகளில் தமது தலைமையை தக்கவைத்தது போலவும் லெனினியக்கட்சி விதிகள் அதற்கு இடமளித்தது போலவும் வெளிக்காட்ட முற்படுகிறார். எனினும் அது உண்மையல்ல. இவர்கள் தொடர்ந்து தலைமைப்பாத்திரம் வகித்தது உண்மையானபோதும் காலத்திற்குக் காலம் கட்சி பிரதிநிதிகள் ஜனநாயக ரீதியில் இவர்களை தெரிவு செய்தார்கள் என்பதே உண்மையாகும். லெனினியக்கட்சி விதிகள் தனிநபர் சர்வாதிகார தலைமையை நிறுவ இடமளிப்பது போல கரிகாலன் சிருஷ்டிப்பது புனைகதையே. தகுதியும். திறமையும் வாய்ந்த நபர்களை குறிப்பிட்ட காலஇடைவெளிகளில் கூட்டப்படும் கட்சிக்காங்கிரசுகளில் கட்சிப்பிரதிநிதிகள் தேர்வு செய்வது எவ்வகையில் தவறானது? ஆயுட்காலத்திற்கு தலைவராக நியமனம் செய்யும்விதி எதையும் லெனினியக்கட்சி விதிகள் கொண்டிருப்பதை கரிகாலனால் சுட்டிக்காட்ட இயலுமா?

ஒரே நபர்களே தலைமைப்பொறுப்புக்கு வருவது அவர்களின் ஆளுமை, தகுதி,

> **லெனினியக்கட்சிக் கோட்பாடு ஸ்தாபனத்தின் எந்தமட்டத்திலும் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான முடிவுகளை வலியுறுத்துகின்றதே ஒழிய தனிநபர் அதிகாரங்களையல்ல. தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவுமான உரிமையை மக்களுக்கு வழங்குகின்றதேயொழிய தனிநபர் அதிகாரத்தை வலியுறுத்தவுமில்லை. வழங்கவுமில்லை.**

திறமையின் அடிப்படையிலானது. தலைமைப்பொறுப்பாளர் தவறிழைக்கும்போது வேறொருவரை தேர்வு செய்கின்ற வாய்ப்பு கட்சிப்பிரதிநிதிகளுக்கு உண்டா? இல்லையா? லெனினியக்கட்சி விதிகள் அடிப்படையான வாய்ப்பை வழங்கவில்லை எனக்கூறும் கரிகாலன் அவ்விதிகளை விளக்குவாரா? லெனினியக்கட்சியமைப்பில் தலைவர், செயலாளர், மத்திய குழுத் தலைவர், அமைப்பாளர் போன்ற தனிநபர் பதவிகள் இருப்பினும் கரிகாலன் கூறுவது போல இவை தனிநபர் அதிகாரம் கொண்ட பதவிகள் அல்ல. 'வீட்டோ' அதிகாரம் போன்ற இவர்களுக்கென தனிநபர் அதிகாரம்கொண்ட பதவிகள் அல்ல, கூட்டு அடிப்படையில் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையில் முடிவுகள் பெறுகொள்ளுவதை. செயற்படுத்துவதையே லெனினியக் கட்சி.ஸ்தாபனம் மேற்கொள்கிறது. நிர்வாக ஒழுங்கமைப்பு காரணங்களிற்காகவே இப்பதவிகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இவர்கள் தனிநபர் அதிகாரங்கொண்டவர்களெனவும் கூட்டு வேலைமுறையை நிராகரிக்கின்ற தனிநபர் அதிகாரமுறையை லெனினியக்கட்சிகள் வலியுறுத்துவது போலவும். கரிகாலன் முன்வைப்பது லெனினியக்கட்சிக் கோட்பாடுகள் மீது களங்கத்தை வாரியிறைப்பதை நோக்கமாகக் கொண்டது. அல்லது சீரழிந்த அதிகாரவர்க்க முதலாளித்துவ கட்சிநடைமுறைகளை கவனத்தில் கொண்டுவருகின்ற கருத்தாகும்.

லெனினியக்கட்சிக் கோட்பாடு ஸ்தாபனத்தின் எந்தமட்டத்திலும் ஜனநாயக மத்தியத்துவத்தின் அடிப்படையிலான முடிவுகளை வலியுறுத்துகின்றதே ஒழிய தனிநபர் அதிகாரங்களையல்ல. தேர்ந்தெடுக்கவும் திருப்பியழைக்கவுமான உரிமையை மக்களுக்கு வழங்குகின்றதேயொழிய தனிநபர்

32பக்க தொடர்ச்சி..............

கொண்டது. தாய்க்கு எப்படி உயிருள்ளதோ அதே போல் சிசுவுக்கும் உள்ளது. தாயைக் கொல்வது எப்படி உயிர் கொலையாகிறதோ அது போல் சிசுவைக் கொன்றால் அது உயிர்கொலைதான். இவரால் சுட்டிக்காட்டப் பட்ட இச்சமூக அமைப்பில் உள்ள காரணிகளின் அடிப்படையில் உருவான ஆணாதிக்க சமூகத்தின் விளைவுகளால் உருவான இக்கருக்களைக் கொல்வதற்குப் பதில் அதற்கெதிராகப் போராடி புதிய சமூக அமைப்பை உருவாக்க வேண்டும்.

விலங்கியல் . வ. லூவாயோ. நி.ரீக்கல்
இயங்கியல் பொருள் முதல் வாதமும்.
வரலாற்று பொருள் முதல்வாதமும்
தேர்வு நூல் .10 . மார்க்ஸ். ஏங்கல்ஸ்

சமர் ஆசிரியர்குழு

www.tamilarangam.net

அதிகாரத்தை வலியுறுத்தவுமில்லை. வழங்கவுமில்லை. எனினும் கடந்தகாலங்களில் கம்யூனிஸ்ட் கட்சிகளில் தனிநபர் சர்வாதிகாரம் நிலவியதாகவும். அதை கட்சி விதிமுறைகள் அனுமதித்திருந்தன எனவும் கரிகாலன் முன்வைப்பின் அப்பிரச்சனை மீதான விரிவான ஆய்வு செய்யவேண்டும். கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள். 'செளசெஸ்கு' போன்ற சர்வாதிகாரிகளை லெனினியக்கட்சி நடைமுறைகளுக்கு உரைகல்லாக கொள்ளமுடியாதென்பதையும் அவர்களின். அவர்களது கட்சிகளின் உண்மை சொரூபம் இன்று உலகின் முன் அம்பலமாகியுள்ளதையும் யாருமறிவர்.

மாக்சிய லெனினிய கட்சிக் கோட்பாடுகளை உறுதியாகப்பற்றி நின்ற கட்சிகளில் தலைமைப்பாத்திரம் வகித்தவர்கள் லெனின். ஸ்டாலின். மாவோ போன்றவர்கள் அராஜகமான முறையில் தமது தலைமைப்பாத்திரத்தை தக்கவைக்க லெனினியக் கட்சிவிதிகள் இடமளித்ததாக கரிகாலன் கூறுவாரெனின் ஆதாரபூர்வமாக அதை முன்வைக்க கோருகிறேன்.

"கம்யூனிஸ்ட் கட்சிகள். புரட்சிகர ஸ்தாபனங்கள் என்பனவற்றுக்குள் கூட்டுவேலை முறை என்று கூறிக்கொண்டு கொலைகள் செய்ததும். காங்கிரசுகளைக் கூட்டாமல்விட்டதும். தனக்கு சார்பானவர்களை நியமித்ததும் கடந்தகாலத்தில் சில தனிநபர்கள் செய்தவை" என்று கரிகாலன் குறிப்பிடுகிறார். கரிகாலன் குறிப்பான விபரங்களுடன் முன்வைக்காதது பொதுவாக வைக்கின்ற இக்குற்றச்சாட்டு மூலம் வரலாற்றின் அனைத்து கம்யூனிஸ்ட்கட்சிகள். புரட்சிகர ஸ்தாபனங்கள் அனைத்துமே கொலைகாரர்களாகவும் அராஜகவாதிகளாகவும் செயற்பட்டதாக ஒரு பிரமையை வாசகர்களுக்கு ஏற்படுத்துகிறார். இது பெரிதும் அவதூறானதும். கரிகாலனது ஸ்தாபனங்கள் மீதான காழ்ப்புணர்வை வெளிச்சம் போடுவதாகும். ஸ்டாலினது காலகட்டத்தை கருத்தில் கொண்டு இதை முன் வைத்திருப்பாரெனின் ஸ்டாலின் இழைத்த நடைமுறைத்தவறுகள் உலகின் முதல் சோசலிச அரசை எதிர்புரட்சிகர சக்திகளிடமிருந்து பாதுகாப்பதிலும். சோசலிச கட்டுமானத்தில் அவரது சாதனைகளுடனும் சேர்த்தே பார்க்கப்படவேண்டியவையாகும். அக்கால கட்டத்து நிலமைகளை கணக்கிலெடுக்காது கொடுங்கோலன். சர்வாதிகாரி. கொலைகாரன் என்கின்ற வகையிலான கருத்துக்கள் ஏகாதிபத்தியபிரசாரகர்களினதை வாந்தியெடுப்பதே அன்றி முற்போக்கான கண்ணோட்டமல்ல.

2. புரட்சிகர ஸ்தாபனம் — அரசு — வர்க்கம் ஆகியவற்றுக்கிடையேயான உறவு. அரசுக்கும் வர்க்கங்களுக்குமிடையான

மதிப்பீட்டில் "அரசு வர்க்கங்களின் கருவியாக மட்டும் பார்ப்பது தவறெனவும் அரசுகளும் தமக்கு தகவமைந்த வர்க்கங்களை ஸ்தாபிதம் செய்வதாகவும்" கரிகாலன் முன்வைக்கிறார். "அரசுகள் தமக்கு தகவமைந்த

**அரசு எவ்வளவு யந்திரமாக உருவெடுப்பினும் அதனது நோக்கம் தன்னை உருவாக்கிய வர்க்கங்களுக்கு கருவியாக சேவைசெய்வதே. வர்க்கங்கள் தமக்கான அரசுகள் மேல் தீர்மானகரமான மேலாதிக்கம் புரிவதே உண்மைநிலை. அரசுகளில் ஆதிக்கம்புரிவோர் அதன்நோக்கத்தில் மாற்றமெதுவும் செய்ய முற்படும் போது ஆதிக்க வர்க்கங்களின் நலன்களில் சிறு பாதிப்பேனும் ஏற்படின் அவ்விடத்திலிருந்து ஆதிக்கவர்க்கங்கள் அவர்களை அகற்றிக் கொள்வதை மிகி முதல் பல இடங்களில் நாம் கண்டிருக்கிறோம்.**

வர்க்கக்கூட்டமைப்பை உருவாக்குவதற்கு மிகச்சிறந்த உதாரணம் சோவியத் யூனியன்" எனக்குறிப்பிடுகிறார். மேலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி அரசு ஏற்கனவே அதிகாரத்தை கொண்டிருந்த வர்க்கங்களை இல்லாது ஒழித்து புதிய வர்க்க கட்டமைப்பை உருவாக்க முனைந்ததை அவதானிக்கலாம்" எனவும் குறிப்பிடுகிறார். இது விடயத்தை தலைகீழாகப் பார்ப்பதாகும். சோவியத் யூனியன் வரலாற்றுக்கட்டம் முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி பண்பு மாற்றமின்றி நீடித்ததாகவும்தமக்கு தகவமைந்த வர்க்கங்களை உருவாக்கியதாகவும் உண்மைக்கு மாறான விடயத்தை கூறுவதாகும். ஆனால் வரலாற்று கட்டம் முழுவதிலும் சோவியத் யூனியனிலும் நிகழ்ந்தது எதுவெனில் குறிப்பான காலகட்டங்களில் மேல்நிலைக்கு வருகின்ற வர்க்கங்கள் தமது நலன்களுக்குகந்த அரசயந்திரத்தை தமது நலன்களை பாதுகாக்கும் கருவியாக அமைத்துக்கொள்வது ஆகும். சோவியத் யூனியனின் புரட்சிக்குப்பிந்தைய காலகட்டங்களில் நடைமுறைத்தவறுகளால் முகிழ்ந்து வந்த அதிகாரவர்க்க முதலாளித்துவ கூறுகள் ஸ்டாலினது மறைவின்பின் பாட்டாளிவர்க்க அரசை சிதைத்து தமது நலன்களுக்கான அரசை ஸ்தாபித்தது. 90களில் நிகழ்ந்தது திரிபுவாதிகளின் காலத்தில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ வர்க்கத்தினர் "யெல்சினது" தலைமையில் தமக்கிசைவான முறையில் அரசை மாற்ற முனைந்தது ஆகும். இன்று நிகழ்வது வெவ்வேறு ஆதிக்கக்கூறுகளிடையே அரசு அதிகாரத்திற்கான இழுபறியாகும். கரிகாலன் முன்வைப்பது போல அரசு நிலையானதாகவும் தனக்கு தகவமைந்த வர்க்கங்களை உருவாக்கியது போலவும் கூறுவது வர்க்கப்போராட்டமே வரலாற்றின் கேந்திரமாக விளங்குகின்ற யதார்த்தை. மார்க்சிய லெனினிய அடிப்படையை தகர்ப்பதற்கே. கரிகாலன் கூறுவது போல கம்யூனிஸ்ட்கட்சி அரசு தனது வர்க்க அடிப்படைகளை மாற்றிக் கொண்டேபோயிருப்பின் அதற்குள் வர்க்க நலன்கள் மேலாதிக்கம் புரியவில்லையெனின் 'ஸ்டாலினை தகர்த்து குருச்சேவும் கோர்பச்சேவினை நிராகரித்து யெல்சினும்' புது மாறுதல்களுக்கு தலைமை கொடுக்கத்தேவையில்லை. கட்சிகளினுள்ளும் வர்க்கங்களின் நலன்களுக்கான மோதல் உச்சம் பெறுவதை வரலாறுகள் காட்டுகின்றன. எனவே நீங்கள் முன்வைக்கின்ற "சில சமுதாயங்களில் வர்க்கங்கள் அரசின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் சில சமுதாயங்களில் அரசுகள் வர்க்கங்களின் மேல் மேலாதிக்கம் புரிவதையும் அவதானிக்கலாம்" என்கின்ற வாதத்திற்கான உண்மை நிரூபணம் எதுவுமில்லை. அரசு எவ்வளவு யந்திரமாக உருவெடுப்பினும் அதனது நோக்கம் தன்னை உருவாக்கிய வர்க்கங்களுக்கு கருவியாக சேவைசெய்வதே. வர்க்கங்கள் தமக்கான அரசுகள் மேல் தீர்மானகரமான மேலாதிக்கம்

புரிவதே உண்மைநிலை. அரசுகளில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதிக்கம்புரிவோர் அதன்நோக்கத்தில் மாற்றமெதுவும் செய்ய முற்படும் போது ஆதிக்க வர்க்கங்களின் நலன்களில் சிறு பாதிப்பேனும் ஏற்படின் அவ்விடத்திலிருந்து ஆதிக்கவர்க்கங்கள் அவர்களை அகற்றிக் கொள்வதை சிலி முதல் பல இடங்களில் நாம் கண்டிருக்கிறோம்.

''அரசு என்பது சமுதாய வளர்ச்சிக்கு தடையானதில்லையா? எனவே சமுதாய வளர்ச்சிக்கு தடையான சக்திகள் எவையோ அவற்றுக்கெதிராக போராடுவதுதான் புரட்சிகர நடைமுறை'' என்கிறான் கரிகாலன். சுரண்டும் வர்க்கங்களினது அரசையும், சுரண்டப்படும் பாட்டாளிவர்க்கத்தினது புரட்சி அரசையும் சமனாக்கி எல்லாமே சமுதாய வளர்ச்சிக்கு தடையானதாக காட்டமுற்படுகிறான். தொடர்ந்து ''வர்க்கப்போராட்டத்தின் போது அல்லது கம்யூனிச சமுதாயத்தில் அரசு உதிர்ந்து உலர்ந்து விழும் என்கிறார்கள். ஆனால் அது நடைபெறவில்லை'' என்றிருந்தார். இதன்மூலம் பொய்யை அல்லது பிழையான தகவலை முன்வைக்கிறார். வர்க்கப் போராட்டத்தின் போது அரசு உலர்ந்து விடும் என்று யார் சொன்னது? சமுதாயத்தில் வர்க்கங்கள் இல்லாதொழிந்த பின் வர்க்கப் போராட்டமானது முடிவு பெற்றதும் வர்க்கங்களின் கருவியான அரசு நிலைபெறுவதற்கான அடிப்படை இல்லாதொழிந்துபோகின்றது. என்றுதான் மாக்சியம் கூறுகின்றது. 'ஆனால் அது நடைபெறவில்லை' என்று கரிகாலன் கூறுவதன் மூலம் கம்யூனிச காலகட்டத்தை சமுதாயம் அடைந்துவிட்டதாகவா கரிகாலன் கூறுகிறான். ஏகாதிபத்திய மேல்நிலை வல்லரசுகளின் சகாப்தத்தில் அல்லவா நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். உதிரும் என்றார்கள் உதிரவில்லையே என்கின்ற கரிகாலனது கூற்று பொருத்தமில்லாதது தானே!

அடுத்து ''லெனினிய கட்சிகள் அரசு ஒன்றைக் கைப்பற்றுவதை அல்லது சாதகமான அரசயந்திரத்தை நிறுவுவதை திட்டமாக கொண்டே செயற்பட்டன. என்றும் புரட்சிகர ஸ்தாபனமானது அரசினை அமைக்காமல் சமுதாயத்தில் நிலவும் ஏனைய சக்திகளைக் கொண்டு அரசமைக்கவேண்டும். சமுதாய வளர்ச்சிக்கு தடையாகும்போது அதற்கெதிராக போராட வேண்டும்'' என்கிறான் கரிகாலன். அரசு என்பது வன்முறை சார்ந்த. வன்முறை சார்த நிறுவனங்களை தன்னகத்தே கொண்டது. என்பது அரசு என்பது வர்க்கங்களின் நலன்களை பாதுகாப்பதற்கான ஒரு கருவி சமுதாய வரலாறு முழுமையும் அரசு மூலமே நிலைநிறுத்தப்பட்டு வந்துள்ளது கண்கூடு. ஒரு புரட்சியின் போது நிலவிவந்த ஆளும் வர்க்கங்களின் அரசு தூக்கியெறியப்பட்டதும் புரட்சிகர வர்க்கங்கள் ஒப்பீட்டளவில் மேல்நிலைபெறுகின்றன. கரிகாலன் கூறுவது போல லெனினியக்கட்சிகள் அரசயந்திரத்தை கைப்பற்றுவதையும் திட்டமாக கொள்கின்றன என்பது தவறு. முதலாளித்துவப்புரட்சி வரையில்தான் அரசு யந்திரத்தை கைப்பற்றி பயன்படுத்துவது.

> **லெனினியக்கட்சிகள் அரசயந்திரத்தை கைப்பற்றுவதையும் திட்டமாக கொள்கின்றன என்பது தவறு. முதலாளித்துவப்புரட்சி வரையில்தான் அரசு யந்திரத்தை கைப்பற்றி பயன்படுத்துவது. பாட்டாளி வர்க்கப்புரட்சியானது பிற்போக்கு அரசு யந்திரத்தை முழுவதுமாக நொருக்கியெறிந்து விட்டு அதற்குப் பதிலாக புதிய வகையிலான அரசை அமைத்துக்கொள்கிறது**

பாட்டாளிவர்க்கப்புரட்சியானது பிற்போக்கு அரசு யந்திரத்தை முழுவதுமாக நொருக்கியெறிந்து விட்டு அதற்குப் பதிலாக புதிய வகையிலான அரசை அமைத்துக்கொள்கிறது. புரட்சியின்போது புரட்சிகர வர்க்கமானது ஒப்பீட்டளவில் மேல்நிலை பெற்றாலும் சுரண்டலாளர்கள். ஆண்ட வர்க்கத்தினர் தாம் இழந்த சொர்க்கத்தை மீட்க முன்னிலும் பலமடங்கு சக்தியை திரட்டி முயற்சிப்பர் என்பது சந்தேகத்திற்கு இடமற்றது. எனவே புரட்சியை நிகழ்த்தும் ஸ்தாபனமானது எவ்வளவோ பகீரதப்பிரயத்தனங்கள்

நூறாண்டுகளான வர்க்கப்போரின் பின்னர் தகர்ந்து மேல்நிலை பெறும்போது கரிகாலன் சொல்கிறான் வன்முறை சார்ந்த. சாராத நிறுவனங்களை, அரசினை புரட்சிகர ஸ்தாபனங்கள் எந்தபுரட்சிகர வர்க்கங்களின் பிரதிநிதிகளோ அவர்கள் நிர்வகிக்காமல் சமுதாயத்தில் நிலவும் ஏனைய சக்திகளுக்கு அளித்துவிட வேண்டுமாம். ஒரு புரட்சி நடைபெற்றுவிட்ட போது உள்நாட்டில் தோற்கடிக்கப்பட்ட எதிரிகளும் சர்வதேச புரட்சியின் எதிரிகளும் புரட்சியை தோற்கடித்துவிட புரட்சிகரநிறுவனங்கள் அழித்தொழித்துவிட கங்கணம்கட்டி நிற்கும்போது தமது கடந்தகால வளர்ச்சிகள். வசதி வாய்ப்புகளை ஒருங்கிணைத்து வரும்போது புரட்சியின் பாதுகாவலர்களை. புரட்சிகர ஸ்தாபனத்தை நிராயுதபாணியாக்கும் கரிகாலனது கருத்துகள் புரட்சியின் எதிரிகளுக்கே சார்பானதாக உள்ளது வெளிப்படையாகவே தெரிகின்றது.

சாராம்சத்தில் அரசு வர்க்கநலன்களை பாதுகாக்கும் கருவி. சுரண்டும் வர்க்க அரசு யந்திரத்தை நிர்மூலமாக்கி புரட்சிகர வர்க்கங்கள் தமது அரசு யந்திரத்தை உருவாக்குவது புரட்சிகர வர்க்கங்களின் நலன்களை பாதுகாக்கவே. சுரண்டும் வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி முயற்சிகளை தாக்கி புரட்சி நலனை பாதுகாக்க அரசு புரட்சிகர வர்க்கங்களுக்கு இன்றியமையாதது. அரசினை வன்முறை நிறுவனத்தை கொண்டிராது புரட்சியின் பின் சில வினாடி கூட புரட்சிகர ஸ்தாபனம் உயிர்வாழ இயலாது என்பதை நடைமுறையினூடு சிந்திக்கின்ற எவரும் இலகுவில் புரிந்து கொள்வர். புரட்சியை, புரட்சிகரஸ்தாபனங்களை ஒழித்து விடுகின்ற கருத்துகளை முன்வைத்தவாறே புரட்சியின் நலன்கள் சார்பில் நிற்பதாக கூறுவது ஆசாடபூபதித்தனமே.

''ஆக ஒரு புரட்சிகரஸ்தாபனம் அரசு ஒன்றை கைப்பற்றாமலும் உருவாக்காமலும் புரட்சிகளை தொடர்ச்சியாக செய்யவேண்டும்'' என்று கரிகாலன் கூறுவது ஆழ்ந்து சிந்திப்பின் நகைப்பிற்குரியதே. புரட்சிகர ஸ்தாபனங்கள் தொடர்ந்து நிலைபெறுவதற்கான அடிப்படைகளை அகற்றிவிட்டு தொடர்ந்து புரட்சிகள் செய்யக்கோருவது வார்த்தை ஜாலமே. ''நிர்வாக யந்திரங்கள் மேல் ஒருவகை மேலாண்மையை கொண்டிருக்கலாம் முற்றாக இயக்குவது தவறு'' என்றொரு வகையினூடு கூறுவதன் மூலம் அரசு நிறுவனங்களின் எதிர்ப்புரட்சிகர சக்திகள் ஊடுருவவும். அதைசீர்குலைப்பதற்குமான வழிவகையையே கரிகாலன் முன்வைக்கின்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**புரட்சிகர ஸ்தாபனத்திற்கும் சிவில் சமூக நிறுவனங்களிற்குமான உறவு.**

இறுதிப்பகுதியாக கரிகாலன் "புரட்சிகர ஸ்தாபனங்கள் தமக்கு தகவமைந்த சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்குவதை தவிர்த்து சமுதாய வளர்ச்சிக்குத் தேவையான சிவில் சமூக நிறுவனங்களை உருவாக்குவதை ஆதரிக்கவேண்டும்" என்கிறான். தனது கட்டுரை முழுமையுமே கரிகாலன் புரட்சிகரஸ்தாபன நலனும் சமுதாய வளர்ச்சி நலனும் ஒத்திசைந்ததல்ல. என்கின்ற கருத்தை வலியுறுத்திவருகிறான். சமுதாய வளர்ச்சியினது நலன்களது தேவையிலிருந்து உருப்பெறுவதே புரட்சிகரஸ்தாபனம் ஆகும். சமுதாய வளர்ச்சியை பிரதிநிதித்துவப்படுத்தாத ஒன்றாகக்காட்டி அதை புரட்சிகரஸ்தாபனமென கரிகாலன் வர்ணிப்பது முரண 'பாடானதே. அவர் கற்பனையில் கொண்டுள்ள சமுதாய வளர்ச்சி நலன்களை உந்துகின்ற சக்தியை அறிமுகப 'படுத்தலாம' 'தானே அது ஒருபுறமிருக்க. புரட்சியை மேற்கொள்ளும் புரட்சிகரஸ்தாபனமானது புரட்சிக் காலகட்டங்களில் பரந்துபட்ட மக்கள் திரள் மத்தியில் புரட்சிகர அரசியலை அதற்கேயுரித்தான கலை. பண்பாடு. கலாச்சாரங்களை முன்னெடுக்க தமது புரட்சிகர கருத்தியலை மக்கள் திரளினதாக மாற்ற விடாப்பிடியான மிக நீண்ட கடினமான பணி மேற்கொள்ள வேண்டியிருக்கும். அப்பணியை செவ்வனே நிறைவேற்ற மக்கள் மத்தியில் கருத்தியலை பரப்புகின்ற சிவில் சமூக நிறுவனங்கள் மீது பூரண ஆளுமை கொண்டிருப்பது அவசியம். சமுதாய நலனுக்கு எதிரானது ஆனால் அது புரட்சிகரஸ்தாபனம் என்று கூறும் கரிகாலன் போன்றோரே புரட்சிகரஸ்தாபனங்களுக்கெதிரான கருத்தியலை மக்கள் மத்தியில் பரப்ப சிவில் சமூக நிறுவனங்களை புரட்சிகர சக்திகளிடமிருந்து பிரிக்கவிரும்புகின்றனர். சாராம்சமாக கரிகாலனது கட்டுரையை நோக்கின் அவர் பின்வரும் கருத்துக்களை வலியுறுத்துவதை காணலாம்.

1. லெனினியக்கட்சி ஸ்தாபன வடிவம். கோட்பாடு. தனிநபர் சர்வாதிகாரத்தலைமையை உருவாக்குகிறது.

2. புரட்சிகர வர்க்கங்களின் அரசு முன்னைய சுரண்டல் அரசுகள் போன்றே சமுதாய வளர்ச்சிக்கு தடையானது.

3. புரட்சிகர வர்க்கஸ்தாபனம் சமுதாய வளர்ச்சிக்கு முரணான தன்மைகளை கொண்டது. எனவே அரசு. சிவில். சமூக நிறுவனங்களை சமுதாய வளர்ச்சிக்கு சாதகமாக பயன்படுத்தும் சக்திகளிடம் ஒப்படைக்க வேண்டும். ஆக கரிகாலனது கட்டுரையின் தொகுப்பினை ஆழ்ந்து நோக்கின் மாக்சிய லெனினிய அடிப்படை விதிகளையே அவர் நிராகரிப்பதை தெளிவாக அவதானிக்கமுடியும். வர்க்க அடிப்படையில் புரட்சியை நிகழ்த்தும் புரட்சிகர ஸ்தாபனநலன்கள் சமுதாய வளர்ச்சி நலன்களிலிருந்து வேறுபடுவதாக காட்டும் அணுகுமுறையிலிருந்தே ஒவ்வொரு விடயத்தையும் அணுகியுள்ளான். அடிப் படையிலேயே புரட்சிகர தாபனங்களிற்கு எதிரான கருத்தியலுடனேயே அவற்றை வளர்த்தெடுப்பது என்கின்ற போலிமுழக்கத்தின் கீழ் பலதரப்பினர் இத்தகைய வாதங்களை முன்தள்ளுகின்றனர். இவர்களை அடையாளம் காட்டுவது போல மாவோ சுட்டிக்காட்டியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தம்.

> " திரிபு வாதம் முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஒரு வடிவமாகும். வர்க்க சிந்தனையை. புரட்சியை உயர்த்திப்பிடிப்பதாக கூறிக்கொண்டே அதை உள்ளிருந்து சீர்குலைப்பது அதன் நோக்கமாகும்"

" திரிபு வாதம் முதலாளித்துவ சித்தாந்தத்தின் ஒரு வடிவமாகும். வர்க்க சிந்தனையை. புரட்சியை உயர்த்திப்பிடிப்பதாக கூறிக்கொண்டே அதை உள்ளிருந்து சீர்குலைப்பது அதன் நோக்கமாகும்" இதற்கான நடைமுறை உதாரணங்கள் பலவற்றை காணஇயலும்

ஆக. கரிகாலன் போன்றோர் முன்வைப்பது போல மாக்சிய லெனினிய அடிப்படைகளை நிராகரிப்பது. காலு கொடுப்பது வளர்ச்சிப்போக்கல்ல. கேந்திரமான விதிகளுக்கெதிரான தாக்குதல்களை வளர்ச்சிப் போக்குஎன காட்டவிளைவது தமது வர்க்க நலன்களுக்கு இசைய அடிப்படை வர்க்கவிதிகளை தாரைவார்க்கவே

09.03.1994

## உங்களால் முடியுமானால்

அமைதி !<br>
உறங்குகிறான் இங்கே<br>
என் சகோதரன்.<br>
உடைந்த இதயத்தோடும்<br>
வாடிய முகத்தோடும்<br>
அழைக்காதீர் அவனை.<br>
ஏனெனில்<br>
சிரிப்பே அவன்

மலர்களால் அவனை<br>
மூடி மறைக்காதீர்<br>
மலரொன்றுடன் மலர்களைச்<br>
சேர்ப்பதில் பொருளுண்டோ?

உங்களால் முடியுமானால்<br>
உங்கள் இதயத்தில்<br>
அவனைப் புதையுங்கள்.

உங்கள் இதயப் பறவையின்<br>
இன்னொலி கேட்டு<br>
உறங்கும் உங்கள் ஆத்மா<br>
விழித்தெழுவதைக் காண்பீர்கள்.

உங்களால் முடியுமானால்<br>
அவனுக்குச் சிறிது<br>
கண்ணீரைச் சிந்துங்கள்<br>
உங்கள் உடலின் ரத்தமதனையும்<br>
சேர்த்து.


வங்காள ஹௌரா சிறையில் மாக்சிய லெனினியப் புரட்சியாளரான ராய் சௌத்திரி மரணமடைந்த செய்தி கேட்டு சிறையிலிருந்த பெயர்தெரியாத மற்றொரு புரட்சியாளரால் சிறையின் சுவரிலல் எழுதப்பட்டிருந்த கவிதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காணாமல் போனவர்கள்



எமது நாட்டில்
பலரும் காணாமல்
போயினர்
இரவினில் பகலினில்
இனங்காண முடியாமல்
போயினர்.

வேலைக்கு போனவர்கள்
பள்ளிக்கு போனவர்கள்
சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள்
உதைபந்து விளையாடிக் கொண்டிருந்தவர்கள்
அரசியல் பேசியவர்கள்
நியாயத்தை கதைத்தவர்கள்
அநியாயத்தை எதிர்த்தவர்கள்
இப்படி பலரும்
எப்படியோ போயினர்.
சிதைந்த உடல்களாய்
எரிக்கப்பட்ட முண்டங்களாய்
ஆறுகளில் மிதந்தவராய்
கரைகளில் ஒதுங்கியவராய்
மண்டைகள் பிளந்தவராய்
மண்ணில் புதையுண்டவர்களாய் . . .
சில வேளைகளில்
கண்டெடுக்கப்பட்டனர்
சிறைகளில் வைத்து
சித்திரவதைப்பட்டனர்.
பலவேளைகளில்
போனது . . . .போனதுதான்.
எவரோ சில கூட்டத்தாரின்
'அரக்கத்தனத்திற்கு
அநியாயமாய் உயிர்களின்
பலி எடுப்பு.

இப்போதும் கூட
எலும்பையும், பல்லையும்
உடுப்பையும் செருப்பையும்
வைத்து
இது என்னவென்றுதான் என்ற
கண்டுபிடிப்புகள் நடக்கும்.

இனி என்ன !
ஓநாய்களும், நரிகளும்
ஊளையிட்டு
மண்ணை கிளறட்டும்
சதைத்துண்டங்களையும்
மண்டையோடுகளையும்
விருந்து படைக்கட்டும்
அவற்றை மாலையாக்கி
கழுத்திலிட்டு
நர்த்தனம் புரியட்டும் !

சுகந்தன் (பங்குனி— 94)

---

தொடர்ச்சி

இயக்கிய "Steven Spielberg " ன் இயக்கத்திலே "Schindler's List "ல் மிகவும் சிறப்பாக படமாக்கப்பட்டுள்ளது. 1993ம் ஆண்டின் "Oskar " ன் சிறந்த விருதுகள் பட்டியலில் 12 பரிசுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் 7 விருதுகளை தட்டிச்சென்றுள்ளது. சிறந்த படம், இயக்குனர், ஒளிப்பதிவு, கலை, எடிட்டிங் போன்ற முக்கிய விருதுகளை பெற்றுள்ள இப்படத்தில் நாசிகள் முகாம் கொமாண்டராக நடித்த "Ralp Fiennes "என்ற பிரித்தானிய நடிகர் சிறந்த துணை நடிகர் விருதுக்காக தேர்வு செய்யப்பட்ட போதும் நாயகனாக நடித்த ஒருவருக்கு எவ்வாறு பரிசளிப்பது என்று கருதியே "Oskar " விருது இவருக்கு பரிசளிக்கப்படவில்லை என விமர்சகர்கள் கருத்துத் தெரிவித்தனர். (இதனைத்தான் Politics என்பார்களோ)

திரைப்படம் எவ்வாறு அமைய வேண்டும் என்று பலர் பல விதமாக கருதுவார்கள். படத்தின் கரு முதன்மை பெற்றுள்ள போதும் படம் வெளிவரும் காலகட்டமும் இங்கு முக்கியத்துவம் பெறுகிறது.

இப்படத்தை பொறுத்தவரை இராணுவமயப்படுத்தப்பட்ட வாழ்வின் அவலங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. போலந்தின் எல்லை பிரதேசத்தில் நடைபெற்ற சம்பவங்களை படம் கொண்டிருந்த போதும் நாசிகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த சகல பிரதேசங்களிலும் இவ்வாறான விடயங்கள் நடைபெற்றன.

நாசித்தளபதியின் வேலைக்காரியாக வரும் யூதப்பெண்மணி படத்தின் ஒரு குறியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளாள். பெண்மணி கூறுகின்றாள் " எனது அதிகாரிக்கு என்ன வேண்டும் என அறிய முடிந்தால் அதற்கேற்ப நடக்கலாம். ஆனால் அதை அறிவதே கடினமாக இருக்கும் போது எப்படி அவர் தேவைகளை என்னால் அறியமுடியும்" நாசிகள் இதே போன்றுதான் திடீரென சுடுவார்கள். உதைப்பார்கள். "Sehindler " கூறுகிறான் "அதிகாரம் என்பது ஒருவனை அடக்கியொள்வது அல்ல. அடக்கியொள முடியும் என அவன் தெரிந்தும் அதனை செய்யாமலிருப்பதே" படம் ஆயுதப்போராட்டம் பற்றிய கேள்வியை எழுப்புகின்றபோதும் ஓர் இன, மொழி, வர்க்கப் போராட்டத்தின் வெற்றிக்கு ஆயுதப்போராட்டம் அவசியமானது என்பது உலகம் உணர்த்திய உண்மை.

—நதன்—



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நாம் வன்முறையை வளர்ப்பவர்களல்ல




நிறவாதத்திற்கு எதிரான இயக்கம(ARA) சார்பாக "கெவின் தோமஸ்" தேடலிற்கு வழங்கிய நேர்காணல்

**தேடல்** — ரொறன்ரோ நகரில் நிறவாதத்திற்கு எதிராகப் போராடும் கூட்டமைப்பான "TCAR" (ரொறன்ரோ நிறவாதத்திற்கு எதிரான கூட்டமைப்பு) அமைப்பாளரை பேட்டி கண்டோம். இதன் தொடர்ச்சியாக "ARA" சார்பாக உங்களை சந்திக்கிறோம். "ARA" எதற்காக, எப்படி தோன்றியது என்பது பற்றி எங்களுக்கு கூறமுடியுமா?

**ARA** — ஆரம்பத்தில் கடந்த சில வருடங்களில் உயர்தரப்பாடசாலை மாணவர்களே இதன் தோற்றத்தின் மூலகர்த்தாக்கள். நியோ நாஸிஸ் (புதிய நாஜிகள்) தங்கள் அமைப்புடன் இணைப்பதற்காக மாணவர்களை அணுகினர். அதனை மறுத்த மாணவர்களிடமும், மறுத்ததால் அவர்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களிடமும் இப்பிரச்சனைக்கு எப்படி முகம்கொடுப்பது என்ற கேள்வி எழுந்தது. அத்தோடு ரொறன்ரோ நீதிமன்றத்தில் நாசி ஒருவருக்கு எதிராக வழக்கொன்று நடந்தது. அன்று நீதிமன்றத்தின் முன்பாக நாசிகளினால் ஆர்ப்பாட்டமொன்று நடாத்தப்பட்டது. அதேநாளில் நாசிகளினால் செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக பல்வேறுபட்ட அமைப்புகளினால் நாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றது. மேற்படி மாணவர்களும் இணைந்து கொண்ட இந்த நாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் வெற்றிகரமாக அமைந்தது. இம்மாணவர்கள் தமது நடவடிக்கையை ஒழுங்கமைத்து தொடர்வதற்காக "ARA" என்று ஸ்தாபனமாகினர். நகரின் உயர்தரப்பாடசாலைகளில் வளர்ந்து வரும் நாசிகளின் பிரச்சனைக்கு எதிராக மாணவர்கள் தவிர்க்கமுடியாமல் நேரடியாக முகம்கொடுக்க வேண்டியிருந்ததும் இதற்கு ஓர் காரணமாகும். அதுமட்டுமல்லாமல் இம்மாணவர்கள் நாசிகளினால் செய்யப்பட்ட பிரச்சாரம், கூட்டம் என்பனவற்றில் எதிர்முயற்சிகள் மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்த முடியாதவாறு செய்தனர். கடந்த கார்த்திகை மாதம் "பாரம்பரிய முன்னணியினர்" பகிரங்கமாக அறிவித்து நடத்தமுயன்ற கூட்டத்தை நடாத்தமுடியாமல் ரத்து செய்தனர். "ARA" வின் ஆரம்ப வேலைகள் உயர்தரபாடசாலைகளையும், மாணவர்களையும் சுற்றியே அமைந்திருந்தன.

**தேடல்** — "ARA" வின் ஆரம்பத்திற்கு முன்னரே, ரொறன்ரோ நகரில் பல நிறவாதத்திற்கு எதிரான குழுக்கள் இயங்கிக் கொண்டிருந்தன. அப்படியிருந்தும் "ARA" வின் உருவாக்கத்தின் அவசியம் என்ன?

**ARA** — முதலில் கூறிய ஆர்ப்பாட்ட ஒழுங்கு செய்வதற்காக கூட்டிய கூட்டத்தில் ஒவ்வொரு அமைப்பும் தங்களை சுற்றிய சமூகத்தைக் கொண்டே நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சுலபம் என எண்ணியிருந்தனர். ஆனால் எல்லா சமூகத்தவரையும் இணைக்ககூடிய வழிவகையான சக்தியாக மாணவர்கள் நம்மிடம் இருப்பதால் இதனை உருவாக்க எண்ணினோம். மற்றைய அமைப்புகளின் வேலைமுறையை பின்பற்றி அதேமுறையில் நாமும் வேலைசெய்தல் அர்த்தமற்றது. மற்றைய அமைப்புகள் ஆக்கபூர்வமாக வேலை செய்யும்போது நாம் அதற்கு ஆதரவு வழங்குவோம். அல்லது நாம் வேலைமுறையொன்றை முன்னெடுப்போம். பலரையும் இணைத்து நாம் வேலை செய்த போதிலும் இதுவரையிலும் எமது வேலைகள் மாணவர்களிடையேதான் கூடுதலாக மையப்பட்டுள்ளது.

**தேடல்** — கூட்டமைப்பான "TCAR" இல் "ARA" அங்கம் வகிப்பதற்கான காரணத்தை கூறமுடியுமா?

**ARA** — கூட்டமைப்பான "TCAR" நகரில் நிறவாதத்திற்கு எதிராக வேலைசெய்வதற்காக கூட்டப்பட்டது. எமது நோக்கத்துடன் ஒன்றுபடுவதால் இணைந்து கொண்டோம். கூட்டமைப்பில் வேலை செய்யும்போது கூட்டமைப்பின் வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேதான் வேலை செய்கிறோம். "ARA" வின் அமைப்பு முறையில் வேலை செய்வதில்லை.

**தேடல்** — "ARA" வின் கூடுதலான அங்கத்தவர்கள் வெள்ளைநிற இளைஞர்கள் என்னும் கருத்து நிலவுகிறது. உண்மையாயின் அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?

**ARA** — ஆம். அனேகமானவர்கள் வெள்ளை மாணவர்கள். இவர்கள் வெள்ளை நாசிகளால் அவர்களுடன் இணைப்பதற்காக அணுகப்பட்டவர்கள், நிராகரித்த காரணத்தால் மற்றைய நிறத்தவர்கள் எதிர்கொண்ட பிரச்சனை போன்றே இவர்களும் நாசிகளினால்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைக்குள்ளானவர்கள். இது இவர்கள் சந்தித்த முதல் அனுபவமும் கூட. மேலும் இவர்கள் நாஜிகளின் பிரச்சனைகளிற்கான காரணத்தை அறியவேண்டியவர்களாகவும், அதற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியும் நேர்ந்தது. இந்த அடிப்படையிலேயே ஆரம்பத்தில் வெள்ளை மாணவர்கள் அங்கத்தினராக இணைந்து கொண்டனர்.

**தேடல்** — தொடர்ந்து தற்போது சிறுபான்மையான பல்லினத்தவரையும் உங்கள் அமைப்பில் இணைத்துக்கொள்ள முயற்சித்தீர்களா?

**ARA** — ஆம்! ஆனால் எமது மாணவ உறுப்பினர்க்கூடாகவும், மற்றும் தெரிந்தவர்களுக்கூடாகவும் பல் இனத்தவர்களையும் இணைக்க முயற்சிக்கிறோம். இதற்கு ஓரளவு காலஇடைவெளி தேவைப்படும் என்றே நான் எண்ணுகிறேன்.


**தேடல்** — கடந்த வசந்தகாலத்தில் நடை—பெற்ற நிறவாத எதிர்ப்பு ஊர்வலம் இறுதியில் வன்முறையில் முடிவடைந்தது. பல்லினத்தவர்களும், பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்களும் கலந்து கொண்ட ஊர்வலத்தின் இறுதியில் நாஜிகளின் வீடு உடைக்கப்பட்டது. இந்த எதிர்பாராத நடைமுறை பல்லினத்தவர்களையும் பீதிக்குள்ளாக்கியது என பொது மக்கள் கருதுகின்றனர். இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்?

**ARA** — இந்நிகழ்வு ஏற்கெனவே திட்டமிட்டு நடைபெறவில்லை. ஆனால் இப்படி நடக்கலாம் எனவும் எதிர்பார்க்கப் பட்டது. இதற்கு அண்மைக்காலங்களில் மூன்று தமிழர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்குள்ளானதும், மற்றும் "ARA" நடத்திய கூட்டத்திற்கு எரிகுண்டு வீசியமை, பயமுறுத்தல்கள் போன்ற நடைமுறைகள் பலருக்கு ஆத்திர உணர்வை ஏற்படுத்தியிருந்தது. "Gerry Shiper" என்பவர் தமிழரின் மேலான தாக்குதலுக்கு தொடர்பான "பாரம்பரிய முன்னணியின்" தொலைபேசி அழைப்புக்கு பொறுப்பானவர். அதற்கு பதிலளிக்கிறவர். இந்த நபரை மக்களுக்கும், அயலவர்களுக்கும் இனம் காட்டுவதற்குமாக ஊர்வலம் இவரின் வீட்டின் முன்னால் முடிக்கப்பட்டது. இது ஆபத்தானதும்கூட. ஆனால் ஓர் உண்மை இந்த நடவடிக்கைகளில் பின்னர் நாஜிகளின் நடவடிக்கை மட்டுப்படுத்தப்பட்டன. எப்படியிருந்தபோதும், எதிர்காலத்தில் இவ்விடயத்தில் மக்கள் பாதுகாப்பாக வீடு சேர்வதற்கான ஒழுங்குகளில் அதிக கவனமெடுப்போம். மறுபக்கத்தில் அமைதியான ஊர்வலங்களில்கூட நாஜிகளின் நடவடிக்கைகளை (தாக்குதல், பயமுறுத்தல், வீடியோ படம் பிடித்தல் என்பன) காணலாம். பல் இனத்தவர்கள், சிறுபான்மையினர் என்போர் நாஜிகளின் தாக்குதலுக்குள்ளாகுதல் இலகுவானதும், இயல்பானதுமாகும். இதற்கு ஒரே வழி இவர்களின் நடவடிக்கைகளிற்கு எதிராக நேரடியாக முகம் கொடுத்தலேயாகும். வேறு வழியில்லை.

**தேடல்** — "ARA" ஓர் வன்முறை அமைப்பு' என்னும் கருத்து சிலரிடம் உள்ளது. இது அமைப்பினை மக்களிடம் இருந்து தனிமைப்படுத்தாதா?

**ARA** — இக்கருத்தையிட்டு நாம் கவலை கொள்கிறோம். இதற்கான காரணம், அமைப்பின் நடவடிக்கைகளில் சிலவற்றை மாத்திரம் திட்டமிட்டு முதன்மைப்படுத்தியதால் உருவான ஒன்று. அமைப்பின் மீது அச்சம்கொள்ள வைப்பதற்காக ஏற்படுத்திய ஒன்று. ஒரு முறை "ARA"யின் அமைதியான ஊர்வலத்தை பொலிஸ் தாக்கி கைது செய்துவிட்டு "வன்முறை நடவடிக்கைகள்" என்று மொட்டையாக செய்தி வெளியிட்டது. இதற்கு அமைப்பின் நடவடிக்கைகள் பற்றியும் கருத்துகளையும் மக்கள் மத்தியில் கொண்டு செல்வதன் மூலமும், அவர்களிடம் உரையாடுவதன் மூலமும், கூட்டமைப்பான "TCAR" உடன் இணைந்து வேலை செய்வதன் மூலமும் இந்த பிழையான அபிப்பிராயத்தை நீக்க முயற்சிக்கிறோம். ஆனால் "ARA" வன்முறை அமைப்பு என்ற கருத்து பரவுவதைவிட, அமைப்பின் நடவடிக்கைகள் ஆரோக்கியமான தாக்கத்தை ஏற்படுத்தாமையே கருத்தில் எடுக்கப்பட வேண்டியுள்ளது.

**தேடல்** — இதிலிருந்து பொலிசும், அரசும் எவ்வளவு தூரம் நிறவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஆர்வமுள்ளதாயிருக்கும் என நினைக்கிறீர்கள்?



**PULL 'EM UP NOW BEFORE THEY TAKE ROOT**

**ARA** — வட அமெரிக்காவில் நீண்டகால பாரம்பரியமுள்ள ஸ்தாபனமயப்பட்ட நிறவாதம் உள்ளது. அரசும் பொலிசும் முழு ஆர்வமெடுத்தால்கூட இது சாத்தியமற்ற ஒன்று. மக்கள் மத்தியில் பரந்துபட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது ஒன்றுதான் நிறவாதத்தை இல்லாமல் செய்வதற்கான ஒரே வழி! இதனை யார் முன்னெடுத்தாலும் எடுக்காவிட்டாலும் "ARA" முன்னெடுக்கும்.

**தேடல்** — நிறவாதம் இன்று கனடாவில் மட்டுமல்லாது உலகளாவிய அடிப்படையில் வட அமெரிக்கா, ஐரோப்பா என்று எல்லா இடங்களிலும் பரவலாக வளர்வதற்கான காரணம் என்ன?

யுகயு — இதனை அடிப்படையில் சமூக பொருளாதார பிரச்சனையாகவே பார்க்கிறேன். இது உலக பொருளாதார அமைப்பு மாற்றத்தின் விளைவாகும். அதாவது மேற்கு, கிழக்கு என பிரிந்திருந்து போட்டியிட்ட உலகின் பிரதான பொருளாதாரம் இன்று வடக்கு, தெற்கு என வளர்ச்சியடைந்த, வளர்முக நாடுகள் என்று பிரித்துப்பார்க்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வெள்ளையினத்தவர் தாம் அனுபவித்ததாக எண்ணிய சில வசதிகளை இன்றைய உலகப்பொருளாதார மாற்றத்தின் விளைவால் இழக்க நேரிடும் போது வளர்முக நாடுகளின் மக்களை எதிரிகளாக கருதுகின்றனர். இவையே குடிவரவுச்சட்டங்களில் ஏற்பட்ட இறுக்கமான மாற்றங்கள், நிறவாதம் அதிகரிப்பு என்பனவற்றின் அடிப்படை காரணங்களாகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு மறுபக்கம்

# நிறவாதமும். தோலின் நிறம் என்பதும் பற்றி! !

இக்கட்டுரையின் நோக்கம் தேடல்12ல் பிரசுரிக்கப்பட்ட நண்பர் சலீமின் "நிறவெறியும் எமதுபுலப்பெயர்வும்" என்பது பற்றி ஆக்கபூர்வமான ஒரு கருத்தோட்டத்தை வைக்க முயல்வதே. சலீமின் கட்டுரை ஓர் நன்னோக்கில் வைக்கப்பட்ட ஒன்று என்பதை நாம் முதலில் வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். சலீம் கனடாவில் புலம் பெயர்ந்து வாழும் தமிழருடைய பல்வேறு அனுபவங்களை இணைத்தும் தொகுத்தும் முன்வைத்துள்ளார். இதில் முக்கியமாக இனவாதப்போக்கு பற்றி தனது ஆய்வையும் செய்துள்ளார். இவ்வாறான யதார்த்த அனுபவங்கள் இன்றைய சூழ்நிலையில் முன்வைக்கப்பட்டு ஆராயப்படல் வேண்டும். இம்முயற்சிகள் மிகவும் வரவேற்கத்தக்கது. மேலும் இவை வளரவும் வேண்டும்.

கட்டுரை பற்றிய எனது கருத்தோட்டம் அதன் உள்ளடக்கம் பற்றியது அல்ல. மாறாக அதன் உருவம் பற்றியது. இங்கு உள்ளடக்கம் எனும்போது அதன் பொருளடக்கத்தையும். அதன் உருவம் எனும்போது அவரது தொனி. அல்லது பாஷை பிரயோகம் என்பன பற்றியே குறிப்பிடுகிறேன். சலீம் பார்த்த ஆராய்ந்த ஒரு பொருளை எவ்வாறான ஒரு பாஷைத் தொனியில் முன்வைக்கின்றார் என்பதும் அவ்வாறு அவை வைக்கப்படும் போது அதில் ஏற்படும் சர்ச்சைகள் பற்றியே எனது ஆர்வத்தை செலுத்த விரும்புகிறேன்.

கட்டுரை நிறவெறி. காலனித்துவ வரலாறு. சுரண்டல். ஒடுக்குமுறை. நவகாலனித்துவம். பலதேசியக் கம்பனிகள் எனப்பல பொருட்களை உள்ளடக்கியுள்ளது. இவை பற்றி ஆதாரங்கள். பிரச்சனைகள் எவருக்கும் முரண்பாடு இருக்கமுடியாது. இவை நடந்தன நடந்து கொண்டிருக்கின்றன. இவ்வாறு சமூக. உலக அநீதிகளுக்கு எதிராக போராடுதல் என்பது அடிப்படையானது என்பதில் ஐயமும் இல்லை. ஆனால் இவ்விடயங்களை சலீம் சொல்லும்பாணியில் இனவாதத் தொனி விழுகின்றதா என்பதே எனது கவலை. உதாரணமாக சலீமினுடைய ஓர் கூற்று ". . : முன்னூறு வருடங்களாக எம் தேசங்களை ஆண்ட வெள்ளையின அரசுகளின் பிரதிநிதிகள் யார்? கடற் கொள்ளை காரர்களாகவும். சுரண்டல் வியாபாரிகளாகவும் எமது தேசங்களை வந்தடைந்தவர்கள் பின்னர் எம்மையே அடிமைகளாக்கினர். (பக்கம் 2i. பந்தி 2) இக்கூற்று வெள்ளையினம். கடற்கொள்ளை. சுரண்டல் ஆகிய மூன்று விடயங்களை இணைத்து இருக்கின்றது. இக்கூற்றை நான் முதலில் வாசித்தபோது எனக்கு முதல் பட்ட எண்ணம் வரலாற்று ரீதியாக வெள்ளை இனத்தவர் கடற்கொள்ளைகாரர். சுரண்டல்காரர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே. இக்கூற்றை வாசித்த வேறு சில வாசகர்களுக்கும் இதே அனுபவம் ஏற்பட்டிருக்ககூடும். ஆனால் சலீம் அவ்வாறு கூற வரவில்லை. அவரது கூற்றின் அர்த்தம் என்னவென்றால் " எம் தேசங்களை ஆண்ட வெள்ளையின அரசுகளின் பிரதிநிதிகளே" கடற்கொள்ளை காரர்களும். சுரண்டல்காரர்களும் என்பதே. ஆதலால் எம்மை ஆளாத அல்லது காலனித்துவ நாடுகளை வரலாற்றில் கொண்டிராத ஏனைய "வெள்ளையின" அரசுகள் கடற்கொள்ளை காரர்களாகவோ. அல்லது சுரண்டல் வாதிகளாகவோ இல்லாதிருந்திருக்கலாம். ஆகவே சலீம் சகல வெள்ளையின அரசுகளிற்கும் கடத்தல்கார. சுரண்டல் வரலாற்றிற்கும் முடிச்சுப்போட முன்வரவில்லை என்றே நம்புகின்றேன். இது அவரது கூற்று பற்றிய ஒரு பார்வை.

இக்கூற்றை இப்போது இரண்டாவது தளத்தில் வைத்து ஆராய்ந்தால் எம்மையாண்ட "வெள்ளையின" அரசுகளின் "பிரதிநிதிகள்" கடற்கொள்ளைகாரர்களாகவும். சுரண்டல் வாதிகளாகவும் இருந்தார்கள் எனின் அவர்கள் போர்த்துக்கீச. டச்சு. பிரித்தானிய மக்களையும் பிரதிநிதித்துவ படுத்தியிருந்தார்கள் என்பதை சலீமின் கூற்று அர்த்தப்படுத்தி நிற்கும். அவ்வாறு குறிப்பின் அது அக்கால கட்டத்தில் இந்நாடுகளில் முதலாளித்துவம். சுரண்டல் ஆகியவற்றிற்கெதிராக போராடியவர்களையும் சேர்த்து(துரதிஷ்டவசமாக வெள்ளைத்தோல் உடையவர்களாயும்) எம்முன் பொது எதிரிகளாக்குவது கூடாது. வெள்ளை தோலை வெறுமனே அநீதிகளுடன் மட்டுமே பொதுமைப்படுத்தி தொடர்பு படுத்துவது வெள்ளை தோல் பற்றி எமது இனவாதத்தை வளர்த்து செல்ல வழிவகுக்கும்.

சலீமின் கூற்று பற்றி மூன்றாம் தளபார்வை ஒன்றை இப்போது வைப்போம். அவரது கூற்று உண்மையாயின் "வெள்ளையின" அரசுகள் மட்டும்தான் இக்கொள்ளைகார. சுரண்டல் குணாம்சத்தை உலக சரித்திரத்தில் கொண்டிருக்கின்றனவா? என்ற பிறிதொரு கேள்வி எழும். உதாரணமாக தமிழர் வரலாற்றில். அவர்களின் இலக்கியங்களில் சோழர் காலம் பொற்காலமாக வழமையாக வர்ணிக்கப் பட்டிருந்தாலும் இவர்கள் மேற்கொண்ட காலனித்துவ படையெடுப்பு கொள்கை காரணமாக தெற்காசிய நாடுகள் பலவற்றில் அக்காலம் ஓர் இருண்ட காலமாகவே வருணித்து நின்றன. 7ம் நூற்றாண்டில் மீண்டும் எழுந்த சோழ அரசு தனது சாம்ராஜ்ய விஸ்தரிப்பை அதிகரிக்க நல்ல ஓர் கடற்படையை வைத்திருந்தது. இது இக்காலத்தின் தெற்காசியாவில் எழுந்த முதலாவது கடற்படை என்றும் சிலரால் வர்ணிக்கப்படுகிறது. சோழர் இக்கடற்படை பலத்துடன் பல அயல்நாடுகளை கடல் கடந்து ஆக்கிரமிப்பு செய்தனர். இக்காலகட்டத்தில் சலீம் பாவித்த கடற் கொள்ளை. சுரண்டல். காலனித்துவம். ஒடுக்குமுறை என்ற சொற்களும் அதன் அநீதியான அர்த்தங்களும் பிரபலமாக பிரச்சாரப்படுத்தப்படாததினால் தமிழராகிய நாம் அவற்றை. சமயத்தை பரப்ப முயன்ற செய்த ஒரு புனித படையெடுப்பாகவும் பொற்காலமாகவும். எழுதியும் விளங்கியும் கொண்டோம். எனவே இவ்வாறான ஒரு

சலீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சோழ சாம்ராஜ்யத்தை கனவு கண்ட ராஜ ராஜ சோழனையும், அவரது மகனான ராஜேந்திர சோழனையும் அவரது படைகளையும் பரிவாரங்களையும் எவ்வகைக்குள் நாம் சனியின் அளவு கோலினூடு அடக்கலாம். என்ற கேள்வி எப்போதும் எம்முன் குற்ற உணர்வுடன் நிற்கும். மதுரை பல்கலைக்கழக சரித்திர பேராசிரியரான கே. கே. பிள்ளை அவர்கள் ''தென்னிந்தியாவும் இலங்கையும்'' என்ற தமது நூலில் சோழரின் பேராதிக்க மனோபாவத்தை தவிர்க்க முடியாத நிலையில், அல்லது தட்டிக்கழிக்க முடியாத நிலையில் விபரிக்கின்றார். சோழர் இக்காலகட்டங்களில் இலங்கையில் இந்து ஆலய நிர்மாணிப்பு, மற்றும் சோழர் புகழ் பேசும் கல்வெட்டுகளை உருவாக்கிய அதே வேளை புத்தவிகாரை அழிப்புகளிலும் ஈடுபட்டனர். அதேவேளை திருகோணமலையிலுள்ள புத்த கோயில் ஒன்றுக்கு தமது நிலையை பலப்படுத்தும் அவசியத்தின் பொருட்டு காணிக்கைகளையும் வழங்கினர். கூடவே இலங்கையில் சிங்களப் பகுதியில் ஒடுக்கப்பட்ட சிங்கள மக்கள் கிளர்ச்சி செய்த போது மிலேச்சதனமாக அடக்கினர். இது பற்றி சோழருக்கு குற்ற உணர்வு இருப்பதாக பிள்ளை அவர்கள் கூறுகிறார். தம்மை எதிர்த்தோரை சோழர். அவர்களது தலையை வெட்டியும். (இக்காலத்து மண்டையில் போடும் முறை) அங்கங்களை வெட்டியும். நாடு கடத்தியும். மிருகத்தனமாக அடக்கினர். தம்மை எதிர்த்த மன்னனின், அல்லது இளவரசனின் தாய், மனைவி, சகோதரி, என்போரின் மூக்கு வெட்டப்பட்ட கதைகளும் இங்கு காணப்படுகின்றன. பல அரசகுலப் பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டனர். (ஆதாரம், தென்னிந்தியாவும் இலங்கையும்) இவ்வரலாற்று குறிப்புகள் எமக்கு புதிதாக எதுவும் வியப்பைதரப் போவதில்லை. ஏனெனில் 80களில் நாம் 'IPKF 'இன் இலங்கை அனுபவத்தை பெற்றவர்கள் சோழர்கள் எவ்வாறு சரித்திரத்தில் தமது மேலாதிக்க மனோபாவத்தை பதித்தார்களோ அவ்வாறே அராபியர்களும் இந்தியாவில் பதித்தார்கள். அவர்களின் படையெடுப்பும். ஆட்சியும். ஆதிக்கமும் நீண்டகாலம் இந்தியாவில் விளங்கின. மேலும் இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பானில் இவ்வாறான படையெடுப்புக்களிலும். காலனித்துவ ஆதிக்கத்திலும் ஈடுபட்டார்கள். அவர்கள் அந்நாடுகளில் செய்த சுரண்டல்களும் சித்திர வதைகளும் யாவரும் அறிந்ததே. இவ்வாறு உலக சரித்திரத்தில் பல நிறத்தை கொண்டவர்களும் பல்வேறுபட்ட காலங்களில் படையெடுப்பையும் ஆக்கிரமிப்பையும், சுரண்டலையும் செய்துள்ளனர். இவர்களில் பிரித்தானிய அரசு இக்காரியத்தை கச்சிதமாக. ஒழுங்கான நிர்வாகத்துடன். நிதானத்துடன் நீண்டகாலம் தனது ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளில் அவர்களது வளங்களை சுரண்டியது அல்லது அவர்களின் வளர்ச்சியை அழித்தது.

இலங்கையில் பூர்வீககுடிகள் (இவர்களை நாமும் சிங்களவரும் இனவாதமனோபாவத்துடன் வேடர்கள் என அழைத்தோம்) இன்னும் காடுகளில் வாழுகின்றார்கள். தமிழரும் சிங்களவரும் இவர்களின் மண்ணில் வாழுகின்றோம். உரிமைக்காக போர்செய்து மடியவும் செய்கிறோம். வெள்ளையர் கனடாவை கொள்ளையர் என வர்ணிக்கும் நாம் அதே வேளை (பக்கம்21. பந்தி 8) இந்நாட்டின் பூர்வீகக்குடிகளிடம் குடியுரிமை அனுமதி பெறாது கொள்ளையர் என வர்ணித்த வெள்ளையரிடம் குடியுரிமை பெற்று நாம் கனடியர்களானோம். கூடவே ''பூர்வீகக்குடிகளின் தேசத்தில் மற்றையோருக்குள்ளது போன்று வாழ்வதற்குரிய சகல உரிமையும் எமக்குமுண்டு''(பக்கம் 33 கடைசிப்பந்தி) கொள்ளையர் என வர்ணிக்கப்பட்டவர்களிடம் அதே நேரம் கொள்ளையில் பங்கு கேட்கிறோம். இவ்வாதங்கள் சுய முரண்பாடு உடையவை மட்டுமன்றி விசித்திரமானவையாயும் இருக்கின்றன.

எனவே நான் இங்கு முன்வைக்க முனையும் கருத்து என்னவெனில் உலக சரித்திரத்தில் காலனித்துவ மனோபாவம் கொண்ட படையெடுப்புகளில். ஆக்கிரமிப்புகளில். பல காலகட்டங்களில் பல்வேறு நிறத்தை உடையவர்களும் பங்கெடுத்துக் கொண்டார்கள். வளங்களை பங்கிடும் எமது சரித்திரமும் இதற்கு விதி விலக்கல்ல. இவ்வாறான காலனித்துவ சுரண்டல்களுக்கு எதிராக போராட வேண்டும் என்பதில் எவருக்கும் ஐயமில்லை ஆனால் ஓர் சுரண்டும் ஸ்தாபனத்தை அல்லது வர்க்கத்தை அல்லது ஒரு குழுவை கூடவே அவற்றின் சரித்திர மனோபாவத்தை மனிதத்தோலின் நிறத்துடன் அவசரப்பட்டு இணைத்து பொதுமைப்படுத்துவது ஒரு அபத்தமான இனக்குணாம்சம் மட்டுமல்ல கூடவே அடக்கப்பட்டோரின் மனதில். அடக்குவோரை அவ்வினத்தின் தோலுடன் இணைத்து நிற்கும் ஓர் இனவாத போக்கையும் வளர்த்து செல்லும்.

சமூக அநீதிகளுக்கு எதிரான போராட்டத்தில் மனிதர்களையும். ஸ்தாபனங்களையும் வகைப்படுத்துவதும். எதிரிகளின் சரியான இனங்காணலையும் அவர்களுக்கெதிரான ஏற்புடைய போராட்டங்களை முன்வைப்பதும் எமது சக்தியையும். ஆற்றலையும் ஒழுங்குபடுத்தவும் முனைப்பு படுத்தவும் உதவும். ஒரு இனவாதத்தை இன்னுமோர் இனவாதத்தால் அழிக்கமுடியாது. இது அவற்றை மேலும் இரு பகுதிகளிலும் வளர்க்கவே உதவும். வெள்ளை நிற ஆதிக்ககாரர்களை, சுரண்டல்காரர்களை நாம் வெள்ளை நிற இனம் என்பதிலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காண வேண்டும்.

''நிறவாதத்திற்கு எதிராக அணிதிரள்வோம்'' என்னும் சாமினியின் பேட்டிக்கட்டுரையில் (பக்கம் 16—30) அவர் வெள்ளை நிற இளைஞர்களை கொண்ட "ARA " அமைப்பையும் நிறவாத ''பாரம்பரிய முன்னணி'' யினரையும் வேறுபடுத்தி துல்லியமாக இனம்காட்டுகிறது. இவ்வாறு வகைகளை இனம் கண்டு ஏற்புடையவையுடன் இணங்கி நீதிக்காக போராடல் என்பது அத்தியாவசியமான ஓர் காரியம்.


மாறாக விசயதானங்களை தோலின் நிறத்துடன் அவசரப்பட்டு இணைத்து பொதுமைப்படுத்துவது எம்மை "அடக்கப்பட்டோர் இனவாதத்திற்கு" இட்டுச்செல்லவே வழிவகுக்கும். ''நாங்களும் — அவர்களும்'' (us -vs-them) என்ற பிரச்சனையை அணுகுவதிலும் பார்க்க உண்மைக்கும். நீதிக்குமான போராட்ட அணுகுமுறை சிறந்தது. தோலின் நிறத்தை பிரச்சனைகளில். லாபத்திற்காக. அதிகாரத்திற்காக. பாவித்த. பாவிக்கும் பலரும் பல இனத்திலும் இருக்கிறார்கள். அவர்களையும் அவர் ஸ்தாபனங்களையும் நாம் முறையாக இனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவு



காத்திருந்த
நம்பிக்கையும்
மகிழ்ச்சியும்
உணர்வுகளுடன்
கைகோர்த்துக் கொண்டன.

சிக்கல்களாலேயே
சிறைப்பட்டிருந்த மனதும்
சந்தோசத்தோடு
"இருப்புக்காய் . . ."
என. . . .

இதுவரைகாலமும்
ஆதிக்கம் செலுத்திய
வெறுப்பும்
விரக்தியும்
சலிப்பும்
சோகமும்
வாழ்க்கைக்காய் வழிவிட்டன!

'மறுபடியும். . . மறுபடியும்..'
என்றவாறு
எழுந்தும்
சொல்லும்
உறவு பாராட்டின.
நிலையும்
உணர்வும்
சண்டையிட்டுக்
கொண்டிருந்த போதும். .

கூரையிலிருந்து
விடியலுக்காய்
கூவும்
சேவல் போல்
நெஞ்சோ
"இறக்காதே. . ."
என

இங்கு
இருப்புக்காய் முடிவு.

அமுதன்

ஆதிக்க கருத்தியல் நிலையும், அவற்றை வளர்க்கும் ஆதரிக்கும், மனிதர்களும், ஸ்தாபனங்களுமே பிரச்சனை. இவர்கள் எல்லா இனங்களிலும், தோல்நிறங்களிலும் வெளிப்படையாக அல்லது மறைந்து இருக்கிறார்கள்.

---

**மேற்படி விமர்சனம் தொடர்பாக. . .**

விமர்சனக் கட்டுரையில் கூறியபடி எனது பாஷைபிரயோகம் மேற்படி கருத்தை வாசகர்களுக்கு தொனித்திருந்தால் விமர்சனத்தை ஏற்றுகொள்கிறேன். கட்டுரையை எழுதத்தூண்டிய அம்சங்களை தருகிறேன்.

— இங்கு வாழும் இலங்கையர்கள் பலரிடம் குற்றஉணர்வை நான் கண்டேன். நாம் இரண்டாம் தர அல்லது மூன்றாம்தர பிரஜைகளாக, இந்த நாட்டின் வேண்டாத விருந்தாளிகளாக வந்திருக்கின்றோம் என்று எண்ணுவதை உணர்ந்தேன். இது தேவையற்றது என்பதையே கூற முயற்சித்தேன்.

— காலனித்துவப்படுத்தப்பட்டிருந்த காரணத்தால் வெள்ளை தோலுடையவர்களை மேன்மையாக கருதும் போக்கும் எம்மில் பலரிடம் காணப்பட்டமை.

— கனடா அரசு எம்மை வைத்துப்பராமரிப்பதே பெரும் காரியம் ஆகவே இங்குள்ள பாரபட்ச நடைமுறைகளை கண்டுகொள்ளத் 'தேவையில்லை' என்னும் சிலரது மனோபாவம்.

— எம்மையும், எமது தேசங்களையும், இங்குள்ள பல்லினங்களையும் சுரண்டிய, சுரண்டுகின்ற ஏகாதிபத்திய கூட்டுக்களில் கனடா அரசும் ஒன்று என்பதை வெளிக்காட்டவும் எழுதப்பட்டது. வெள்ளை தோலுடையவர்களை பொதுமையான எதிரிகளாக நான் கருதவில்லை.

எப்படியிருந்தபோதும் நேசனின் விமர்சனமும், அதன் பாணியும் எனது ஆக்கத்தையும் எண்ணங்களையும் மேலும் செழுமையுறச் செய்தது. இது போன்ற விமர்சன இலக்கியங்களே வளர்ச்சி மாற்றத்திற்கு வழிவகுக்கும்.

— சமீர் —



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்களுக்காகப் பேசுவதாக உரிமை கொண்டாட வேண்டாம்... எங்களைப் பற்றிப் பேசுவதாக உரிமை கொண்டாடுவது இன்னும் மோசம்... எங்களோடு நின்று பேசுங்கள். எங்களுடைய போராட்டத்துக்கு ஆதரவாக நீங்கள் செய்ய வேண்டியவற்றுள் இதுதான் முதன்மையானது ....." அஸியா ட்ஜேபர்
(அல்ஜியர்ஸ் பெண்கள் — அல்ஜீரியா)
பெண்நிலைவாதிகள் என்ற முறையில் எங்களுடைய சகோதரர்களை நாங்கள் கேட்டுக் கொள்வது இதுதான்

ராஜினி திராணகமவையும் றிச்சார்ட் டி சொய்சாவையும் நினைவு கொள்ளும் வகையில், தமிழர் வகைதுறை வள நிலையம் ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் நாங்கள் பங்குபற்றியிருந்தோம். ராஜினி திராணகம தமிழீழ விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்டவர். றிச்சர்ட் டி சொய்சா இலங்கை அரசால் படுகொலை செய்யப்பட்டவர். ராஜினியும் றிச்சர்ட்டும் இரு வேறு இடங்களில் வேறுபட்ட காலங்களில் இலங்கை அரசாலும் தமிழீழ விடுதலைப் புலிகளாலும் மேற்கொள்ளப்பட்டு வந்த மனித உரிமை மீறல்களைப் பற்றிக் கண்டித்துப் பேசத் தயங்காதவர்கள். இவ் நினைவு கூரல் கொழும்பில் நடந்த நினைவு கூரலின் பிரதிபலிப்பாகவும் இருந்த அதேவேளை இந்நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்திய தமிழர் வகைதுறை வள நிலையத்தின் செயல்பாடு எங்கள் எல்லோராலும் வரவேற்கப்படுகிறது. அவர்களுடைய வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்த அரசியல் சூழலை விட்டுப் பிரித்துப் பார்ப்பதும், அவர்களுடைய காத்திரமான அரசியல் பங்களிப்புக்களை அவர்களுடைய வாழ்வில் இருந்து வேறுபடுத்திப் பார்ப்பதும், அவர்களுடைய வாழ்வுக்கும், சிந்தனைக்கும், பணிகளுக்கும் நியாயம் தருவதாக இருக்காது.

தேடகம்! தமிழர் வகைதுறை வள நிலையத்தால் கருத்தாடல் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இந்தக் கருத்தாடலை ஆற்றுப்படுத்தியவர் ஒரு ஆண்: சபா நடேசன். கருத்தாடலில் முதன்மைப் பேச்சாளர்களாகக் கலந்து கொண்ட இருவரும் ஆண்கள்: ராஜ்மோகன், சேரன். ராஜனியையும் றிச்சர்ட்டையும் புரிந்து தெரிந்திருந்தவர்கள் தங்களுடைய தனிப்பட்ட அனுபவக் கதை கூறலின் ஊடாக (Personal Narrative) ராஜினி, றிச்சர்ட் இருவரதும் காத்திரமான அரசியல் பங்களிப்புகளை நினைவு கூர்வதாகக் கூட்டம் அமைந்தது. ராஜினியின் படுகொலைக்கு முன்பாகவும் பின்பாகவும் நிகழ்ந்த பல சம்பவங்களையும் அவை பற்றிய தனது எண்ணங்களையும் ராஜினியுடன்தான் பழகிய காலங்களையும் விபரமாக நினைவு கூர்ந்து பேசினார் ராஜ்மோகன். இவ்வாறு பேசுகிற போது, எவ்வாறு ராஜினியுடனான நட்புக் காரணமாகத் தான் பெண்நிலைவாதத்துள் வந்து சேர்ந்ததையும் கோடிட்டுக் காட்டினார். ராஜினியினதும் றிச்சர்ட்டினதும் கருத்தியலிலும் (Idelogy) பணியிலும்

## பெண்நிலைவாதிகளிடமிருந்து

> எங்களுக்காகப் பேசுவதாக உரிமை கொண்டாட வேண்டாம்... எங்களைப் பற்றிப் பேசுவதாக உரிமை கொண்டாடுவது இன்னும் மோசம்... எங்களோடு நின்று பேசுங்கள். எங்களுடைய போராட்டத்துக்கு ஆதரவாக நீங்கள் செய்ய வேண்டியவற்றுள் இதுதான் முதன்மையானது.

## ஒரு பகிரங்கக் கடிதம்

உள்ளார்ந்து இருந்த அரசியல் நிலைப்பாடுகளைப் பற்றிப் பரிசீலனை செய்து இருவரதும் பங்களிப்புகளைப் பற்றிச் சேரன் கருத்துத் தெரிவித்தார். தேடகத்தினுள் ஒட்டப்பட்டிருந்த போஸ்டர்களையும், வெலெஸ்லி / பார்லிமென்ட் பகுதித் தமிழ்ச் சமூகத்தையும் அதனருகே வாழும் ஒரு பால் உறவுச் சமூகத்தையும் (Gay community) எதிரெதிர் நிலைகளைச் சித்தரித்துக் காட்டும் உதாரணங்களாகக் குறிப்பிட்டு அவற்றின் அரசியல் முக்கியத்துவத்தை ராஜினி, றிச்சர்ட் ஆகியோரின் பங்களிப்புகளூடாகக் கருத்துத் தெரிவித்தார். தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்நிலைவாதம், பாலியல் அரசியல் என்பவற்றின் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்திய அமைதிப்படை வடக்குக் கிழக்கை ஆக்கிரமித்திருந்த போது மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் இந்திய அமைதிப் படைக்கு ராஜினி எவ்வாறு சவாலாக விளங்கினார் என்பதைப் பற்றியும் இரு பேச்சாளர்களும் குறிப்பிட்டனர்.

பேச்சுக்களின் முடிவில் இடம்பெற்ற கலந்துரையாடல் பெண்நிலைவாதிகளுக்கும் ஒரு பால் உறவுச் சமூகத்துக்கும் எதிரான தீவிரமான போக்கை இனங்காட்டியது.

ராஜினி திரணகமவும் றிச்சர்ட் டி சொய்சாவாலும் பேசப்பட்ட அரசியல் தன்னாதிக்கம் (Political Autonomy) மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாக இலங்கையர்கள் புரிந்து வந்த பணிகளுக்கு மிகுந்த அங்கீகாரத்தைக் கொடுத்திருந்தது என்பது எங்களுடைய அபிப்பிராயம். இந்த அங்கீகாரம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் கிலி ஊட்டியது. றிச்சர்ட், ராஜினி இருவரதும் பணிகளால் ஏற்பட்ட நல்விளைவுகளே அவர்களின் படுகொலைக்கும் காரணமாயிற்று.

அவர்களது படுகொலையை நியாயப்படுத்தத் தமிழீழ விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் அவர்கள் மீது சேறு பூச வேண்டி இருந்தது. இருவரதும், கருத்தியலையோ அல்லது அரசியலையோ இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் மாசுபடுத்த முடியாத வகையில் அமைந்திருந்தது. ராஜினியினதும் றிச்சர்ட்டினதும் அரசியல் தார்மீக நிலை. எனவே அவர்களது அந்தரங்க வாழ்வின் "ஒட்டைக்காரத்தனம்" பற்றிய ரகசிய வதந்திப் பிரசாரத்தை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் முடுக்கிவிட்டனர்.

இலங்கை அரசின் "சமூக ஜனநாயகத்தன்மை"க்குள்ளும் புலிகளின் விடுதலைப் போராட்டத்துக்குள்ளும் காணப்படுகிற கருத்தியல் முரண்பாடுகளையே இது சுட்டிக் காட்டுகிறது.

இந்த வகையில் பேச்சாளர்களிலொருவரும், ராஜினியின் வாழ்க்கையில் அவ்வளவு முக்கியத்துவம் பெறத் தகுதியற்ற அம்சம் குறித்துக் குவியப்படுத்தியமை துரதிஷ்டவசமானதாகும். ராஜினியின் பணிகளிலிருந்து நாம் பெற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் முனைப்புக்கள், மக்களை அணிதிரட்ட வல்ல அரசியல் நெறிமுறைகள், சனரஞ்சக அரசியல் கல்வியுணர்வூட்டல் போன்ற அம்சங்கள் வெறும் 'விருப்புக்' கதைகளுக்குள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமுங்கிப் போய்விட்டன.

உங்களோடு பணிபுரிந்து வந்தமையால் பெண்நிலை மற்றும் பால் (Gender) சார்ந்த விவகாரங்களில் உங்களுக்கு உள்ஒளி எதுவும் கிடையாது என்பது நாங்கள் ஏற்கனவே தெரிந்து கொண்ட விடயம்தான். இலங்கை அரசியலுடன் பரிச்சயமானவர்களுக்கு இந்த விவாகாரங்கள் புதியவையும் அல்லத்தான்.

இன்னும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லலாம்;

இலங்கையில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் கொண்டு வருவது தொடர்பாக ஒழுங்கு செய்யப்பட்ட டிசம்பர் '92 மாநாட்டில் — உங்களில் பல பேர் அதில் பங்குபற்றியிருந்தீர்கள் — அமைப்பாளர்கள் பெண்களின் பங்களிப்பைப் புறக்கணித்து விட்டார்கள். மாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் உருவாக்கிய "தருணத்திற்கேற்ற சிறுகுழு" ஒன்றுக்கு அறிக்கை யொன்றை வாசிக்கப் பின்னர் அனுமதி வழங்கப்பட்டது. இந்த வகையான பிரச்சினைகளைப் பற்றி மிகத் தெளிவாக நாங்கள் கருத்துக்கள் தெரிவித்திருந்த போதும். அவை. எங்களுடைய உதடுகளுக்கும் உங்களுடைய மூளைகளுக்குமிடையில் எங்கோ ஓரிடத்தில் காணமல் போய்விட்டன.

புலம் பெயர்ந்த தென்னாசியச் சமூகங்களின் கலை. கலாசாரம் பற்றிய அக்கறைகளுடன் இயங்கும் தேஸ்பிரதேஸ் எனும் அமைப்பு அண்மையில் இலங்கைச் சமூகங்களுடன் ஒரு சந்திப்பை அண்மையில் நடத்தியது. பால். பாலியல்பு (Gender and Sexuality) ஆகியவற்றைக் காட்டி தேஸ்பிரதேஸ் அமைப்பின் முக்கியத்துவம் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. பாலியல்பு. பால். வர்க்கம். இனம். இனத்துவம் ஆகிய எல்லாவகையான ஒடுக்குமுறைகளையும் எதிர்க்கிற ஒரு அமைப்பே தேஸ்பிரதேஸ்.

தமிழ்ச் சமூகத்தில் வாழ்கிற பெண்கள். ஒரு பால் உறவினர் ஆகியோர் பல தளங்களில் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதும் இந்த ஒடுக்குமுறைகளை நீக்க ஒரு அறிவூட்டல் வழிமுறையும் இவர்களையும் சேர்த்துக் கொள்ளும் நிலையும் அவசியம் என்பதும் தெளிவான ஒன்றாகும். கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் இவை பற்றிய கதைப்புகள் நமக்கிடை நிகழ்ந்த போதும் "சேர்த்துக் கொள்வது". உரிய பிரதிநிதித்துவம் வழங்குவது போன்ற அடிப்படையான விடயங்களை நீங்கள் ஏன் புரிந்து கொள்ள மறுக்கிறீர்கள் என்பது தெளிவற்ற ஒன்றாகவே இருக்கிறது.

எமது சமூகத்தில் பெண்நிலைவாதிகளின் அரசியல். கோட்பாட்டுப் பங்களிப்புகளின் ஒரு சிறிதளவையாவது நீங்கள் அங்கீகரிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இவ்விடயங்கள் அனைத்தும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதை விளக்குவோம்.

தேஸ்பிரதேஸ் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தை எடுத்துக் கொள்வோம். பெண்நிலைவாதம். ஒரு பால் உறவு (Gay and Lesbianism) போன்ற விடயங்கள் குறித்து இணைந்து பணிபுரிவதற்கான அமைப்பை தேஸ்பிரதேஸ் அமைப்பாளர் ஒருவர் விடுத்த போது. இந்த விடயங்கள் எல்லாம் தமிழ்ச் சமுதாயத்துக்கு அன்னியமானவை என்று உங்களிலொருவர் தெரிவித்தார்.

"இவையெல்லாம் கனடாக்காரரின் பிரச்சினைகள்" என்று சொன்னீர்கள்.

"இலங்கையில் நடக்கும் ஆயுதப் போராட்டமே எங்களுடைய தலைமைப் பிரச்சினை" என்பதே உங்களுடைய நிலைப்பாடு.

"நாம் பெண்நிலைவாதம் என்கிறோம்... நீங்கள் தேசியவாதம் என்று சொல்கிறீர்கள்... நாம் நிறவெறி என்று சொல்கிறோம்... மறுபடியும் தேசியவாதம் என்று சொல்கிறீர்கள். பெண்களுக்கெதிரான வன்முறை நடக்கிறதே என்று சொல்கிறோம்... பிறகும் பிறகும் தேசியவாதமே — தேசியவாதம் மட்டுமே உங்களுடைய குறி என்று சொல்கிறீர்கள்" என்று எங்களிலொருவர் அன்றைய கூட்டத்தில் குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசியப் போராட்டத்தில் பெண்களுக்கெதிரான வன்முறை என்பதும் தமிழ்ப் பெண்களை ஒடுக்கும் ஒரு அடிப்படை அம்சம் என்பதை நீங்கள் உணரத் தவறுகிறீர்கள். கடந்த தேடகம் கூட்டத்தில் சபையிலிருந்து ஒருவர் தெரிவித்த கருத்து மிகவும் முரண்நகை பொருந்தியது: "பெண்கள் பெண்நிலைவாதம் மட்டும் பற்றித்தான் பேசலாம்; தேடகம் ஒழுங்கு செய்திருக்கும் இந்தக் கூட்டம் தேசியவாதம் பற்றியது." இது அவர் சொன்னது. இதிலிருந்து கிடைக்கும் தீர்ப்பு என்னவென்றால் இந்த வகையான நிகழ்ச்சிகளில் நாம் பேசக்கூடாது! அவர் மேலும் தொடர்கையில். ஒருவர் பெண்ணிலைவாதத்தைப் பற்றி விரும்பினால் பேசலாம். ஆனால் இரண்டையும் பற்றி ஒரே நேரத்தில் பேச முடியாது என்றார்.

பெண்களை "யுத்தத்தின் கழிவுக் குவியலாகவே" பண்டப்படுத்திப் பார்க்கும் தேசியப் போராட்டம் பொறுத்துக் கொள்ள முடியாது. யுத்தத்தில் பங்கெடுக்கும் பங்கெடுக்கும் பெண்கள் கூட ஆணாதிக்கத்தினால் வழங்கப்படும் கடமைகளையே செய்ய நேர்கிறது. தங்களுடைய ஒடுக்குமுறைகளைப் பற்றிப் பேசத் தகுதியானவர்கள் என்று பெண்கள் பார்க்கப்படுவதில்லை.

பால் (பெண்கள்) பிரதிநிதித்துவம். பால்சார்ந்த விடயங்கள் பற்றிப்பேசுதல். அவ்விடயங்கள் தொடர்பாக அமைப்பு ரீதியாக வேலை செய்தல் ஆகிய விடயங்களில் இந்த நிகழ்ச்சியின் அமைப்பாளர்களுக்கும். கருத்தாடலை வழிநடத்தியவருக்கும் பேச்சாளர்களுக்கும் இருக்கக்கூடிய மட்டுப்படுத்தல்களை ஏற்றுக் கொள்ளத் தவறியது அவர்களுக்குக் கிடைத்திருந்த அற்புதமான சந்தர்ப்பத்தை அவர்கள் தவறவிட்டு விட்டமை துரதிஸ்டமானதே. இதனால் தேசியவாதப் போராட்டங்களில் ஆண்கள் சலுகை பெற்றிருப்பதை அங்கீகரிக்கத் தவறிவிட்டனர்.

இத்தகைய ஒரு சூழலில் பகிரங்கமாகவே உங்களுடன் பணிபுரிய முன்வந்த பெண்நிலைவாதிகளான நாம் உற்சாகம் இழந்து போவதாக உணர்கிறோம். அதேவேளை பெண்ணிலைவாதிகளுடன் மட்டுமே நாம் பணி புரிவோம் என்றும் ஆண்களை எங்களுடைய வேலைகளில் சேர்த்துக் கொள்ள மாட்டோம் என்றும் எங்களைப் பற்றி விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இத்தகைய விமர்சனங்களை நாம் எதிர்க்கிறோம். சமத்துவ அடிப்படையில் எங்களுக்கும் உங்களுக்கும் கருத்தாடல் நிகழவேண்டும் என்பதே எமது தொடர்ச்சியான நிலைப்பாடு. இத்தகைய கருத்தாடல்கள் இடம்பெறாமல் போராட்டங்களில் ஐக்கியம் சாத்தியமில்லை.


தொடர்ந்தும் போராட்ட ஐக்கியத்துடன் . . .

சாமினி, அமிர்தவர்ஷினி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எண்ணங்கள்

அழகிய காலைப்பொழுது
பனிக்கூம்புகளில்
ஆதவனின் வர்ணஜாலங்கள்
கடும் கூதல்காற்று
கதிரவனை தோற்கடித்து
எலும்புகளில் நெட்டி முறிந்து

கண்ணீரை கடந்து
வெற்று உடல்களை கடந்து
கடல் கடந்து
துருவப்பிரதேசத்தில்
துயரங்களை சுமந்து
நிமிர்ந்து நிற்க
வேலை தேடி
பாதயாத்திரை.

எண்ணங்கள் மண்ணை நோக்கி
மனைவி மக்களை நோக்கி
உற்றார் உறவினரை நோக்கி
வெற்றுத்துப்பாக்கிக்கு
பதில் சொல்லகாத்திருக்கும்
எம்மக்களை நோக்கி

கால்கள் விரைகின்றன
துயரங்கள் கூடுகின்றன
வட்டிக்கடன்கள் மட்டும்
விதிவிலக்கா?

ஆதவனுக்கும் கூதலுக்கும்
பனிப்போர்
ஆதவன் தோற்றாலும் — இந்த
ஆத்மாவின் பாதங்கள்
ஓய்ப்போவதில்லை.

ரதன்

## விழிப்பு

இவர்கள்
இன்னமும் ஏன்?
விழிக்கவில்லை!

குட்ட குட்ட
குனிந்து கொண்டே
இருப்பவர்கள்

நிமிர வேண்டும் என்ற
எண்ணமே அற்றவர்கள்

எதற்காக
குட்டப் படுகிறோம்
என எண்ணிப்
பார்க்கக் கூட
நேரம் அற்றவர்கள்

ஏதோ வாழ்வதற்காய்
வாழ்ந்து கொண்டு
இருப்பவர்கள்

இவர்கள் எப்படி
விழிப்பார்கள்.....

நிக்சன்

## தமிழே!

தமிழே!
நீ கருத்துப் பரிமாற்ற கருவியா?
தமிழே!
நீ கருத்துப்பரிமாற்றச் சாதனமா?
கருவி. சாதனம்
தனித்தும் இருப்பவை
பிரிந்தும் இருப்பவை
தமிழே!
நீயும். நானும் தனித்தும்
இருக்கவில்லை
பிரிந்தும் இருக்கவில்லை
என் சிந்தனையில் நீ இருக்கிறாய்
என் சிந்தனையாய் நீ இருக்கிறாய்
சிந்தனையின் சிறந்தலே மனிதம்
மனிதத்தின் மாண்பே ஆத்மா
என் ஆத்மாவின் சாரமும் நீ
சரீரமும் நீ

அ.கி. பரிதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஒரு விமர்சனம்

மார்ச் 5ம்திகதி தமிழர் வகைதுறைவள நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட ராஜினி. றிச்சாட் டி சொய்சா நினைவு தினக்கூட்டம் பற்றிய எனது கருத்துக்களை மூன்று பிரிவுகளாக பிரித்துள்ளேன்.

**1. கூட்டம் பற்றியது**

**2. தமிழர் வகைதுறைவள நிலையம் பற்றியது**

**3. பெண்ணிலைவாதம் பற்றியது**

முதலாவதாக ராஜினி. றிச்சாட் அழிக்கப்பட்டு நான்கு வருடங்களின் பின்னர் இத்தகைய கூட்டத்தினை ஒழுங்கு செய்தது போற்றத்தக்கது. இவர்கள் மறைந்து நான்கு வருடங்களின் பின்பும் இவ்வளவு மக்கள் கூட்டத்திற்கு வருகை தந்தது. அவர்கள் மக்கள் மத்தியில் செய்த வேலைகளும். அவர்களது இலட்சியங்களும் வீண் போகவில்லை என்பதை எடுத்து காட்டுகிறது.

அடுத்து பேச்சாளர்களை எடுத்து கொள்ளுவோமானால் ராஜ்மோகன் ராஜினி திராணகம சம்பந்தமாக தனது பார்வைகளை அவருடன் வேலை செய்தவர் என்ற ரீதியில் விளக்கிய போது யாழ்ப்பாண ஆண்ஆதிக்க சமூகம் எவ்வாறு நடந்து கொண்டது என்பதை நன்றாக அறியக்கூடியதாக இருந்தது. ராஜ்மோகன். ராஜினி ஆடம்பரமாக உடைஉடுத்தியவர் என்று சில நடவை கூறியிருந்தார். இது சம்பந்தமாக Dr.பார்வதி கந்தசாமி தான் ராஜினியுடன் ஒன்றாக வேலைசெய்தவர் என்றும் ராஜினி ஆடம்பரமாக உடுப்பதில்லை மிகவும் எளிமையாக உடுத்துபவர் என்றும் ராஜ்மோகன் ஏன் அவ்வாறான பதங்களை பாவித்தார் எனக்கேட்டார். பதிலளித்த ராஜ்மோகன் தான் அவ்வாறு கூறவில்லை. அவரை விமர்சித்தவர்கள் கூறினார்கள் என்று கூறியதாக சொன்னார்.

அடுத்ததாக பேசிய சேரன் றிச்சாட் டி சொய்சா. ராஜினி பற்றிய கருத்துக்களையும். றிச்சாட்டின் கவிதை ஒன்றையும் இன்னொரு கவிதையையும் ராஜினியின் ஆக்கங்களில் சில வசனங்களையும் கூறினார். இதன்பின் நடந்த கலந்துரையாடலில் பலர் பங்குபற்றியது பாராட்டத்தக்கது. சிவகுருநாதன் பெண்விடுதலை. பெண்நிலை வாதம் சம்பந்தமாக சில கருத்துப் போக்குகளும் பாகுபாடுகளும் உள்ளது என்று கூறிய பின் ராஜினி பெண்ணிலைவாதம் தொடர்பாக எந்த கருத்துக்களை கொண்டிருந்தார்? எனக்கேட்டார். பதிலளித்த சேரன் உதாரணமாக 85ம் ஆண்டளவில் ஏறக்குறைய 35 விடுதலை இயக்கங்கள் தமிழ்ப்பிரதேசங்களில் இருந்ததாகவும் இங்கு உள்ள எல்லோரும். தானும் எல்லாவற்றையும் ஆதரித்ததாகவும் அவை எல்லாம் சிறிலங்கா அரசின் அடக்குமுறைக்கு எதிரானவை எனவும் அதே போல் பெண்ணிலைவாதம் சம்பந்தமான கருத்துக்கள் எல்லாம் ஆணாதிக்கத்திற்கு எதிரானது எனவும் அவை எல்லாவற்றையும் ஆதரிப்பதாகவும் கூறினார். ஒரு கருத்து சம்பந்தமான தன்னுடைய நிலைப்பாடு என்னவென்று கூறாமல் மேலும் பெண்ணிலைவாதியான ராஜினி பெண்ணிலைவாதம் சம்பந்தமாக எந்தக்கருத்துக்களை கொண்டிருந்தார் என்று கடைசிமட்டும் சொல்லமறுத்த காரணம். . இங்குள்ள பெண்ணிலைவாதிகள் சிலரை காப்பாற்றும் முயற்சிபோல தென்பட்டது. அது மட்டுமல்ல சேரன் தன்னுடைய கருத்தை கூட்டத்தில் உள்ள அனைவருடைய ஒட்டுமொத்தமான கருத்தாக கூறினார்.

இதற்குப்பின் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டது. ஒரு இளைஞர் (பெயர் தெரியாது) எமது சமூகத்தில் பெண்களை அடக்குவதில் பெண்களிற்கும் பங்குண்டு எனக்கூறியபோது அதை பகிடியாக்க சிலர் முற்பட்ட வேளை இன்னொரு இளைஞர் இப்பகிடியாக்கும் நடைமுறைக்கு எதிரான மற்றைய இளைஞரின் கருத்துக்கு ஆதரவாகவும் சில கருத்துக்களை கூறினார். அடுத்து ராஜ்மோகன் சிவகுருநாதனை பார்த்து ஆண்கள் சன்னியாசம் போவது பற்றியும் அது தொடர்பான சிவகுருநாதனின் கருத்துக்களையும் கேட்டார். அடக்குமுறைக்கு எதிராக போராடாமல் சமூகத்திற்கு பயன் அற்ற சன்னியாசிகளையும் (அது ஆண். பெண் என்ற பிரச்சனையில்லை) ஆண் ஆதிக்கத்திற்கு எதிராக போராடி குடும்ப உறவுகளை விட்டு வெளியேறிய பின்பு தமது வாழ்க்கைக்கான போராட்டத்தைதொடரும் பெண்களையும் ஒப்பிட முயற்சித்தது பிழையானதாகும். சமூக சேவையாளராக தொழில்புரியும் கதா குமாரசாமி தனது கருத்துக்களை கூறியவுடன் வெளியேறிக்கொண்டே தனக்கு நேரமில்லை என்பதால் வெளியேறுவதாக கூறியது வருந்தத்தக்கது. அடுத்த கூட்டங்களிலாவது தனது கருத்தை கடைசி நேரம்வரை வைத்திருக்காமல் முதலில் கூறினால் கருத்துப்பரிமாற்றங்களை செய்யக்கூடியதாக இருக்கும்.

அடுத்ததாக சாமினிபீரிஸ் கேட்ட கேள்வியான ராஜினி திராணகம போன்ற பெண்ணிலை வாதிகளை பற்றிய கூட்டத்தில் ஏன் பெண்பேச்சாளர்கள் இல்லை எனவும் பல தமிழ் பெண்ணிலைவாதிகள் இங்கிருந்தும் அவர்களை ஏன் அழைக்கவில்லை? என்று கேட்டார். இதற்கு தமிழர் வகைதுறைவள நிலைய இணைப்பாளர் கோணேஸ் பதிலளித்தார். ராஜினி தொடர்பாக பேசுவதற்கு அவருடைய கருத்துக்களை. வேலைகளை புரிந்து கொண்டவர்களாகவோ அல்லது அவருடன் வேலை செய்திருந்தவராகவோ யாராவது பெண்கள் பேசவிருப்பப்பட்டு இருந்தும் பேச அழைக்காமல் விட்டிருந்தால் அது பிழையான விடயமாகும் என்று தெரிவித்தார். ஏன் ஆண்பேச்சாளர்கள் மட்டும் அழைக்கப்பட்டிருந்தனர். அல்லது பேச்சாளர். குறிப்பிடும் விடையங்களில் பரிச்சயம் உள்ளவராக. புது தகவல்களை கொடுக்கக்கூடியவர். என்பதைப் பொறுத்து மட்டும்தான் பேச்சாளர்களை அழைத்தார்கள் என்ற முடிவை தமிழர் வகைதுறைவள நிலையத்தின் பெண் உறுப்பினரே பதிலளித்திருக்கலாம். ஏனெனில் சாமினி குறிப்பிட்ட நபர்களில் தமிழர் வகைதுறைவள நிலையத்தின் பெண் உறுப்பினர் இருந்தும் மௌனமாக இருந்தது ஏன் என்று தெரியவில்லை.

இரண்டாவதாக நிலையம் சம்பந்தமான எனது கருத்து நிலையத்தின் தேவைகளையும். வேலைமுறைகளையும் நோக்கியதாகவே உள்ளது. தேடல். தேடகம். கலைவிழா என்பனவற்றை தமது சுயமான வேலைமுறைகளாக கொண்ட இவ்வமைப்பு கடந்த சில மாதங்களாக மற்றவர்கள் எடுத்த வேலைகளிற்கு பின்னால் சென்று




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல்லாபம் தேட முயற்சிப்பது விமர்சிக்கப்பட வேண்டியதாகும். உதாரணமாக முஸ்லீம் மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு விரட்டியடிக்கப் பட்ட 3வது ஆண்டை நினைவுகூர்ந்து கூட்டம் இலங்கையில் நடாத்தப்பட்டவுடனே ஒரு கூட்டத்தினை வேறு அமைப்புகளுடன் சேர்ந்து செய்தார்கள். நல்ல விடயம். ராஜினி திரணகம சம்பந்தமான கூட்டம் ஒன்று கொழும்பில் நடத்தப்பட்டவே இங்கேயும் அதை பின்பற்றி ஒழுங்கு செய்தது நல்ல விடயம். ராஜினி கொல்லப்பட்டு 4 வருடங்களின் பின்புதானா உங்களால் ஒரு நினைவுக் கூட்டத்தினை ஒழுங்கு செய்யமுடிந்தது. தேடலையும், தேடகத்தினையும், கலை விழாக்களையும் சுயமாக நடத்தும் திறமையுள்ளவர்கள் இந்த நினைவுக்கூட்டத்தினை நடத்துவதற்கு 4 வருடங்கள் எடுத்திருக்க தேவையில்லை. இலங்கையில் நடைபெறும் கூட்டங்களுக்கும், போராட்டங்களிற்கும் தேவையான உதவிகளையும் ஆதரவையும் வழங்குவது வேறு. அங்கு நடைபெறுவதில் இங்கு லாபம் தேட முயற்சிப்பது வேறு. இரண்டிற்குமிடையில் நிறைய வேறுபாடுகள் உண்டு. சுயமான வேலைமுறைகளை வைத்து மக்கள் மீது நம்பிக்கை கொண்டு வேலைசெய்ய முற்படவேண்டும்.

கடைசியாக இங்கிருக்கும் பெண்ணிலை வாதிகளும் பெண்ணிலைவாதமும் பற்றியது. எனது விமர்சனம் தனிப்பட்ட நபர்களை தாக்குவது அல்ல. ஒட்டு மொத்தமாக இங்கு வளர்த்து விடப்பட்டுள்ள இவர்களின் கருத்துக்கள் வேலைமுறைகள் சம்பந்தமானவை. இலங்கையின் யுத்த நிலமைகள் மத்தியிலும், ஆயுத முனைகளின் மத்தியிலும் ஆணாதிக்க சமூகத்திற்கெதிராக, பெண்கள்மீதான வன்முறைகளிற்கெதிராக பெண்ணிலைவாதிகள் போராடியுள்ளனர். ராஜினி போன்றோர் புலிகளால் கொல்லப்பட்டும், செல்வி போன்றோர் புலிகளின் வதைமுகாம்களிலும், பலர் ஆணாதிக்க வாதிகளினால் குடும்பங்களிற்குள்ளேயும் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் உள்ளனர். பெண்களிற்கெதிரான வன்முறைகள் என்பது இங்குள்ளதைவிட இலங்கையில் அதிகம். எனினும் அவர்கள் போராடினார்கள். அவர்களிடமிருந்து நிறைய விடயங்களையும், அனுபவங்களையும் நாம் பகிர்ந்து கொள்வது இங்குள்ள எமது சமூகத்தின் மத்தியில் வேலை செய்வதற்கு இலகுவாகயிருக்கும். மேற்கத்தைய நாடுகளின் சீரழிந்த கலாச்சாரங்களையும் அவர்களின் வாழ்க்கை முறைகளையும் சிலர் பெண்ணிலைவாத கருத்துக்களாக ஏற்றுக்கொண்டு எமது சமூகத்தில் பிரயோகிப்பது அர்த்தமற்றது. எமது சமூகத்தினை பற்றிய கல்வி, எமது சமூகத்தின் தேவைகள், பிரச்சனைகள் என்பவற்றை விளங்கிக் கொள்ளாமல் எமது சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்த முயற்சிப்பது அர்த்தமற்றது. எமது சமூகத்தின் தேவைகளை ஒட்டி வேலைசெய்வதை விட்டு உங்களது தேவைகளை சமூகத்தின் தேவைகளாக மாற்ற வேண்டாம். எம்மை நாமே பெண்ணிலை வாதிகள் என்றுகூறிக் கொள்ளாமல் உண்மையாக எமது சமூகத்தில் வேலைசெய்யவேண்டிய கடமைப்பாடு உள்ளவர்களாக நாம் உள்ளோம்.

வேணு.



## உடைவுகள்

நெருங்கிப் பழகி
பயந்து மீளும்
"கோட்டான்" போலவும்
அழுது வடித்து
அவதி சொல்லும்
"தேவாங்கு" போலவும் இல்லை.
மனிதன் மாறி
சிங்கம் போலவும்
புலியைப் போலவும்
எழுந்து சிலிர்த்து
உணர்வை உடைத்து
மண் தேடி
அடைந்து
மகிழ்ந்து. . .
வீரம் கண்ட
மனிதனாய் மாறி.

உறவு சூழும்
மண்ணில்
வாழ்ந்து
குடும்பம் என்பதாய்
மனது நிறைந்து
வாழும் காலத்தை
அமைத்துள்ளது
மௌனத்தை
உடைப்பாய்
மனிதனே!

இளைய அப்துல்லாஹ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமர் விவாதத்திற்கான பதில்

# கருக்கலைப்பு

கருக்கலைப்பு பற்றிய தேடலில் வெளியான கட்டுரைக்கு சமர் குழுவினரின் பதில் பற்றிய சில விடயங்களை மீண்டும் குறிப்பிட வேண்டியுள்ளது. கருக்கலைப்பு பிரச்சனையானது பல சாராம்சங்களை கொண்டது. நாம் பிரதானமாக முதன்மை படுத்தியது விஞ்ஞான, உயிரியல் விடையங்களைதான். தவிர்க்க முடியாமல் மற்றைய பிரச்சனைகள் போல் இதுவும் சமூக, அரசியல் விடயங்களுடன் இணைந்துள்ளது. அரசியலுடன் ஆராய்வது தனியான விடயம்.

மாக்சிய சாராம்சத்தில் வர்க்க நிலைப்பாட்டின்படி பார்த்தால் ஒரு மனிதன் தன்னை தேசியவாதியாக அடையாளம் காட்டுதல் பிற்போக்கானது. ஆனால் அவன் தனது ஒடுக்கப்படும் தேசியத்திற்காக சுயநிர்ணய உரிமை கோருதல் அவசியமானது. அதேபோல் பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றையும் சமூகம் தனது குழந்தையாக பராமரிக்கும் நிலை வரை தனது உடல் தொடர்பாக முழுமையான தனிமனித சுயநிர்ணய உரிமையை பெண் பெற்றுக்கொள்கிறாள்.

சமர் குழுவினரும் நாமும் ஏற்றுக்கொள்ளும் மார்க்ஸ், ஏங்கல்ஸ் போன்றோரால் முன்வைக்கப்பட்ட இயக்கவியல் பொருள்முதல் வாதத்தின்படி சமூகத்தில் உள்ள, தூக்கிவீசப்பட வேண்டிய கற்பனாவாதத்தின் அடிப்படை கருவிகள், கடவுள், தலைவிதி, ஆன்மா அல்லது உயிர் என்பனவாகும்.

நாம் முதலில் கூறியபடி தாய்க்கா அல்லது குழந்தைக்கா உயிர் உண்டு என்று விவாதிக்கவில்லை. ஏனெனில் 'உயிர்' என்ற ஒன்றே இல்லாத ஒரு பொருள். (கடவுளைப்போன்றது) இதனை சமர் நண்பர்கள் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் சமர் குழுவினர் " உயிர் என்பது உண்டா எனில்? ஆம்! " இப்படி

கூறுகின்றார்கள். எனவே அடிப்படையில் பொருள்முதல் வாதத்தை நிராகரிக்கிறார்கள்.

மற்றும் ஓரணுவுயிர், உயிரணு என்கின்ற சொற்பதங்களையும் பாவித்திருக்கிறார்கள். இவர்கள் கருதுவது எதுவென்று புரியவில்லை. அதாவது எல்லா விலங்குகளும், தாவரங்களும் கலங்களால் ஆனவை. கலங்கள் கருவை தம்மகத்தே கொண்டவை. கலங்களின் கருவை கருதுகிறார்களா? அல்லது சூல் முட்டை, விந்து ஆகியவற்றினை கருதுகிறார்களா? ஒரு கல விலங்குகளை 'ஓரணுவுயிர்' என்கிறார்கள். ஒவ்வொன்றும் தனியான பதங்கள். சொற்பதங்கள் கலக்கப்பட்டுள்ளன.

இவர்களது பதிலில் அவசியமற்றவற்றிற்கு அடிக்கோடிட்டு காட்டிவிட்டு அவர்கள் கூறியவற்றில் உள்ள முக்கியமானவற்றிற்கு

மாக்சிய சாராம்சத்தில் வர்க்க நிலைப்பாட்டின்படி பார்த்தால் ஒரு மனிதன் தன்னை தேசியவாதியாக அடையாளம் காட்டுதல் பிற்போக்கானது. ஆனால் அவன் தனது ஒடுக்கப்படும் தேசியத்திற்காக சுயநிர்ணய உரிமை கோருதல் அவசியமானது. அதேபோல் பிறக்கும் குழந்தை ஒவ்வொன்றையும் சமூகம் தனது குழந்தையாக பராமரிக்கும் நிலை வரை தனது உடல் தொடர்பாக முழுமையான தனிமனித சுயநிர்ணய உரிமையை பெண் பெற்றுக்கொள்கிறாள்.

அடிக்கோடிட தவறிவிட்டனர். அதாவது **"உயிர் என்பது பருப்பொருளின் இயக்க வடிவங்களில் ஒன்றாகும்"** என்பதே. இதுவே மூலமான உண்மையாகும். (எனவே இவர்களது பதில் கட்டுரை தனக்குள்ளே சுயகருத்து முரண்பாடு கொண்டது) ஆனால் சராசரி வார்த்தை பிரயோகத்தில் உயிரானது " **தாவர, விலங்கு உடல்களை இயக்கும் ஒரு பொருள்**" என்றே கருதப்படுகிறது. இது பிழையானது. உண்மை என்னவெனில் **"இயங்கும் தாவர, விலங்கு உடல்களை உயிருள்ளவை( இந்த சொற் பிரயோகம் இயக்கத்தை மாத்திரம் குறிக்கிறது) என அழைக்கலாம்."** இரண்டிற்கும் நூறு வீத தலைகீழான அர்த்தங்கள்.

இவர்கள் பரிணாமம் பற்றி கூறியதில் எனக்கு எந்தவித முரண்பாடும் கிடையாது. ஒரு கர்ப்பம் தோன்றிய காலத்திலோ, அல்லது அதற்கு முன்பிருந்தோ வயோதிப மனிதராகி மரணிக்கும் வரையில் எக்கட்டத்திலும் ஆன்மா சேருவதுமில்லை, விலகுவதுமில்லை. ஆனால் ஒரு மனித விலங்கினது இயக்கத்தை பலவந்தமாக நிறுத்தும் நிகழ்வு யாராலும், எப்பொழுது செய்யமுடியாது. செய்வதற்கு உரிமையில்லை என்பதை தீர்மானிப்பது, அம் மனித விலங்கானது தாயின் வயிற்றை விட்டு சமூகத்துடனும், புற உலகுடனும் தொடர்புபட்ட பின்னர்தான்.

சமர் குழுவினரின் ஆதாரத் தரவுகள் அனேகமானவை உண்மையில் எனது கருத்துக்கு ஆதாரமானவை. உதாரணமாகஒன்று " பருப்பொருளானது வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில இரசாயன நிகழ்ச்சிப்போக்குகள் மேலும் சிக்கலுற்றதால் பூமியின் உயிர் வாழ்க்கை தோன்றியது. இது பருப்பொருளின் சிக்கலான இயக்க வடிவங்கள் எளிமையான இயக்கவடிவங்களின் வெறும்கூட்டுச் சேர்க்கை அல்ல. எந்த ஒரு இரசாயன எதிர் வினையும் தம்முள் மின்காந்த நிகழ்ச்சிப் போக்குகளையும், இதர பௌதீக நிகழ்ச்சிப்போக்குகளையும் கொண்டிருக்கின்றது."

இக்கூற்றுக்கள் மீண்டும் வலியுறுத்துகின்றன உயிர் வாழ்க்கையில் (இயக்கம்) புதிதாக எந்த ஆன்மா வடிவத்தையும் உள்ளொடுக்கவில்லை என்பதை. ஆகவே பொருட்களும், இயக்கமும் ஆதியும் அந்தமும் இல்லாதவை. அமைப்பும், செயற்பாடுகளும் மட்டும் காலத்துக்கு காலம் மாறுபடுகின்றன.

மேலும் சில சுய முரண்பாடுகள் கொண்ட கூற்றுக்களை பார்ப்போம்.

—"ஒரு கரு உருவாக முன்பு ஆண்விந்தும், பெண்முட்டையும் ஒரு உயிர்தான். ஆனால் அது தனித்தனியாக உள்ளவரை அவை குழந்தையின் உயிரல்ல, இரண்டும் சேரும்போது மட்டுமே அது குழந்தையின் உயிராக மாறுகிறது."

—"உயிர் என்பது கருக்கட்டலின் பின் உட்புகுவதில்லை. உயிர்க் கருவிலுள்ள உயிர் அதுவாக உருவாகின்றது."

எங்கிருந்து? எப்படி? எனக்கு விளங்கவில்லை!பிறக்கும் குழந்தை தாயின் உடலைவிட்டு

வெளியேறல் என்னும் நிகழ்வும், குழந்தையின் சமூகத்தொடர்பு என்பன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவுடமை சமூக அமைப்பினை ஏற்கும் நிலைப்பாட்டின் அடிப்படையில் உருவாகியது. தனியுடமை சமூக அமைப்பு குழந்தையை தனிமனிதருடைய சொத்தாக கருதும். இப்போது தனியுடமை சமூகமாக இருந்தாலும் பொதுவுடமை சமூகத்தின் நியாய அடிப்படையை கொண்டே குழந்தை பிறந்த பின்னர் அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால் குழந்தை தாயின் வயிற்றில் உள்ளபோது ஏற்படும் பிரச்சனைகளிற்கு தனியுடமை சமூகத்தின் தாக்கங்கள் தாயினைத்தான் தாக்குகின்றது. தாயே அதற்கு முகம் கொடுப்பவளாகிறாள். அல்லாமல் இவர்கள் குறிப்பிட்டது போல் தாயின் வயிற்றிற்குள் குழந்தைக்கு இசை செலுத்துவது தொடர்பான விடயமல்ல இது. மற்றும் நான் இவர்கள் குறிப்பிட்டபடி இன்றைய சமூக அமைப்பிற்கு வக்காலத்து வாங்கவரவில்லை. மாறாக நடைமுறை யதார்த்தத்தை கற்பனைத்தனமாக பார்க்கமுடியாது. சமூக மாற்றம்தான் பிரதான பிரச்சனைகளிற்கு தீர்வு. பெண்ணடிமை. தேசிய இனப்பிரச்சனை போன்றவை இவற்றில் பக்கக்கிளைகளாகும். அது தொழிலாளர் வர்க்கம் ஆட்சியை கைப்பற்றுதலிலே உள்ளது. பெண்விடுதலையால் மட்டும் சமூக அமைப்பு மாறிவிடாது. தனிச்சொத்தின் பிரதான சாப்பு மையங்களான குடும்பம். அரசு என்பவற்றில் மூலதனத்தின் ஆதிக்கம் இல்லாமல் போக வேண்டும்.

உதாரணமாக முதலாளித்துவ நாடொன்றில் சுரண்டப்படும் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்து தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளலாம். எந்த அளவில்? முதலாளித்துவ சட்டதிட்ட வரையறைக்குள் பெறக்கூடிய உரிமைகளை மட்டும்தான். மூலதனத்தையும். முதலாளித்துவத்தையும் தூக்கியெறிவதற்கு தொழிற்சங்க வரையறைக்குள் எதுவும் செய்யமுடியாது. அதற்கு தொழிலாளர்கள் புரட்சிகர ஸ்தாபனமயப்பட்டல் வேண்டும். பெண்கள் பிரச்சனையும் அவ்வாறே! தனிப்பட்ட பாதிக்கப்பட்ட பெண் எழுந்து தீச்சுவாலையாக மாறி சமூகத்தை எரிப்பது என்பது சினிமாப்படத்திற்குத்தான் சரி. நான் இவர்களின் உணர்வுகளை கொச்சை படுத்தவில்லை. நடைமுறையும் நாம் ஆசைப்படுவதும் இரு வேறு கோடுகள் இரண்டையும் இணைப்பது என்பது மிகவும் கவனமான கையாள்கையாகும். இது தொடர்ச்சியானதும். கடினமானதுமாகும்.

— சுவிம் —

## துரோகியென்றா எனை அழைத்தீர்



இன்று நீ
கட்டிடும்
இரவல் செய்தியில்
இரங்கல் தேடுகிறீர்

அகிலத்து
வீதியெங்கும்
சொல்லாத சேதிபல
சொல்லியே வருகின்ற
தூண்டில் கவடுகளை
தூக்கியே பிடிக்கின்றீர்!
சொல்லாத சேதி சில
சொல்லியதும்
பொங்கியே எழுகிறீர்!
நாங்க ளென்ன
உங்களின்
வேண்டாப் பொடியன்களா?

துரோகியென
எனை எழுதிட
எப்படித்தான் உங்கள்
எழுதுகோல்கள்
சம்மதம் கொடுத்தனவோ. . ?

உங்கள் மனச்சாட்சிகளென்ன
எம் மண்ணின்
விடுதலைப் போராளிகளா. . ?
வினா எழுப்பாது
மௌனமாக
செயற்படுகின்றனவே!

அன்று
நீ கட்டிய ஒன்றால்
கவாலையில்
கனபரிமாணம் காண
வினா தொடுத்தீர்!

மாத்தையாக்களின்
மாய் மாலங்களை
மை போட்டுப் பார்க்கிறீர்
அந்த மை வெளிச்சத்தில்
சேந்தன்களும்
செல்விகளும்
கண்படவில்லையா
ஓ உங்கள்
பார்வையில்
அவையெல்லாம் தெரியாதோ?

உங்கள்
புதிய புறநானூற்று
அகராதியில்
துரோகியின் எதிர்ப்பதம்
பச்சோந்தித்தனமா ?

— வாசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சினிமா விமர்சனம் — Schindler's List

இரண்டாவது உலகப்போர் நடந்து முடிந்து ஏறத்தாழ 50 வருடங்களாகி விட்டன. இப்போரின் விளைவாக இருநாடுகளாக மாறிய ஜேர்மனி மீண்டும் கிழக்கும், மேற்கும் இணைந்த ஒரு நாடாக மாறிவிட்டது. ஹிட்லரின் ஆதிக்கம் வலுப்பெற்று உலகம் முழுமையையும் தாங்கள் ஆளவேண்டும் என்ற எண்ணம் கொண்டு உலகையே சின்னாபின்னமாக்கிய நாசிகள் மீண்டும் ஜேர்மனியில் வலுப்பெறத் தொடங்கிவிட்டார்கள்.

ஜேர்மன் நாசிகளால் ஏறத்தாழ அழித்தொழிக்கப்பட்ட யூதர்கள் இன்று உலகின் மற்றுமொரு சக்தியாக மாறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் "Thomas Keneally"ன் நாவலை மையமாகக் கொண்டு வெளிவந்திருக்கும் படம் "Schindler's List" ஆகும். கறுப்பு வெள்ளை படமான இது சுமார் மூன்று மணிநேரம் கொண்ட நீளமான படம். நாசிகளால் வெளியேற்றப்படும் யூதர்கள் மிகவும் கொடூரமான முறையில் கொல்லப்படுகிறார்கள். துன்புறுத்தப்படுகிறார்கள். இந்த நேரத்தில் "Oskar Schindler" எனும் நாசி தான் ஆரம்பிக்கவுள்ள தொழிற்சாலையில் சுமார் 1000 இற்கு மேற்பட்ட யூதர்களுக்கு வேலை வழங்குகிறார். இத்தொழிற்சாலையில் போருக்கு தேவையான பொருட்கள் தயாராகின்றன. இவர்கள் அனைவரையும் நாசி வீரர்களிடமிருந்து காப்பாற்றுகின்றார். இவரால் காப்பாற்றப்பட்ட யூதர்கள் பலர் இன்றும் வாழ்ந்து வருகிறார்கள்.

"Oskar Schindler" ஆக "Liam Nesson" நடித்துள்ளார். இவரது தொழிற்சாலையில் வேலைபார்க்கும் தொழிற்சாலை முகாமையாளராக "காந்தி" படத்தில் காந்தியாக நடித்த "Ben Kingsley" ஓர் யூதராக நடித்துள்ளார். நாசி முகாம் கொமாண்டராக "Ralph Fienness" நடித்துள்ளார். இப்படத்தில் சிறந்த அம்சங்களில் ஒன்று நடிப்பு ஆகும். இம்மூவரும் மிகச்சிறப்பாக நடித்துள்ளனர்.

இப்படம் கறுப்பு வெள்ளையில் எடுக்கப் பட்டமையே நிகழ்வுகளின் கொடூரத்தை காட்டுவதற்கே. யூதர்கள் தமது வதிவிடங்களை விட்டு வெளியேறி வீதிகளில் நடந்து செல்கிறார்கள். யூதர்கள் புகையிரத வண்டியில் ஏற்றப்படும் பொழுது அவர்கள் கொண்டு சென்ற அவர்களது பைகளை மிகவும் தெளிவாக பெயரிட்டு வைக்குமாறு கேட்கப்படுகிறார்கள். தமது பொருட்கள் தம்மிடம் தாம் இறங்குமிடத்தில் வந்து சேரும் என்ற நம்பிக்கையுடன் மிகவும் தெளிவாக பெயரிட்டு வைக்கிறார்கள். ஆனால் நடந்ததோ பொருட்கள் அனைத்தும் கொள்ளையிடப்படுகிறது. "Steven Spielberg" இயக்கியுள்ள இப்படத்தில் வரும் காட்சிகள் பல எமது மண்ணை நினைவூட்டியது. ஓர் கட்டத்தில் யூதர்களை ஆண்கள் பெண்கள், சிறுவர்கள் என்று பிரிந்து நிற்குமாறு கோருகிறார்கள். இலங்கை இராணுவமும் இவ்வாறு சுற்றிவளைத்து சோதனையிடும்போது கேட்பார்கள். "Oskar Schindler" ஓர் நாசி வியாபாரி இவரது தொழிற்சாலையில் வேலை பார்க்கும் யூதர்கள் மிகவும் நன்றியுணர்வுடன் வேலை செய்கிறார்கள். அத்துடன் இவர்களுக்கு உணவு வதிவிடம் என்பன அளிக்கப்படுகின்றன. சுற்றிவரவுள்ள பல யூத அகதிமுகாம்களில் உள்ளோர் இவரை தெய்வமாக கருதுகிறார்கள். இவரது தொழிற்சாலையில் வேலை செய்யவிரும்புகிறார்கள். அதே நேரம் ஏனைய முகாம்களில் பலர் சித்திரவதைக்குள்ளாகின்றனர். பலர் சுட்டு கொல்லப்படுகிறார்கள். படத்தில் சித்தரிக்கப்படும் மற்றுமொரு அம்சம் இவர்கள் அனைவரும் தேர்ந்த "Skilled" தொழிலாளர்கள் என்பது. அகதி முகாம்களில் உள்ள யூதர்களில் எதிர்ப்பு தெரிவிப்போர் பலர் உடன் சுட்டுக்கொல்லப்படுகின்றனர். ஜேர்மன் தோல்வியுற்றதுடன் "Schindler" அனைவரின் முன் தோன்றி "இன்று இரவு 12 மணியுடன் போர் முடிகிறது. நான் ஓர் நாசி. நான் ஓர் குற்றவாளி. நாளை நான் நேசப்படைகளால் கைது செய்யப்படலாம். நீங்கள் அனைவரும் எனக்கு நன்றி கூறவேண்டும். ஆனால் நீங்கள் உங்களுக்கு நன்றி கூறுங்கள். உங்கள் பிதா (Ben Kingsly)க்கு நன்றி கூறுங்கள்" எனக்கூறி நாசிப்போர்வீரர்களை பார்த்து "உங்களுக்கு இட்ட கட்டளையை நிறைவேற்ற கடைசி சந்தர்ப்பம் இது சுட்டுக் கொல்லுங்கள் இவர்களை" என தன்னால் காப்பாற்றப்பட்ட 1000 யூதர்களை சுட்டிக்காட்டுகிறார். ஜேர்மனிய வீரர்கள் அவ்விடத்தை அகலுகின்றார்கள்.

மிகுதியாகவுள்ள யூதர்கள் அனைவரும் அருகில் உள்ள நகரமொன்றை நோக்கி நகருகின்றார்கள். படம் கறுப்பு வெள்ளையிலிருந்து நிறத்திற்கு மாறுகின்றது. இது இவர்களது வளர்ச்சியை காட்டுகிறது.

இன்று உலகில் பல இன, மொழி ரீதியான எழுச்சிகள் ஏற்பட்டு வருகின்றன. இதே யூதர்கள் இன்று பாலஸ்தீனியர்களை வெளியேற்றிவிட்டு இஸ்ரேலை அமைக்கின்றனர். புதிய ஜேர்மனியில் நாசிகள் மெல்ல மெல்ல முளை விடுகின்றனர். வட அமெரிக்கா பொருளாதார ரீதியாக ஓர் நாடாக மாறுகிறது. ஐரோப்பாவும் இதே நிலைக்கு தள்ளப்படுகிறது.

இவ்வாறான பல ஒன்றுக்கொன்று தொடர்பான நிகழ்வுகள் நடக்கும் இக்காலகட்டத்தில் இப்படம் பல பழைய விடயங்களை நினைவு படுத்துகின்றது. கலை மிகவும் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப்போர் காலத்திய அகதிமுகாம்கள். தொழில்நுட்ப வசதி குறைந்த தொழிற்சாலைகள் மிகவும் இயற்கையாக சித்தரிக்கப்பட்டுள்ளன. மூன்று மணி நேரம் படம் தொய்வின்றி நேர்த்தியாக நகர்கின்றது. பல இடங்களில் குறியீடால் பல விடயங்கள் விளக்கப்படுகின்றன. ஒளிப்பதிவும் சிறப்பாகவுள்ளது. 1993ம் ஆண்டு வசூலில் சாதனை புரிந்த டைனோசர்கள் பற்றிய "Jurassic Park

தொடர்ச்சி 37ம் பக்கத்தில்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



www.tamilarangam.net

